Registered as a News Paper

பொழிவு - 16
குவிப்பு -03
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
மார்ச் 2013
(ISSN 1800-2641)

# மன்னா





MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை මන්නා

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 36 / News / 2013"

# பாஸ்கா விழாச் சிறப்பிதழ்

சாவு முற்றிலும் ஒழிந்தது! வெற்றி கிடைத்தது! (1கொரி. 15: 54)





சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு (இயேசு) கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்" (பிலிப்பியர் 3:8)

## திருத்தந்தை விடைபெற்றார்

### இலட்சக்கணக்கான மக்களின் கண்ணீர் மத்தியில் மிகவும் உணர்வுபூர்வமான பிரியாவிடை



திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் கடந்த 28.2.2013 அன்று தனது உடல் நிலையைக் கருத்தில்கொண்டு திருத்தந்தைக்குரிய பணியில் இருந்து விலகி விடைபெற்றுச் சென்றார். வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில் கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்க திருத்தந்தைக்கு விடைகொடுத்தனர்.

85 வயதான திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் கடந்த 28.2.2013 உரோமுக்கு அருகில் இருக்கும் பாப்பரசரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான காஸ்டா காண்ட்லொபொலிலிருந்து விடைபெற்றுச் சென்றார். எனினும் ஓய்வுபெறும் முன்னர் பாப்பரசர் அடுத்த பாப்பரசர் தேர்வு செய்யப்படவிருக்கும் கர்தினால்களை சந்தித்து உரையாற்றினார். இந்நிகழ்வில் உலகெங்கிலுமுள்ள சுமார் 100 கர்தினால்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வில் பாப்பரசர் அடுத்த பாப்பரசருக்கு நிபந்தனையின்றி பணிந்து மரியாதை செலுத்துவதாக கர்தினால்களிடம் தெரிவித்தார். பாப்பரசருடனான சந்திப்பில் பங்கேற்ற மேற்படி கர்தினால்களில் இருந்தே புதிய பாப்பரசர் தேர்வுசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## வாழ்க்கைப் படகில் எப்போதும் கடவுள் கூடவே வருகின்றார்

### இறுதிப் பிரியாவிடையின்போது திருத்தந்தை

"வாழ்க்கை என்னும் படகில் நாம் பயணம் செய்கிறோம். அந்தப் படகில் எப்போதும் கடவுள் கூடவே வருகிறார் என்பதை நான் அறிவேன்." என பதவியிலிருந்து விலகி தாம் விடைபெறும்போது திருத்தந்தை பதினாறாவது ஆசீர்வாதப்பர் தம்மை வழியனுப்ப வந்த இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "திருச்சபை என்ற படகு எனக்கு மட்டுமோ அல்லது உங்களுக்கு மட்டுமோ சொந்தமானது அல்ல. இது கடவுளுடையது. இதை அவர் மூழ்கவிடமாட்டார். இந்தத் திருச்சபையுடனான எனது தொடர்பு விட்டுப்போகாது" என்றார்.

திருத்தந்தை 16ஆவது ஆசீர்வாதப்பர் தமது பதவியை அண்மையில் இராஜிநாமா செய்தார். அவரது இராஜிநாமாவை வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர்.

## ஐ. நா. மனித உரிமைகள் அவையின் பரிந்துரைகளை இலங்கை அரசு தீவிரமாகச்செயற்படுத்த வேண்டும்

### மன்னார் ஆயர் தலைமையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம்

இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் இராணுவ ஆக்கிரமிப்பு குறைக்கப்பட வேண்டும் என்றும், ஐ.நா மனித உரிமைகள் அவையின் பரிந்துரைகளை இலங்கை அரசு தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் 133 அருள்பணியாளர்கள் ஐ.நா மனித உரிமைகள் அவைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். பெப்ரவரி 25 முதல் மார்ச் 22 வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் அவையின் 22வது அமர்வின்போது இலங்கையில் தமிழ் மக்கள் சந்தித்துவரும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் விருப்பத்துடன் இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## திருத்தந்தையே நாங்கள் உங்களை இழக்கிறோம்!




வத்திக்கான் நகருக்கு புனிதப் பயணம் வந்திருந்த இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் திருத்தந்தையின் விடையளிப்பு வைபவத்தில் பங்கேற்று அவரை அன்புடன் வழியனுப்பி வைத்தனர். அவர் வத்திக்கான் பிளாசாவை திறந்த வாகனத்தில் சுற்றி வந்தபோது, அங்கிருந்த குழந்தைகளுக்கு முத்தம் கொடுப்பதற்காக தமது வாகனத்தை நிறுத்தினார். குழந்தைகளுக்கு முத்தம் தந்து வாழ்த்தினார்.

பெரியவர்கள் பலர் பதாகைகளை பிடித்திருந்தனர். தவிர, பிரமாண்டமான பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. அதில், "பெனடிக்ட் நாங்கள் உங்களை இழக்கிறோம்", "இந்த நகரத்தின் இதயம் போப் ஆண்டவர்" ஆகிய வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. நகரம் முழுவதும் மஞ்சள், வெள்ளை, நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

## மன்னார் மறைமாவட்டத்திற்கு இரண்டு புதிய குருக்கள்



பீ. லோறன்ஸ் லியோன்



ற. ரெறன்ஸ் கனிஸ்ரன் குலாஸ்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் பீ. லோறன்ஸ் லியோன் (முத்தரிப்புத்துறை) மற்றும் ற. ரெறன்ஸ் கனிஸ்ரன் குலாஸ் (வங்காலை) ஆகியோர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

பணிக்களத்தில் காலடி பதிக்கும் இப்புதிய குருக்களை மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்தி வரவேற்று, இறையாசி வேண்டி நிற்கின்றது. புதிய குருக்களின் விரிவான வாழ்க்கைக் குறிப்புகளை 8ஆம் பக்கத்தில் காணலாம்.

## பெயர் கொண்ட புனிதரின் தினத்தில் ஆயரை வாழ்த்துகிறோம்!



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் புனித சூசையப்பரின் திருநாளான மார்ச் மாதம் 19ஆம் திகதி தனது பெயர்கொண்ட புனிதரின் விழாவைக் (Feast day) கொண்டாடுகின்றார்.

இறைவனின் நல்லாசியும் புனித சூசையப்பரின் பரிந்துரையும் இந்நன்நாளில் ஆயர் அவர்களுக்கு நிறைவாகக் கிடைக்க மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி மகிழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## மனப்பொழிவு

பதிப்பாசிரியர் பகர்வது

### வத்திக்கான் வரலாற்றில் முத்திரை பதித்த திருத்தந்தை

*உலகில் அதிக மக்கள் பின்பற்றும் மதம் கிறிஸ்தவம். கிறிஸ்தவக் கலைக்களஞ்சியத்தின்படி உலகம் முழுவதும் சுமார் 33,830 கிறிஸ்தவப் பிரிவுகள் உள்ளன. ஆனால் சீர்திருத்தத்திற்கு பின்னர் கிறிஸ்தவம் பிரதான மூன்று பிரிவுகளாக பிரிந்ததாகக் கருதப்படுகின்றது. இதிலே உரோமன் கத்தோலிக்க திருச்சபையானது கிறிஸ்தவத்தின் முதன்மையான, முக்கியமான, மிகப்பெரிய உட்பிரிவாகும்.*

*இந்தக் கத்தோலிக்க திருச்சபையின் உயர் தலைவராக இருப்பவர் திருத்தந்தை. இவர் இயேசுவால் நியமிக்கப்பட்ட முதல் திருத்தந்தையான புனித பேதுருவின் வாரிசாகக் கருதப்படுகின்றார்.*

*120 மில்லியன் மக்களைக் கொண்ட கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக விளங்கிய திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பரின் பதவி விலகல் அறிவிப்பானது உலகத்தை ஒரு தடவை உலுப்பிவிட்ட ஒரு செய்திதான். அதிலும் குறிப்பாக பாரம்பரியங்களை பக்குவமாக பின்பற்ற விழையும் கத்தோலிக்க திருச்சபையினருக்கு இச்செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியதில் ஆச்சரியமில்லை.*

*பொதுவாக திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்படுபவர் இறக்கும்வரை பதவியில் இருக்கும் வழக்கமே பல நூற்றாண்டுகளாக வழக்கத்தில் இருந்துவந்தது. இற்றைக்கு 700 வருடங்களுக்குப் பிறகு அதாவது 1415ஆம் ஆண்டு திருத்தந்தை 7ஆம் கிரகரிக்குப் பின்னர் தனது பதவிக் காலம் நிறைவடைய முன்னர் விலகிய முதலாவது திருத்தந்தையாக 16ஆம் ஆசீர்வாதப்பர் கருதப்படுகின்றார்.*

*85 வயது நிரம்பிய திருத்தந்தை தனது முதுமை நிலைலையக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தார். அவர் தனது அதிகாரபூர்வ இல்லத்தில் இருந்து விடைபெற்றபோது வத்திக்கான் நகருக்குப் புனித பயணம் வந்திருந்த உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் அவரை அன்புடன் வழியனுப்பி வைத்தனர்.*

*திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பரின் வாழ்க்கைப் பின்னணி வித்தியாசமானது, ஏன் சுவாரஸ்யமானதும்கூட. 1927ஆம் ஆண்டு பிறந்த திருந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர், ஜேர்மன் நாட்டில் கிட்லரின் கொடுமையான ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவர். 1943இல் நாஸிப் படைகளில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டார். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முடிவில் அமெரிக்க இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்டார். மீண்டும் குருமடத்தில் சேர்ந்து தனது குருத்துவப் பயிற்சியைத் தொடர்ந்தார். இதற்குமுன் பதவியில் இருந்த எந்தத் திருத்தந்தையும் பெற்றிராத அனுபவங்களை இவர் கொண்டிருந்தார்.*

*2005ஆம் ஆண்டு திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்ட இவர், குறுகிய காலத்தில் மக்கள் மத்தியில் மதிப்பையும், செல்வாக்கையும் பெற்றவர். திருச்சபையில் விசுவாச சத்தியங்களையும், இறையியல் கருத்துக்களையும் ஆணித்தரமாகப் போதித்துவந்தார். சமுதாயத்தில் காணப்படும் அநீதிகளை, ஒழுக்கக்கேடுகளை வெளிப்படையாக எதிர்த்தார். மேற்குலகில் இன்று பெரும் இயக்கமாக உருவெடுத்துள்ள ஓரினப்பால்சேர்க்கை, விபசாரம், இரக்கக்கொலை, குளோணிங் போன்றவற்றிற்கு எதிராக உறுதியாகக் குரல்கொடுத்தார்.*

*“திருத்தந்தையே, வானில் உள்ள விண்மீன்கள் எப்பொழுதும் சுடர்விட்டுக்கொண்டிருக்கும். அதுபோல் உங்கள் பாப்பிறைப் பணிக்காலமும் எம் மத்தியில் எப்பொழுதும் சுடர்விட்டுக்கொண்டிருக்கும்.” என்று கர்தினால்கள் அவைத் தலைவர் சொதோனோ ஆண்டகை குறிப்பிட்டார். வத்திக்கான் வரலாற்றில் முத்திரை பதித்துச்செல்லும் திருத்தந்தையை நாமும் அவ்வாறே வாழ்த்தி விடைகொடுப்போம்.*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,***
***அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்,***
***மன்னா பதிப்பாசிரியர்***

## வாசகர் எண்ணங்கள்

### வாழ்த்துவதற்கு வார்த்தைகள் இல்லை!

அன்புத் தோழனே மன்னா!

நீ சுமந்துவரும் அனைத்து விடயங்களும் அசத்தல்! வாழ்த்துவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. கவிதைப் பகுதியில் ‘அந்த நாள் ஞாபகம்’ ‘எம் உறவுகள்’ ஆகியன என்னை மிகவும் கவர்ந்தன. ஒவ்வொரு மாதமும் பல தோழர்களின் கவிதைகளை நீ பிரசுரிக்கின்றாய். குறுக்கெழுத்துப்போட்டி விடைகளைத் தேடி அனுப்பிவிட்டுத்தான் அடுத்த விடயங்களை நீ ஆராய்கின்றாய். உனக்குக் கோடி நன்றிகள் உரித்தாகட்டும். மென்மேலும் உனது சேவை தொடர வாழ்த்துகிறேன்.

*- இ. யஸ்ரீன், மடு ஆலயம், மடு.*

### உன் வரவு ஆறுதலையும் ஆனந்தத்தையும் தருகிறது!

மின்சாரம் துண்டிக்கப்பட்டு வாழ்கின்ற எமக்கு தொலைக்காட்சியும் கிடைப்பதில்லை. இந்த நேரத்தில் ‘மன்னாவே’ உன் வரவு எங்களுக்கு ஆறுதலையும் ஆனந்தத்தையும் தருகின்றது.

*- தே. ஜீவராணி, மடுக்கரை, நானாட்டான்.*

### மன்னாவே நீ தொடர்ந்தும் வரவேண்டும்!

மாதா மாதம் வந்து இறை மக்களின் மனதைக் கவரும் மன்னாவே! நீ விவிலிய அறிவை வளர்க்க வாய்ப்பளிக்கின்றாய். உன்னைக் காணும்போது என் மனதிற்கு உயிர் பிறக்கின்றது. உன் பணி சிறக்க நல்வாழ்த்துக்கள்! ஆயுள் உள்ளவரை நீ எங்களுக்காகத் தொடர்ந்து வரவேண்டும்.

*- மா. நிறோசா, கன்னாட்டி, அடம்பன்.*

மன்னா வாசகர்களே,
மன்னா பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாகச் செலுத்துவதன் மூலம் மன்னா விநியோகஸ்தர்களுக்கு உங்கள் மேலான ஒத்துழைப்பை வழங்குங்கள்.
- மன்னா நிர்வாகம்

## தாழ்வுபாடு பங்கின் பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த முதல் அருட்சகோதரி



அருட்சகோதரி யூட்மேரி (ரேகா) அவர்கள் தாழ்வுபாடு பங்கின் சந்தியோகு பெரேரா அந்தோனிக்கம் டயஸ் தம்பதிகளின் மகள் ஆவார். இவர் பொறலை பிரான்சிஸ்கன் சபையின் தேவாலயத்தில் கடந்த 12.01.2013 அன்று தனது நித்திய வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொண்டார். இவரை வரவேற்கும் முகமாக கடந்த 19.01.2013 அன்று தாழ்வுபாட்டு பங்குத்தந்தை, பங்கு மக்கள் ஒன்றுகூடி பிரதான சந்தியில் இருந்து பேன்ட் வாத்தியம் முழங்க ஊர்வலமாக ஆலயத்திற்கு அழைத்துவந்தனர். அருட்தந்தை வின்சன் பற்றிக், தாழ்வுபாடு பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜ் ஆகியோரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறிய வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றது. பங்குத் தந்தை அவர்களால் வரவேற்புரை வழங்கப்பட்டது. ஆலய சபையினரால் வாழ்த்துப்பாமாலை வாசிக்கப்பட்டது. இறுதியாக அருட்சகோதரி அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். பங்குத்தந்தையின் ஆசீருடன் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுபெற்றன.

## குறுநாடகப் பிரதி ஆக்கப் போட்டியில் தேசிய மட்டத்தில் 1ம் இடம்

பேசாலையில் உள்ள மன்/ பற்றிமா மகாவித்தியாலய பாடசாலையின் மாணவி செல்வி. அமல செபஸ்டி கோமஸ் (தரம் 13) என்பவர் கடந்த வருடம் (2012) இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் பிரிவு 5இல் (தரம் 12,13) ‘குறுநாடகப் பிரதி ஆக்கம்’ எனும் போட்டியில் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவரைப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள். மன்னாவும் இவரை மனதார வாழ்த்திப் பாராட்டுகின்றது.



## மன்னார் மறைமாவட்டம்


### திருவழிபாட்டு நாட்காட்டி – 2012

### பங்குனி

08 - கோமரசன்குளம் கல்வாரி திருத்தல விழா
15 - ஓலைத்தொடுவாய் கத்தர் கோயில் திருவிழா
19 - தூய சூசையப்பர் திருவிழா - தாழ்வுபாடு காத்தான்குளம், இலுப்பைக்கடவை, மன்னார் ஆயரின் பெயர் கொண்டதினம்.
22 - பரப்புக்கடந்தான் கர்த்தர் கோயில் திருவிழா - கல்வாரி பங்கு பொது ஆராதனை
24 - குருத்தோலை ஞாயிறு - புனித வாரம் ஆரம்பம்
25 - திரு எண்ணை அர்ச்சித்தல் திருப்பலியும், திருச்சடங்கும் மாலை 5.00 மணிக்கு தூய செபஸ்தியார் பேராலயம் மன்னார்.
29 - புனித வெள்ளி, உண்ணா நோன்பும் மாமிசத் தவிர்ப்பும் குருமடங்களுக்கான நிதி சேகரிப்பு (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பப்படும்)

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## அகில இலங்கை ரீதியிலான போட்டியில் வங்காலை மாணவி முதலிடம்



வங்காலைப் பாடசாலை மாணவி கட்டுரைப் போட்டி ஒன்றில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு இடர்முகாமைத்துவ நிலையம் அகில இலங்கை ரீதியில் மும்மொழிகளிலும் நடத்திய கட்டுரைப்போட்டியில் ஆங்கிலப் பிரிவில் தோற்றிய வங்காலை புனித ஆனாள் மகா வித்தியாலயப் பாடசாலை மாணவியே முதலாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

18 வயதுக்குட்பட்ட பிரிவில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவி செல்வி மரியான் புளோரன்ஸ் ஜொய்சி கூஞ்ஞ என்பவரே இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.

சான்றிதழ் மற்றும் பணப்பரிசு என்பனவற்றை இடர் முகாமைத்துவ நிலையத்தின் தலைமைக் காரியாலயத்தில் இருந்து இவர் பெற்றுக்கொண்டார். இவரைப் பாடசாலைச் சமூகம் வாழ்த்துகின்றது. மன்னாவும் இவரை மனதாரப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றது.

### உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுப்பதற்கான முதல் தயாரிப்புக் கூட்டம்

# வத்திக்கானில் கர்தினால்கள் ஒன்றுகூடுகின்றனர்



புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுப்பதற்கான முதல் தயாரிப்புக் கூட்டம் மார்ச் மாதம் 4ஆம் திகதி அன்று காலை 9.30 மணிக்கு வத்திக்கானின் திருத்தந்தை 6ம் பவுல் அரங்கத்திலுள்ள ஆயர்கள் மாமன்ற அறையில் தொடங்கியது. புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதியுடைய 80 வயதுக்குட்பட்ட கர்தினால்கள் மட்டுமின்றி அனைத்துக் கர்தினால்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் கொன்கிளேவ் அவையில் கலந்துகொள்ளவிருக்கும் 115 கர்தினால்களுள் 103 பேர் ஏற்கனவே உரோம் வந்துவிட்டதாகவும் மீதமுள்ளோர் பயணம் செய்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்த கர்தினால்கள் அவைத்தலைவர் கர்தினால் அஞ்சலோ சொதானோ, கொன்கிளேவ் அவையில் கலந்துகொள்ளவிருக்கும் அனைத்துக் கர்தினால்களும் வந்தபின்னரே கொன்கிளேவ் அவைக்கானத் தேதி குறிப்பிடப்படும் என்று அறிவித்தார்.

புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் கொன்கிளேவ் அவை நடைபெறும் சிஸ்டின் சிற்றாலயத்தை மூடுவது, கொன்கிளேவ் அவை கூடும் நாள்களில் வத்திக்கான் புதிய மார்த்தா பயணியர் விடுதியில் தங்கியிருக்கும் கர்தினால்களின் இரகசியப் பகிர்வுகள் யாராலும் ஒட்டுக்கேட்கப்பட முடியாத அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்தல் போன்ற விவகாரங்களும் 4.3.2013 அன்று பொதுக் கூட்டத்தில் பேசப்பட்டதாகவும் திருப்பீடப் பேச்சாளர் அருட்தந்தை லொம்பார்தி கூறினார்.

மேலும் திருத்தந்தையின் தேர்தல் தொடர்பான அனைத்து விவகாரங்களையும் இம்மியும் பிசகாமல் இரகசியம் காப்பேன் என்று கர்தினால்கள் ஒவ்வொருவரும் இந்த முதல் பொதுக்கூட்டத்தின் தொடக்கத்தில் சத்தியப்பிரமாணம் செய்தனர் என்றும் அனைத்துக் கர்தினால்களும் சேர்ந்து முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களுக்குச் செய்தி ஒன்றை அனுப்பவிருப்பதாகவும் அச்செய்தி தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

## மன்னார் மறைக்கோட்ட முதல்வராக

# இராயப்பு அடிகளார் நியமனம்

மன்னார் மறைக்கோட்ட முதல்வராக (The Dean of Mannar Deanary) அருட்திரு. அ. இராயப்பு அடிகளார் மன்னார் ஆயர் அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார். இராயப்பு அடிகளார் தற்போது தோட்டவெளி அ.த.க. பாடசாலையில் உதவி அதிபராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய பணிப்பொறுப்பை ஏற்றுள்ள இராயப்பு



அடிகளாருக்கு செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களை மன்னா தெரிவித்து நிற்கின்றது.

## மன்னார் மறைமாவட்ட

# கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள்



மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு மடுவில் இடம்பெற்ற கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தியானத்தின் இறுதி நாள் (3.3.2013) அன்று இடம்பெற்றது. பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

**தலைவர்:** திரு. எமிலியான் பிள்ளை - பிரதிக் கல்விப் பணிப்பாளர், மடு வலயம்.
**செயலாளர்:** திரு. ஏ. ஆர். எம். ஆர். பிகிறாடோ-மன்/தோட்டவெளி. அ. த. க. பாடசாலை.
**பொருளாளர்:** திரு. ஜி. ஏ. ரமேஷ் - மன்/ அல்மினா ம. வி. தாராபுரம்.
**உப தலைவர்:** திருமதி. கிறிஸ்ரீன் இரெட்ணகுமார் சந்திரேஸ்வர்நாயகம் - வ/ பூந்தோட்டம் ம. வி.
**உப செயலாளர்:** திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் - உதவிக் கல்விப் பணிப்பாளர், மன்னார் வலயம்.

**மறைகோட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள்**

**மன்னார் மறைக்கோட்டம்**
- திருமதி. ரி. எஸ். கிறிஸ்ரின் குருஸ்:- அதிபர் மன் / சென்.மேரிஸ் பெ. வி.
- திரு. ச. செல்டன்:- மன் / அல். மினா. ம. வி. தாராபுரம்
- திரு. ஜி. லூயிஸ் விமலன்:- மன் / புனித. லூசியா ம.வி. பள்ளிமுனை.

**மடு மறைக்கோட்டம்**
- திரு. ச. அமலநாதன், மன் / தம்பனைக்குளம். அ. த. க. பாடசாலை.
- செல்வி. எஸ். சாந்த லூசியா, மன் / தூய யோசவாஸ். ம. வி. விடத்தல்தீவு.
- திருமதி. ஜெனிவி ஜெறாட், மன் / சின்னப்பண்டிவிரிச்சான் அ. த. க. பாடசாலை.

**முருங்கன் மறைக்கோட்டம்**
- திரு. ஏ. ஆர். அமலதாஸ், மன்/ வஞ்சியன்குளம் றோ. க. த. க. பாடசாலை.
- திரு. ரி. இருதயராஜா குருஸ், மன்/ பரிகாரி கண்டல் அ. த. க. பாடசாலை.
- செல்வி. இ. குயின்ரினி, மன்/ முருங்கன் ம.வி

**வவுனியா மறைக்கோட்டம்**

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## அருட்சகோதரர் றஞ்சன் சேவியர்

# மெய்யியல் பரீட்சையில் சாதனை



யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் இறுதி ஆண்டில் கல்விபயின்ற மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் றஞ்சன் சேவியர் மெய்யியல் இறுதிப் பரீட்சையில் Summa Gum Laude என்று அழைக்கப் - படும் அதி உயர் தரத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் பெற்ற சராசரிப் புள்ளி 96.74 ஆகும்.

மெய்யியல்மாணி (B. Ph - Bachelor of Philosophy) எனப்படும் இப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றாலும் இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் உரோமில் உள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்தில் இருந்து அனுப்பப்படும். அதேபோன்று விடைத்தாள்கள் உரோமைக்கு அனுப்பப்பட்டு அங்கேயே இவை திருத்தப்பட்டு புள்ளிகள் இங்கு அனுப்பிவைக்கப்படும் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். மன்னார் மறைமாவட்ட குருத்துவ மாணவர்களின் வரலாற்றில் இவர் ஒருவரே இத்தகைய சாதனையை இதுவரையில் படைத்துள்ளார். இவர் விடத்தல்தீவுப் பங்கைச் சேர்ந்தவர். இவருடைய இந்தக் கல்வித் திறமையை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்திப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றது.

## மடுத்திருப்பதியில் புதிய நற்கருணை ஆலயத்திற்கான

# அடிக்கல் நாட்டு வைபவம்

மடுத்திருப்பதியில் நற்கருணை ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை, மடுப்பரிபாலகர் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை ஆகியோரும் இன்னும் பலரும் அத்திவாரக்கல்லை நாட்டினர். புதிதாக அமைக்கப்படவுள்ள இந்த நற்கருணை ஆலயமானது போர்க்காலச் சூழ்நிலையில் அழிந்துபோன திருஇருதய ஆண்டவர் ஆலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்படவுள்ளது.

இந்த ஆலயக்கட்டுமானச் செலவீனத்தின் ஒரு பகுதியை சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் வழங்கியுள்ளதாக மடுப் பரிபாலகர் தெரிவித்தார்.



குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் அடிக்கல்லை நாட்டுகின்றார்.

## கிறிஸ்தவர்களின் மனதைப் பாதிக்கும் வகையில் உள்ள

# மணிரத்தினத்தின் 'கடல்' படத்தை தடைசெய்ய வேண்டும்

### கிறிஸ்தவ ஜனநாயக கட்சி புகார்

இயக்குனர் மணிரத்தினம் இயக்கியுள்ள 'கடல்' என்ற பெயரைக்கொண்ட படத்தைத் தமிழகத்தில் தடைசெய்ய வேண்டும் என்று கிறிஸ்தவக் கட்சி புகார் அளித்துள்ளது.

இந்தியக் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி நிறுவுனர் டாக்டர் கிறிஸ்துதாஸ் என்ற கிறிஸ்து மூர்த்தி என்பவர் சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் கடந்த 4.2.2013 அன்று புகார் செய்துள்ளார்.

கிறிஸ்தவர்களின் மனதைப் பெரிதும் பாதிக்கும் வகையில் உள்ள மொத்தம் 6 காட்சிகளை கடல் படத்தில் இருந்து நீக்க வேண்டும். மேலும் படத்தை தயாரித்தவர், இயக்கிய மணிரத்னம் ஆகியோர்மீது வழக்குப் பதிவுசெய்து



இயக்குனர் மணிரத்தினம்

அவர்களைக் கைதுசெய்ய வேண்டும். திரைப்படத் தணிக்கைக் குழு அதிகாரி பகிசாமிமீது வழக்குத் தொடரவேண்டும் என அந்தப் புகாரில் கூறப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் உறுதி அளித்துள்ளனர்.

## மாந்தை லூர்து மாதா ஆலய நிர்மாணப்பணிகளுக்கு

# தொல்பொருள் திணைக்களம் அனுமதி

மன்னார் மாந்தை லூர்து மாதா ஆலயத்திற்கான புதிய கட்டிடத்தை ஆலயம் முன்பு இருந்த இடத்திலேயே நிர்மாணிப்பதற்கு தொல்பொருள் அகழ்வாராய்ச்சித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

சுமார் 500 வருடங்கள் பழமை வாய்ந்த மாந்தை லூர்து ஆலயம் கடந்த 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகியது. இந்நிலையில், இந்த ஆலயத்தின் கட்டிட இடிபாடுகள் புதிய ஆலயம் ஒன்றினை அமைப்பதற்காக கனரக இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டன.

மாந்தைப் பகுதியிலுள்ள ஆலயச் சுற்றாடல் தொகுதி தொல்பொருள் அகழ்வாராச்சித் திணைக்களத்திற்கு சொந்தமானதெனவும் அங்கு எவ்வித சுத்திகரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படக்கூடாதெனவும் மன்னார் பொலிஸார் தெரிவித்ததுடன், கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணிகளை உடன் நிறுத்துமாறு அங்கிருந்த ஆலய நிர்வாகத்தினருக்கு கூறியுள்ளனர். இந்தநிலையில் அப்பணிகள் உடன் நிறுத்தப்பட்டன.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுபெறும் திருத்தந்தை இனி எவ்வாறு அழைக்கப்படுவார்?

ஓய்வுபெற்றுச் செல்லும் பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பர் இனி எவ்வாறு அழைக்கப்படுவார் என்ற விபரத்தை வத்திக்கான் வெளியிட்டுள்ளது. 'முன்னாள் திருத்தந்தை' ( Pope Emeritus) என்று அவர் இனி அழைக்கப்படுவார். வழக்கம்போலவே அவர் ஹிஸ் ஹோலினஸ் (His Holiness) என்ற அடைமொழியுடன் அழைக்கப்படுவார்.

பாப்பரசர் அணியும் வெள்ளை அங்கியை ஓய்வுபெற்ற பின்னரும் அவர் தொடர்ந்து அணிவார். ஆனால் தனது தங்க மோதிரத்தை அவர் திரும்ப அளிப்பார். அவர் அமர்ந்திருந்த நாற்காலி வத்திக்கானின் சம்பிரதாயப்படி அழிக்கப்படும்.

கடந்த 600 ஆண்டுகளில் முதல் முறையாக ஒரு பாப்பரசர் தற்போதுதான் இராஜினாமாச் செய்துள்ளார். எனவே கடைப்பிடிக்க வேண்டிய சம்பிரதாயங்கள் குறித்து ஒருவித தெளிவின்மை நிலவுவதால் வத்திக்கான் இது தொடர்பான விளக்கங்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தலைமன்னார் பியர் தேவாலயத்தை மீட்டுத் தருமாறு பாதுகாப்புச் செயலருக்கு கடிதம்

தலைமன்னார் பியர் பகுதியில் அமைந்துள்ள புனித சதா சகாய மாதா ஆலயத்தை மக்களிடம் கையளிக்குமாறு கோரும் கடிதம் ஒன்றை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

தலைமன்னார் பியர் பகுதியில் அமைந்துள்ள புனித சதா சகாயமாதா ஆலயம் பல வருடங்களாக அந்தப்பகுதியில் உள்ள கடற்படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. இதனால் மக்கள் சுதந்திரமான முறையில் மத வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். ஆகவே உடனடியாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள குறித்த ஆலயத்தை மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மேற்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது. தலைமன்னார் பியர் பகுதியில் 1974ஆம் ஆண்டளவில் புனித சதா சகாயமாதா ஆலயும் அமைக்கப்பட்டது. குறித்த ஆலயம் மிகவும் பழைமை வாய்ந்ததாகக் காணப்படுவதுடன் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. தற்போது சுமார் 150 வரையான குடும்பங்கள் குறித்த ஆலயத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். போர்க் காலம் முதல் தற்போதுவரை குறித்த ஆலயம் கடற்படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. இந்த ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் கடற்படையினரின் அனுமதியைப் பெற்று தேசிய அடையாள அட்டைகளை அவர்களிடம் கொடுத்துவிட்டே உட்செல்ல வேண்டும். இதனால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

போர் முடிவடைந்த நிலையிலும், அந்த மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் மத வழிபாடுகளில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர். எனவே கடற்படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இந்த ஆலயத்தை கடற்படையிடமிருந்து மீட்டு மக்கள் சுதந்திரமான முறையில் மத வழிபாடுகளில் ஈடுபட உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருத்தந்தைக்கு ஜனாதிபதி செய்தி



பதவி விலகும் பரிசுத்த பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பருக்கு நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கையிலுள்ள கத்தோலிக்கர்களினதும் மற்றும் ஏனைய மக்களினதும் பிரார்த்தனைகள் நல்வாழ்த்துக்களில் நானும் இணைந்து கொள்கிறேன். தங்களின் ஆரோக்கியம் மற்றும் ஆசீர்வாதங்களுக்காக வேண்டுகிறேன் என்று ஜனாதிபதி விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


எமது நாட்டில் அமைதியையும் மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு தங்கள் வார்த்தைகள் ஊக்குவிப்பையும் வலுவையும் அளித்திருந்தன என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.


அதேவேளை பரிசுத்த பாப்பரசர் பதவி விலகுவதாக அறிந்து ஆச்சரியமும் கவலையும் அடைந்ததாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். தங்களைச் சந்தித்தபோது தாங்கள் வழங்கிய உற்சாகமான வார்த்தைகள், வழிகாட்டல்கள், ஆலோசனைகளை மிகுந்த மரியாதையுடன் நான் எப்போதும் நினைவுகூருவேன். ஆட்சி தொடர்பான எனது இலக்குகளுக்கு தங்கள் வழிகாட்டல்கள் உதவியாக அமைந்தன என்று ஜனாதிபதி தனது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**பாஸ்கா விழாச் சிறப்பிதழ்**

# பாஸ்கா மறைநிகழ்வும் விசுவாசமும்

அருட்தந்தை ஜெராட் டீ ரொசய்ரோ அ.ம.தி.





### முகவுரை

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு ஆகிய பாஸ்கா மறைநிகழ்வு கிறிஸ்தவ விசுவாச வாழ்வுக்கு மிக அடிப்படையானதாகும்; இறைவனின் மீட்புத்திட்டத்தில் கொடுமுடி நிகழ்வாகும். இதனை இரண்டாம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு அறிக்கையிடுகின்றது: "மக்கள் குலத்தை மீட்டு கடவுளை நிறைவாய் மாட்சிப்படுத்தும் பணியைப் பழைய ஏற்பாட்டு மக்களிடையே நிகழ்ந்த கடவுளின் மாபெரும் செயல்கள் முற்குறித்து நின்றன; கிறிஸ்து ஆண்டவர் சிறப்பாக, தம் பேறுதரு துன்பங்கள், சாவினின்று உயித்தெழுதல், விண்ணேற்றம் எனும் பாஸ்கா மறைநிகழ்ச்சியின் வழியாக இப்பணியை நிறைவேற்றியுள்ளார். இந்நிகழ்ச்சியால் ... முழுத்திருச்சபை எனும் அடையாளம் தோன்றியது" (திருவழிபாடு, இல.5).

ஆக, அன்று இஸ்ரயேல் வரலாற்றில் மீட்பின் நிகழ்வை நடத்தி தமக்கென ஓரினத்தை உருவாக்கிய இறைவன் தம் மகன் இயேசுவின் பாஸ்கா மறைநிகழ்வு வழியாக புதிய இறைமக்கள் சமூகத்தை உருவாக்கினார் என்பது கிறிஸ்தவ விசுவாசமாகும். அவ்விசுவாச வாழ்வின் பாங்கை இங்கு காண்போம்.

### இயேசுவின் கடத்தல்

இயேசுவின் பாஸ்கா மறைநிகழ்வு அவரது கடத்தலின், வெறுமையாக்கலின் உச்ச நிகழ்வாகும். அவரது இறைத் தந்தையின் அன்பு அனுபவத்தின் நிறைவான நிகழ்வு அதுவாகும் (யோவா.10:17-18; பிலி.2:6-8). யாவராலும் கைவிடப்பட்ட நிலையில் "இறைவனே தஞ்சம்" என்ற துணிவான விசுவாசத்துடன் சிலுவையில் நிறைவேறிய கடத்தலாகும் (யோவா.16:32). இயேசுவைப் பொறுத்தவரையில் அவரது கடத்தலானது அவரது இறையன்பு அனுபவத்தின் வெளிப்பாடாகும் (யோவா.10:17-18). நிறைவாழ்வை மற்றவருக்கு அளிக்கும் வழியே இயேசுவின் கடத்தலின், வெறுமையாக்கலின் பொருளாகும் (யோவா.10:10).

இயேசுவின் வெறுமையாக்கல் கிறிஸ்தவ விசுவாச வாழ்வுக்கு அடிப்படையாகும். இயேசுவை 'ஆண்டவரே, ஆண்டவரே' எனக்கூவியழைப்பதும், அறிக்கையிடுவது மட்டும் போதாது. இறையன்பு அனுபவத்தின் விளைவாக அவர் துன்புறும் ஊழியனாக சிலுவையில் அருளிய இறைவெளிப்பாட்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போது இயேசு பரிசேயர், மறைநூலறிஞர், யூதக்குருக்களின் சதித்திட்டங்களுக்கு மத்தியில் இறைதிட்டத்திற்கு பணிந்து நடந்ததுபோல நாமும் அவரில் அறிக்கையிட்ட விசுவாசத்தில் இறைவனுக்கு கீழ்படிந்து வாழலாம் (மாற்.3:6,22; 11:18; 12:22; லூக்.11:54; எபி.5:7-8). நம் தோழமைகள் நம்மைக் கைவிட்டபோதும், இயேசுவைப்போல (மாற்.3:13-15; 14:29-31,50;71), பரிவு கொண்ட உள்ளத்துடன் விசுவாசத்துடன் பொதுநல இலட்சியங்களை நோக்கி நடக்கலாம். மரணத்துக்குரிய குற்றம் எதுவும் காணப்படவில்லை என்றாலும் (லூக்.23:15), நேர்மையானவர் என அறிந்திருந்தாலும் (மத்.27:19), இயேசுவை சமூக, சமய நீதி கைகழுவியபோது (மாற்.11:18;12:11; மத்.26:61; லூக்.22:67,70), உண்மைக்கு சாட்சியமான இயேசுவைப்போல நாமும் வாழும் சூழமைவில் சாட்சியமாகலாம். சிலுவையில் தொங்கிய வேளையிலும் இறைபரிவுக்கு அடையாளமான இயேசுவைப்போல (லூக்.23:34,43) நாமும் இறை பரிவின் அடையாளமாகலாம். மற்றவர் வாழ்வுபெற நம்மைக் கையளிக்கலாம் (யோவா.15:13).

பல்முக சதித்திட்டங்களும், கைவிடும் தோழமையும், கைகழுவும் நீதியும் சூழ்ந்து வளரும் சூழமைவில் "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லட்டும்" (மாற்.8:34) என்ற இயேசுவின் அழைப்புக்குப் பொருள்காண இயேசுவின் கடத்தல், வெறுமையாக்கல் நம் வாழ்வாக வேண்டும். இயேசுவின் சிலுவை வழிநடந்து, சிலுவையடியில் நின்றால் மட்டுமே, அவரது சபலமற்ற சிலுவைச் சாவைக் கண்ட உரோமை இராணுவத்தினன் "உண்மையாகவே இம்மனிதர் இறைமகன்" (மாற்.16:39) என்று விசுவசித்து அறிக்கையிட்டதுபோல, கிறிஸ்தவர்கள் நாமும் விசுவாசத்துடன் இயேசுவை இறைமகனாக ஏற்க முடியும்.

### இயேசுவின் உயிர்ப்பு

இயேசுவின் சிலுவை மரணம் ஓர் புதிய வரலாற்றை உதயமாக்கிற்று. இயேசுவில் விசுவாசம்கொண்ட ஓர் புதிய சீடர் சமூகத்தைப் பிறக்கச் செய்தது. இயேசுவில் விசுவாசம் கொண்டவர்கள் அவரது சிலுவை மரணம் பற்றி விசுவாசத்துடன் சிந்தித்ததன் விளைவாக இவை நிகழ்ந்தன. "அவர் இஸ்ராயேலை மீட்கப்போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் தலைமைக்குருக்களும், ஆட்சியாளர்களும் அவருக்கு மரணதண்டனை விதித்து சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாட்கள் ஆகின்றன. ஆனால்' எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர் எங்களை மலைப்புக்குள்ளாக்கினர்..." (லூக்.24:20-24) என்று பேசிக்கொண்டு வழிநடந்த சீடர்கள் சிலுவையில் அறையுண்ட இயேசுவின் பிரசன்னத்தை உயிர்த்த, உயிப்பிக்கப்பட்ட பிரசன்னமாகக் கண்டு விசுவசித்தார்கள். அப்பிரசன்னம் அவர்களின் கண்களைத் திறந்தன. அவர்கள் எமாவுசுக்குச் செல்லாமல் மீண்டும் எருசலேம் சென்று, அவர்கள் பெற்ற உயிர்ப்புப் பிரசன்ன அனுபவத்தைப் மற்றவருடனும் பகிர, மற்றவரையும் உறுதிப்படுத்த அப்பிரசன்னம் தூண்டலளித்தது. நற்செய்திகளில் காணப்படும் அனைத்து உயிர்ப்புப் பிரசன்னங்களும், அவரது விண்ணேற்பும் ஆரம்பகால விசுவாசிகளில் காணப்பட்ட விழிப்புணர்வையும் அதனால் மலர்ந்த விசுவாச வாழ்வின் பாங்கையுமே வெளிப்படுத்துகின்றன. (1கொரி.15:3-7; மத்.28:1-19; மாற். 16:1-19; லூக்.24:1-12, 13-35, 36-49; யோவா.20:1-10,11-18,9-23,24-29;21:1-14).

புனித பவுலின் விசுவாசக் கண்ணோக்கில் உயிர்த்த இயேசுவின் பிரசன்னம் அவருக்கு இறைவனின் தலையாய பண்புகளில் ஒன்றான நீதியை வெளிப்படுத்திற்று (உரோ.2:2,5, 3:1-8). ஆக, இயேசுவை உயிர்த்தெழச் செய்த இறைவன் சீடரையும், அதாவது விசுவாசிகளையும் உயிர்த்தெழச் செய்வார் (1தெச.4:14; கலா.1:1-2; 1கொரி.6:4,15:2). இறைபற்று அற்றவர்களின் நெறிகேடுகள், தன்னலம் நாடி உண்மைக்குப் பணியாமை, அநீதிக்குப் பணிதல் மீது இறைதீர்ப்பு விழும் (உரோ.1:18,2:8). மேலும் இயேசுவை உயிர்ப்பித்த இறைவனின் செயல் காக்கும், விடுவிக்கும், மீட்கும், ஒப்புரவாக்கும், ஏற்புடையவராக்கும் வாழ்விக்கும் செயலாகும். இறைவனின் இச்செயல்பாடு இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவருக்கு கைகூடும் (கொலோ.1:13,22; 2கொரி.5:17; எபே.1:7).

இயேசுவை உயிர்தெழச் செய்த இறைவன் அனைவரையும் வாழ்வு பெற அழைப்பவர் (2தெச.2:14); தூயஆவியை வழங்குபவர் (கலா.3:5; எபே.1:13); தேர்ந்தெடுப்பவர் (கொலோ.3:12; எபே.1:11); குற்றங்களை மன்னிப்பவர் (கொலோ.2:9,14); ஆறுதல் அளிப்பவர் (2கொரி.1:3-4); எதிர்நோக்கும், மாட்சியும், வல்லமையும் தருபவர் (எபே.1:18-19). ஆக, கிறிஸ்தவ விசுவாசிகள் இறைவன்தரும் இவ்வாழ்வுக்கு சாட்சியமாகிட வேண்டும். தீமையின் ஆற்றலை வெல்ல, இறைவன் தரும் படைக்கலன்களை அணிந்துகொண்டு (எபே.6:13...), தம் முழு வாழ்வையும் இறைவனுக்கு நன்றியாக அமைத்திட வேண்டும் (கோலோ.1:12; எபே.1:12).

இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பு மாற்றுரு பெறுதலைக்குறிப்பதால் (உரோ.6:1-11; 2கொரி.4:10-12; எபே.2:5-6), விசுவாசிகளும் உயிருடன் எழுப்பப்படுவர் என்கிறார் புனித பவுல் (1கொரி.15:51-52). அதாவது, கிறிஸ்துவுடன் வாழ்பவருக்கு நிலைவாழ்வு அருளப்படுகிறது (உரோ.5:12;6:22-23); நம்புவோர் கிறிஸ்துவின் சாயலைத் தாங்கியிருக்கின்றனர் (உரோ.8:29, 2கொரி.3:18) என்கிறார் இயேசுக் கிறிஸ்துவின் சாயலைத் தாங்குவதே கிறிஸ்தவ விசவாசிகளின் நிறைவுகால இலக்காகும்.

### முடிவாக

திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் பாஸ்கா மறைநிகழ்வு வெளிப்படுத்தி அருளும் வாழ்வு விசுவாசத்தின் வழியாக ஒருவருக்கு கைகூடுகிறது. கிறிஸ்தவ விசுவாசிகள் சிலுவையில் அறையுண்டு இறந்து உயிர்ப்பிக்கப்பட்ட இயேசுக் கிறிஸ்துவின் பிரசன்னத்தைத் தத்தம் வாழ்க்கைப் பாதையில்கண்டு, நிறைவாழ்வு பெறுவார்களா? வாழும் சூழமைவில் இயேசுவின் சாயலைத் தாங்கி, பிறரும் வாழ்வுபெற்றிட உண்மையில் வழிநடப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை சிறைக்கைதிகளைப் பார்வையிட்டார்



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கடந்த 28.2.2013 அன்று கொழும்பு நியூ மகஸின் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட்டார். ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனாவும் ஆயருடன் சென்றிருந்தார்.

சுமார் ஒரு மணி நேரம் அங்கு செலவிட்ட ஆயர், தமிழ் அரசியல் கைதிகளிடம் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்டார். தம்மை விடுதலை செய்யுமாறு கோரி 9ஆவது நாளாக உண்ணாவிரதமிருக்கும் தியாகராசா பிரபாகரனையும் ஆயர் சந்தித்தார். தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை அப்பொழுது பிரபாகரன் ஆயரிடம் வழங்கினார்.

தங்காலைச் சிறையில் இருந்து நியூ மகஸின் சிறைக்கு மாற்றப்பட்ட சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் வெளிமருத்துவமனை ஒன்றுக்கு 28.2.2013 அன்று கொண்டுசெல்லப்பட்டதால் ஆயருடனான சந்திப்பு இடம்பெறவில்லை. தங்காலைச் சிறையில் இருந்த சமயம் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்ட கேதீஸ்வரன் அந்தரங்க உறுப்பு பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைபெற்று வருகிறார். இவர்களின் விடுதலை குறித்து தாம் ம்முயற்சிகளை மேற்கொள்வதாக ஆயர் அவர்கள் அங்கு தெரிவித்தார்.

## முருங்கன் பங்கின் ஜீவநகர் லூர்து அன்னை திருவிழா

ஜீவநகர் தூய லூர்து அன்னை ஆலயத்திருவிழா கடந்த 07.02.2013 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொடியை பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குரூஸ் அடிகளார் ஏற்றிவைத்தார்.


"ஒரே கடவுளை நம்புகிறேன்" என்ற கருப்பொருளில் அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் அடிகள் முதல் நாள் மறையுரையை வழங்கினார். "புனிதர்களின் சமூக உறவை நம்புகிறேன்" என்ற கருப்பொருளில் இரண்டாம் நாள் மறையுரையை அருட்பணி. நியூட்டன் வழங்கினார். மூன்றாம் நாள் "ஏக பரிசுத்த கத்தோலிக்க அப்போஸ்தலிக்க திருச்சபையை நம்புகிறேன்." என்ற கருப்பொருளில் மறையுரையை அருட்பணி. சுரேந்திரன் றெவல் வழங்கினார். நான்காம் நாள் வேஸ்பர் ஆராதனைக்கு முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி அகஸ்ரீன் அடிகளார் வருகை தந்து "நற்கருணை நம் நம்பிக்கையின் ஊற்றும் உச்சமும்" என்ற கருப்பொருளில் மறையுரையை வழங்கினார்.

11.02.2013 அன்று காலை 7.15 மணிக்கு திருவிழாத்திருப்பலி அருட்பணி. எஸ். வசந்தகுமார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம், அருட்பணி. அருள்ராஜ் குரூஸ் ஆகியோர் சேர்ந்து விழாப்பலியை ஒப்புக்கொடுத்தனர். "நம்பிக்கையின் நட்சத்திரம் அன்னை மரியாள்" என்ற கருப்பொருளில் அன்று மறையுரை வழங்கப்பட்டது. லூர்து அன்னையின் திருச்சுருபப் பவனியுடனும், ஆசீர்வாதத்துடனும் திருவிழா நிகழ்வுகள் நிறைவுற்றன.

ஜீவநகர் ஆலய மேய்ப்புப்பணிச் சபை இளைஞர், யுவதிகள், பெரியோர், சிறியோர், கார்மேல் சபை கன்னியர்கள், அருட்சகோதரர் ஆகியோர் விழா சிறப்புற முன்னேற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். சகல நிகழ்வுகளையும் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குரூஸ் நெறிப்படுத்தி வழிநடத்தினார்.

தகவல் :- அ. தேவராஜா, ஆலய மேய்ப்புப்பணிச்சபை.

## முருங்கன் பங்கில் மறைக்கல்வி மாணவர்களுக்கான பாசறை



*முருங்கன் பங்கின் கிறிஸ்து அரசர் ஆலயம்*

முருங்கன் பங்கில் மறைக்கல்வி மாணவர்களுக்கான பாசறை நிகழ்வானது சுண்டிக்குளி கர்த்தர் ஆலயத்தில் கடந்த 25.01.2013 அன்று காலை 9.00 மணியளவில் முருங்கன் பங்குத்தந்தை அருள்ராஜ் குரூஸ் அடிகளாரின் தலைமையில் ஆரம்பமானது.

இப்பாசறை நிகழ்வில் 150 மாணவர்கள் பங்குபற்றினர். இப் பாசறையை அருட்தந்தை பீற்றர் (அமதி) அடிகளார், கார்மேல் கன்னியர்மட அருட்சகோதரி மற்றும் மறையாசிரியர்கள் ஆகியோர் நடாத்தினர்.

அருட்தந்தை பீற்றர் அடிகளார் நம்பிக்கை ஆண்டில் இறைவனில் நம்பிக்கை கொண்டு விசுவாசப் பயணத்தில் வாழ வேண்டும் என்ற கருப்பொருளில் மாணவர்களுக்கான கருத்துக்களை முன்வைத்தார். பின்னர் மாணவர்களுக்கான விளையாட்டுக்களும், மறைக்கல்விப் பரீட்சையில் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டு மாலை 4.00 மணியளவில் இப்பாசறை நிறைவுற்றது. தகவல் : இ. நீற்ரா

> **மன்னா விநியோகஸ்தர்களே,**
> உங்கள் பங்கில், ஊரில், வலயத்தில், அன்பியத்தில் மன்னா பத்திரிகையைப் பெறாத குடும்பங்களை இனம்கண்டு, அவர்களைச் சந்தித்து, ஒவ்வொரு குடும்பமும் மன்னாவைப் பெற ஊக்குவியுங்கள், முயற்சி எடுங்கள்.
> - மன்னா பதிப்பாசிரியா

## கணேசபுரம் தூய வனத்துச் சின்னப்பா ஆலயத்திறப்பு விழாவும் திருவிழாவும்.



வேப்பங்குளப் பங்கின் துணை ஆலயங்களில் ஒன்றான கணேசபுரம் தூய வனத்துச் சின்னப்பர் புதிய ஆலயமானது கடந்த மாசி மாதம், 09ம் திகதி சனிக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. இவ்வாலயமானது பங்குத்தந்தை அருட்பணி. அ. ரஜனிகாந் அடிகளாரின் அயராத முயற்சியிலும், ஆலய மக்களினதும், துணை ஆலயங்களில் உள்ள நல்ல உள்ளங்களினதும் அர்ப்பணம் நிறைந்த தியாகத்தோடுகூடிய உழைப்பினாலும் ஏனைய நண்பர்கள், உபகாரிகளினதும், தாராள ஒத்துழைப்பினாலும் கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திருவிழாத் திருப்பலி மறையுரையில் ஆயர் அவர்கள் விசுவாச ஆண்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு, ஆலய மக்களின் தளராத முயற்சியையும் பாராட்டினார். மறை மாவட்டத்திலேயே தூய வனத்துச் சின்னப்பரின் ஆலயம் வேப்பங்குளப் பங்கிலேயே அமைந்துள்ளது எனவும், இதை ஒரு புனித ஸ்தலமாகப் பாதுகாத்து எமது ஆன்மீக வாழ்வுக்கு வரம் சேர்க்க புனிதரின் பரிந்துரை வேண்டி செபிக்குமாறும் கூறினார். அத்துடன் புனிதரின் சிறப்பான ஆசீர்வாதங்களையும் பக்தர்களுக்குப் பெற்றுத் தந்தார்.

இந்தப் புனித நிகழ்வுக்கு வேப்பங்குளப் பங்குச் சமூகமே அணிதிரண்டு வந்ததோடு, வவுனியா மறைக்கோட்டத்தின் பல குருக்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல் : கணேசபுர ஆலய மக்கள், வேப்பங்குளம.

## உயிலங்குளம் பங்கு பாலைக்குழி, காத்தான்குளம் புனித காணிக்கை மாதா திருவிழா

பாலைக்குழி, காத்தான்குளம் புனித காணிக்கை மாதா விழாவை ஆரம்பிக்கும் முகமாக கடந்த 30.01.2013 அன்று மாலை 5.30 மணியளவில் உயிலங்குளம் பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல் அடிகளார் அன்னையின் கொடியினை ஏற்றிவைத்தார்.

விசுவாச ஆண்டையொட்டிய தலைப்புக்களில் மூன்று நாட்களிலும் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு (அன்பிய இயக்குனர் - மன்னார் மறைமாவட்டம்) மிகவும் அழகாகவும் ஆழமாகவும் சிறப்பாக மறையுரை ஆற்றினார். மூன்றாம் நாள் திருப்பலியை அருட்பணி. வசந்தகுமார் (பங்குத்தந்தை – காத்தான்குளம்) ஒப்புக்கொடுத்தார்.

தொடர்ந்து திருநாள் திருப்பலியை இந்தியாவில் இருந்து வருகை தந்த அருட்பணி. அல்பேட் அடிகளாரும் அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல் அடிகளாரும் சேர்ந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். பின்னர் காணிக்கை என்றால் என்ன என்பதனை விரிவாகவும் விளக்கமாகவும் மறையுரை மூலம் அல்பேட் அடிகளார் தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து அன்னை மரி அழகிய பேழையில் ஆலயத்தை சுற்றி பவனி வந்ததையடுத்து அன்னையின் ஆசீர் பக்தர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

தகவல்:- எஸ். சுதா, பாலைக்குழி, நானாட்டான்.

## தாழ்வுபாடு பங்கில் உறுதிப்பூசுதல் நிகழ்வு



*தாழ்வுபாடு பங்கின் புனித சூசையப்பர் ஆலயம்*

தாழ்வுபாடுப் பங்கில் கடந்த 03.02.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் 43 இளைஞர் யுவதிகளுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இத்திருப்பலியில் ஆயர் அவர்கள் "நம்பிக்கை வாழ்விற்கு உயிர் கொடுக்கும் மக்களாக வாழவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

கடந்த 6 மாத காலமாக பிள்ளைகளை பங்குத்தந்தை எஸ். ஸ்ரீபன்ராஜ் அவர்களின் வழிகாட்டலில் அருட்சகோதரி ஜென்சி அருட்சகோதரர் றெறன்ஸ் ஆகியோர் தயார் செய்தார்கள். பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் ஞானப்பெற்றோர் ஆகியோருக்கு அருட்தந்தை யூட் குரூஸ் தலைமையில் கருத்தமர்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வுகளுக்கு பெற்றோர், ஞானப்பெற்றோர், பங்கு மக்கள் சிறப்பான ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


தகவல் :- ஸ்ரீபன் மேபிள் பெரேரா, தாழ்வுபாடு.

## மன்னார் பேராலயப்பங்கின் தாய்க்கோவிலாம் தூய காணிக்கை அன்னையின் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

மன்னார் பேராலயப்பங்கின் தாய்க்கோயிலாகவும், 1834ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வரலாற்றுக்கால ஆலயமாகவும், பங்குக்கோயிலாகவும் விளங்கிய தூய காணிக்கை மாதா ஆலயத்தை புதிய வடிவில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் புனித சடங்கு கடந்த 10.02.2013 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் ஆசீருடன் ஆலய அடிக்கல் நாட்டு வைபவம் இடம்பெற்றது. முதல் அத்திவாரக் கல்லை ஆயர் அவர்கள் வைத்தார்.

தொடர்ந்து மன்னார் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி ச. சத்தியராஜ் அடிகளாரும், அதனைத் தொடர்ந்து குடும்ப, பொதுநிலைப்பணி இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அடிகளாரும் உதவிப்பங்குக் குருக்களான அருட்பணியாளர்கள் தவராஜா, டெஸ்மன் அஞ்சலோ ஆகியோரும் சிறப்பு கற்களை நாட்டினர். பின் திருத்தொண்டர் சேகர் (அமதி), டிலாசால் அருட்சகோதரர்கள், பங்கில் பணியாற்றும் அருட்சகோதரிகள், அருட்பணிப் பேரவை உறுப்பினர்கள், மரியன்னை ஆலயக் கட்டிட நிதிக்குழுவினர், ஊர்ப் பெரியவர்கள் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். பங்குச்சமூக மக்கள் ஒற்றுமையுடன் செபித்து இப்புனித நிகழ்வில் பங்கெடுத்தமை காணிக்கை அன்னைமீது மக்கள் கொண்ட பற்றினைச் சிறப்பாக வெளிப்படுத்தி நின்றது.



*முற்றாக இடிக்கப்பட்ட பழைய ஆலயத்தின் தோற்றத்தினை இங்கு காண்கிறீர்கள். இந்த ஆலயம் சென்ற ஆண்டு முற்றாக இடிக்கப்பட்டு அந்த இடத்தில் தற்போது புதிய ஆலயம் அமைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவாச ஆண்டு சிறப்புப் பொழிவு

*சிறப்புக் கட்டுரைத் தொடர் 2*

### திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் நம்பிக்கையின் ஆண்டை அறிவித்து வெளியிட்ட

# நம்பிக்கையின் வாயில் (Porta Fidei)

### எனும் திருத்தூது மடல் (Apostolic Letter)


8. இந்த ஆண்டு ஒவ்வொரு விசுவாசியிடமும் நம்பிக்கையை முழுமையாகவும், புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டுடனும், தன்னம்பிக்கையுடனும், எதிர்நோக்குடனும் அறிக்கையிட வேண்டும் என்ற ஆவலை தூண்டவேண்டும் என்று ஆசிக்கிறோம். மேலும் திருவழிபாட்டிலும், திருச்சபையின் செயல்கள் ஒரு முகப்படுத்தப்பட்டும், திருச்சபையின் சக்திகள் ஊற்றெடுக்கும் நற்கருணை கொண்டாட்டத்திலும் நமது நம்பிக்கையை கொண்டாடத் தூண்டும் ஒரு வாய்ப்பாகவும் இது அமையும். மேலும் விசுவாசிகளின் சாட்சிய வாழ்வு நம்பிக்கையின் நம்பகத்தன்மையை அதிகரிக்க வேண்டும் என்பதும் எமது செபமாக இருக்கிறது. இந்த ஆண்டு முழுவதும் அறிக்கையிடப்படுகிற, கொண்டாடப்படுகிற, வாழப்படுகிற மற்றும் செபிக்கப்படுகிற நம்பிக்கையின் உள்ளடக்கத்தை ஒவ்வொரு விசுவாசியும் கண்டுகொள்ள வேண்டும் என்பதும், அதைப்பற்றி அவர்கள் சிந்திப்பதையும் தனதாக்கிக்கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்தவர்கள் விசுவாசப் பிரமாணத்தை மனப்பாடம் செய்யப் பணிக்கப்பட்டதற்கு பொருள் இல்லாமல் இல்லை. அவர்கள் திருமுழுக்கில் ஏற்றுக்கொண்ட அர்ப்பணத்தை மறந்துவிடாமல் இருக்க அவர்கள் அதை அன்றாட செபத்தில் செபித்தனர். விசுவாசப் பிரமாணத்தின் வரலாறு என்னும் மறையுரையில் புனித அகுஸ்தினார் இதைப்பற்றி உயர்வாகப் பேசுகின்றார். நீங்கள் அனைவரும் பெற்றுக்கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக உரக்கச் சொல்லிய இந்த மறை உண்மைகள்மீதுதான் தாய்த்திருச்சபையின் நம்பிக்கை கட்டப்பட்டுள்ளது. அதன் உறுதியான அடிப்படை நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவே. இதை நீங்கள் பெற்றுக்கொண்டு உரக்கச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இதை உங்கள் மனதிலும் இதயத்திலும் எப்போதும் இருக்கும்படி பாதுகாக்க வேண்டும். நீங்கள் உறங்கச் செல்லும்போது சொல்லிப் பழக வேண்டும். பொதுவிடங்களில் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். உண்ணும்போதும் இதை மறக்கக்கூடாது. உங்கள் உடல் உறங்கிக்கொண்டிருந்தாலும் உங்கள் இதயம் இதைப் பாதுகாக்க வேண்டும்.

9. இந்த வேளையில் நம்பிக்கையின் உள்ளீட்டை (Content of faith) ஆழமாக புரிந்துகொள்ளவும் முழுச் சுதந்திரத்துடன் இறைவன்மீது முழு நம்பிக்கை வைத்து அதை நம்பவும் (Act of Faith) நமக்கு உதவும் பாதையை வகுத்துக் காட்ட விழைகின்றேன். உண்மையில் நம்முடைய நம்பிக்கையின் செயல்பாட்டிற்கும் (Act of Faith) நம்முடைய சம்மதத்தைத் தந்து ஏற்றுக்கொள்ளும் நம்பிக்கையின் உள்ளீட்டிற்கும் (Content of Faith) ஒரு ஆழமான ஒற்றுமை உண்டு. இதை உணர்ந்துகொள்ள புனித பவுலடியாரின் வார்த்தைகள் நமக்கு உதவுகின்றன. இவ்வாறு உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர்: வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர் (உரோ 10:10). ஒருவர் கடவுளை நம்புவதற்கு எடுக்கும் முதல் முயற்சியே கடவுளின் கொடை என இதயம் நமக்கு அறிவுறுத்துகிறது. இந்த அருளின் செயலே ஒருவரை உள்ளிருந்து மாற்றுகிறது. லீதியாவின் உதாரணம் இதை விளக்க உதவும். புனித லூக்கா பிலிப்பியில் இருந்தபோது புனித பவுல் நற்செய்தி அறிவிப்பதற்காக சில பெண்களை அணுகினார். அவர்களில் ஒருவர்தான் லீதியா. "பவுல் பேசியதை ஏற்றுக்கொள்ளுமாறு ஆண்டவர் அவர் உள்ளத்தைத் திறந்தார்" (திபா 16:14). இந்த வசனத்தில் ஒரு முக்கியமான பொருள் பொதிந்துள்ளது. விசுவசிக்க வேண்டிய உள்ளீட்டை (Content) மட்டும் அறிந்திருத்தல் போதாது. அதையும் தாண்டி போதிக்கபடுபவை இறைவார்த்தை என ஏற்றுக்கொள்ள ஒரு மனிதனின் புனிதமான இடமான இதயம் இறை அருளால் திறக்கப்பட வேண்டும் என புனித லூக்கா கற்பிக்கின்றார்.

நாவினால் அறிக்கையிடுவது என்பது நம்பிக்கைக்கு வெளியரங்கமாக சான்று பகர்வதையும், அதை ஏற்றுக்கொள்வதையும் குறித்துக்காட்டுகின்றது. எனவே நம்புவது என்பது வெறும் தனி நபர் சம்பந்தப்பட்ட செயல் (Private Act) என்று எந்தக் கிறிஸ்தவனும் நினைக்கக்கூடாது. நம்பிக்கை என்பது ஆண்டவரோடு நிற்கவும் அவரோடு வாழவும் எடுக்கும் நிலைப்பாடு ஆகும். இந்த அவரோடு நிற்பது நம்புவதற்கு ஒரு காரணமாகும். நம்புவது சுதந்திரமாக செயல்படுத்தப்படும் செயல் என்பதால் இது நம்புபவரிடமிருந்து சமூகப் பொறுப்பையும் எதிர்பார்க்கின்றது. பெந்தகோஸ்தே நாளில் திருச்சபை தான் நம்புவதின் வெளியரங்கத் தன்மையையும் (Public Dimension) அதை எல்லாரிடமும் அச்சமின்றி அறிக்கையிடுவதன் அவசியத்தையும் தெள்ளத்தெளிவாக நிகழ்த்திக்காட்டியது. நம்மை நற்செய்திப் பணிக்கு தகுதியுள்ளவர் ஆக்குவதும், நமது சாட்சியத்தை திடப்படுத்தவும் அதை வெளிப்படையாகவும் அச்சமின்றியும் செய்யவைப்பதும் தூய ஆவியின் கொடையே.

நம்பிக்கையை அறிக்கையிடுவது தனிப்பட்டதும் குழுமம் சார்ந்ததுமான ஒரு செயல்பாடு. திருச்சபையே நம்பிக்கையின் முதல் உள்ளீடு (Subject). மீட்புப் பெறுவதற்காக விசுவசிப்போரின் கூட்டத்தில் இணையும் அல்லது சேரும் அடையாளம் திருமுழுக்கு. கிறிஸ்தவ இறைசமூகத்தின் நம்பிக்கையை அடிப்படையாக வைத்துத்தான் தனி நபர்கள் திருமுழுக்குப் பெறுகின்றனர்.




கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (Catechism of the Catholic Church) எனச் சொல்லப்படும் ஏட்டில் இதை வாசிக்கின்றோம். "நான் விசுவசிக்கின்றேன்" விசுவாசப் பிரமாணம் என்பது சிறப்பாக திருமுழுக்கின்போது தனிநபர்கள் அறிக்கையிடும் திருச்சபையின் நம்பிக்கை. "நாங்கள் விசுவசிக்கிறோம்" எனச் சொல்லப்படும் விசுவாசப் பிரமாணம் என்பது ஆயர்கள் பேரவைகளில் கூடிவரும்போதும் விசுவாசிகள் திருவழிபாட்டிற்குக் கூடிவரும்போதும் அறிக்கையிடுகின்ற திருச்சபையின் நம்பிக்கை. 'நான் விசுவசிக்கின்றேன்' என அறிக்கையிடுவதும் நமது தாயாம் திருச்சபைதான். இறைவனின் அழைப்புக்கு நம்பிக்கையால் செவிமடுத்து அது நம்மை 'விசுவசிக்கிறேன்' 'விசுவசிக்கிறோம்' என்று இரண்டையும் சொல்ல நமக்குக் கற்பிக்கிறது. (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி எண் 167) (பிற்குறிப்பு : 'விசுவசிக்கிறேன்' என்பது திருத்தூதர்களின் விசுவாசப் பிரமாணத்தை குறிக்கும், 'விசுவசிக்கிறோம்' என்பது நிசேயன் கான்ஸ்டான்டிநோப்பிள் விசுவாசப் பிரமாணத்தை (Niceno – Constantino Politan Creed குறிக்கும்.)

ஒருவரின் முழுமன சம்மதத்தை அளிப்பதற்கு அதன் உள்ளீட்டை அறிந்துகொள்வது அவசியம். திருச்சபை அறிவிக்கிறதை முழு அறிவோடும் மனத்தோடும் ஏற்றுக்கொள்ள இது அவசியம். நம்பிக்கையைப் பற்றிய அறிவு கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட மீட்பின் மறைபொருளின் முழுமைக்குள் நுழைய வாயிலைத் திறந்துவிடுகிறது. நமது சம்மதத்தை தருவது என்பது நாம் நம்பும்போது நாம் நம்பிக்கையின் மறைபொருள் முழுவதையும் ஏற்றுக்கொள்கிறோம் எனப் பொருள்படுகிறது. ஏனெனில் திருச்சபையின் மறை உண்மைகளின் உத்தரவாதக்காரர் இறைவனே. அவரே தம்மை வெளிப்படுத்தி அவரின் அன்பின் மறை உண்மைகளை அறியச் செய்கிறார்.

அதே நேரத்தில் நமது கலாச்சார சூழ்நிலையில் நம்பிக்கையின் கொடை இல்லாவிட்டாலும், பலர் தங்களின் வாழ்வின், உலகின் இறுதி அர்த்தத்தை உண்மையை நேர்மனத்தோடு தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தத் தேடல் இம்மக்களை கடவுள் எனும் மறைபொருளுக்கு இட்டுச்செல்லும் பாதைக்கு கொணர்வதால், இறை நம்பிக்கையின் முன்னுரை (Preamble) எனக்கொள்ளலாம். மனித அறிவு என்பது நித்தியத்திற்கும் சரியான நிலைபெறக்கூடிய ஒன்றிற்கான வேட்கையை தன்னுள் கொண்டுள்ளது எனலாம். இந்த வேட்கை ஒரு நிரந்தர அழைப்பில் அடங்கியுள்ளது. இந்த அழைப்பு மனித இதயத்தில் அழிக்கப்பட முடியாதபடி எழுதப்பட்டுள்ளது. அவரே நம்மைத் தேடி வராவிட்டால் நாம் அவரைத் தேடிப் போயிருக்க மாட்டோம். இந்தத் தேடல் நமது இதயத்தில் பொதியப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு சந்திப்புக்கு நம்பிக்கை நம்மை அழைக்கிறது.

10. நம்பிக்கையின் உள்ளீடு பற்றிய ஒழுங்கமைவான அறிவைப் பெறுவதற்கு கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (Catechism of the Catholic Church) ஒரு அழகிய தவிர்க்க முடியாத உதவியாகும். இது இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மிக முக்கிய பயன்களும் ஒன்றாகும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முப்பதாம் ஆண்டு நிறைவின் நினைவாக வெளியிடப்பட்ட நம்பிக்கையின் சேமிப்பு (Fidel Depositum) எனும் மடலில் வணக்கத்திற்குரிய இரண்டாம் ஜோன் போல் இவ்வாறு கூறுகிறார்; இந்த மறைக்கல்வி திருச்சபையின் முழு வாழ்வையும் புதுப்பிக்கும் நம்பிக்கையை கற்பிப்பதற்கும் இது சரியான அதிகாரப்பூர்வமான கருவியாக இருக்கும் என அறிவிக்கிறேன். இந்தப் புரிதலில் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியில் ஒழுங்காகவும் முறையாகவும் அளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையான உள்ளீடுகளை மீண்டும் கண்டறியவும் படிக்கவுமான ஒருங்கிணைந்த முயற்சிகளை இந்த நம்பிக்கையின் ஆண்டு காணும் என நம்புகிறேன்.

உண்மையில் இதில் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றில் திருச்சபை பெற்றுக்கொண்ட, பாதுகாத்த, அறிவித்த போதனைச் செல்வங்கள் பொதிந்துள்ளன. திருமறைநூல், திருச்சபைத் தந்தையர்கள், இறையியல் அறிஞர்கள், பல நூற்றாண்டுப் புனிதர்கள் என இந்த மறைக்கல்வி ஏடு ஒரு நிலையான தொகுப்பைக் கொண்டுள்ளது. இந்த நம்பிக்கையை திருச்சபை பல வழிகளில் தியானித்து அதன் கோட்பாடுகளில் முன்னேற்றம் கண்டு இன்று விசுவாசிகளுக்கு அவர்களின் நம்பிக்கை வாழ்வில் அதனால் உறுதியளிக்க முடிகிறது. கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி தனது அமைப்பு முறையில் அன்றாட வாழ்வுவரை நம்பிக்கையின் வளர்ச்சியை விளக்குகிறது. இதன் ஒவ்வொரு பக்கத்திலும் நாம் வெறும் தத்துவங்களையல்ல மாறாக திருச்சபையில் பிரசன்னமாயிருக்கும் அந்த ஆளைச் சந்திக்கிறோம். விசுவாச அறிக்கைக்குப் பிறகு அருட்சாதன வாழ்வுபற்றி விளக்கம் காணப்படுகிறது. இந்த அருட்சாதனங்கள் மூலமாகக் கிறிஸ்து திருச்சபையில் பிரசன்னமாகி, செயல்பட்டு அதை வளர்த்தெடுக்கிறார். திருவழிபாடும் அருட்சாதனங்களும் இல்லையெனில் நம்பிக்கை தனது செல்பாட்டு திறனை இழந்துவிடும். ஏனெனில் கிறிஸ்தவ சாட்சியத்தை தாங்கி நிற்கின்ற அருள் இல்லாமல்போகும். நம்பிக்கை திருவழிபாடு, செபம் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி பார்க்கும்போது மறைக்கல்வியின் அறநெறி பற்றிய போதனை அதனை நிறைவுசெய்கின்றது.

11. எனவே இந்த ஆண்டில், இன்றைய கலாச்சார பின்னணியில் மிக அவசியமாகத் தேவைப்படும் கிறிஸ்தவர்களின் உருவாக்கத்திற்கும், நம்பிக்கையை வளர்த்தெடுப்பதற்கும் 'கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி' ஒரு உன்னத கருவியாக செயல்படும். இந்த நம்பிக்கையின் ஆண்டை பயனுள்ள, முறையான வழியில் விசுவாசத்திற்கும் மறைபரப்பிற்கும் ஏற்ற முறையில் வாழ உதவிடும் விதத்தில் ஒரு குறிப்பு ஏட்டை திருத்தந்தையின் பல்வேறு பணிக் குழுக்களுடன் ஆலோசித்து வெளிக்கொணரும்படி விசுவாசக் கோட்பாட்டு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டுள்ளேன்.

அறிவுசார் உண்மைகளை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்குள் குறுக்கிவிடும் இக்காலகட்டத்தில் முன்னெப்போதையும்விட மாறுபட்ட மக்களின் மனநிலையால் நம்பிக்கை பல்வேறு கேள்விகளுக்கு ஆட்பட்டுள்ளது. நம்பிக்கையும் உண்மையான அறிவியலும் இருவேறு வழித்தடங்களில் நடந்தாலும் ஒரே உண்மையை நோக்கிப்போவதால் திருச்சபை இவை இரண்டுக்கும் முரண்பாடு இல்லை என்பதை தெளிவுபடுத்த எப்போதும் தவறியதில்லை.

(அடுத்த மாத இதழில் தொடரும்)

# முதியோர் தின விழா

கடந்த டிசம்பர் மாதம் 21ம் திகதி மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத்தின் முதியோர் தின விழாவும், ஒளி விழா நிகழ்வுகளும் மன்னார் குடும்பநலப் பணியகத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வின் படங்களை கீழே காணலாம்.



மன்னார் முதியோர் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் திரு. எஸ். சூசையப்பு லெம்பேட் மன்னார் ஆயர் அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கின்றார்.



மன்னார் ஆயர் மற்றும் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத்தின் இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர்.



விழாவில் பங்கேற்ற பங்கேற்பாளர்கள் அமர்ந்திருக்கின்றனர்.



சமாசத்தின் செயலாளர் திரு. அந்தோனிமுத்து அவர்கள் நன்றியுரை ஆற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

### கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இலங்கையிலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர். கச்சதீவு ஆலயத் திருவிழா கடந்த 24.02.2013 அன்று காலை 8 மணிக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது. இதில் தமிழ் நாட்டுக் குருக்களும் கலந்துகொண்டனர்.

இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக். கே. காந்தா, யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, வடமாகாணக் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் டவத்த, யாழ். மாவட்ட நீதிபதி அமல வளன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்தத் திருவிழாவுக்காக 23.2.2013 அன்று மாலையிலிருந்தே தமிழ் நாடு மற்றும் இலங்கைப் பக்தர்கள் நூற்றுக்கணக்கான படகுகளில் கச்சதீவுக்கு வந்திருந்தனர். சிலர் இங்கு கூடாரங்கள் அமைத்துத் தங்கியிருந்தனர்.

கச்சதீவு வந்த பக்தர்களுக்கான உணவு, குடிநீர் மற்றும் ஏனைய சகல வசதிகளையும் கடற்படையினர் வழங்கிய அதே வேளை யாழ்ப்பாண வர்த்தகர்கள் சிறிய வியாபாரங்களையும் மேற்கொண்டனர்.

கடந்த முறையைவிட இம்முறை திருவிழா சிறப்பாக நடைபெற்றதாக பக்தர்கள் தெரிவித்தனர். இத்திருவிழாவுக்கு தமிழ்நாட்டு ஊடாகவியலாளர்கள் சிலரும் வந்திருந்தனர்.

### அருட்திரு. திஸ்ஸ பாலசூரிய இறைபதம்



அமதிகள் சபையின் கொழும்பு மாகாணத்தைச் சேர்ந்த பிரபல இறையியலாளர் அருட்திரு. திஸ்ஸ பாலசூரிய அடிகளார் கடந்த 17.01.2013 அன்று இறைபதம் அடைந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 88.

இவர் எழுதிய ஒரு நூலில் மரியன்னை தொடர்பான சர்ச்சைக்குரிய விடயம் இருந்ததால் சில காலம் இவர் திருச்சபையில் இருந்து விலக்கிவைக்கப்பட்டிருந்தார். பின்னர் மன்னிப்பு அளிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மறைபரப்பு சகோதரர்கள் சபையின் மாகாணத் தலைவராக

### அருட் சகோ. ஜெயராஜ் அருளானந்தன்



புனித பிரான்சிஸ் அசிசியார் மறைபரப்புச் சபையின் புதிய மாகாணத் தலைவராக அருட்சகோதரர் ஜெயராஜ் அருளானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 15ம் திகதி மாத்தறையில் உள்ள பிரான்சிஸ்கன் மறைபரப்புச் சகோதரர்களின் இல்லத்தில் நடைபெற்ற பொதுச்சபையில் 06வது மாகாண தலைவராக இவர் தெரிவானார்.

அவரது ஆலோசகர்களாக அருட்சகோதரர்கள் செபமாலை செல்வநாயகம் உப மாகாணத் தலைவராகவும் ஆலோசகர்களாக அருட்சகோ. தியோப்பிளஸ் தெரெஸ், அருட் சகோ. இராஜேந்திரன் சகாயநாதன், அருட்சகோ. தேவராஜ் மெல்சன் ஆகியோர் தெரிவானார்கள். அதைத்தொடர்ந்து நிதிப் பொறுப்பாளராக அருட்சகோ. இராஜேந்திரன் சகாயநாதன் தெரிவானார்.

**அருட்சகோதரர் ஜெயராஜ் அருளானந்தன்**

இரத்தினபுரி மறைமாவட்டத்தின் தெஹியோவிற்ற என்ற இடத்தைச் சேர்ந்த திரு. எஸ். பி. நாடார் ஜெயராஜ், பிரான்ஸ் கத்தரின் ஆகியோருக்கு மகனாக 1973ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ம் திகதி பிறந்தார். பாடசாலைக் கல்வியைச் சிறப்பாக முடித்த இவர் பிரான்சிஸ்கன் மறைபரப்புச் சபையின் மாத்தளை மரிய ஜோசப் சகோதரர் மடத்தில் 1989ம் ஆண்டு சேர்ந்தார். 1991-1993ம் ஆண்டு வரை நவசந்தியாசப் பயிற்சியை சிலாப நவசந்தியாச இல்லத்தில் பெற்றார். மேலும் தொழிநுட்பப் பயிற்சியை மேற்கொள்வதற்காக இந்தியா சென்றார். தொடர்ந்து இவர் 1995-1997 வரை தொழிநுட்பப் பயிற்சியைப் பெற்றார். மேலும் பிரான்சிஸ்கன் ஆன்மீகப் பயிற்சியையும் மேற்கொண்டார். அது மட்டுமன்றி 1998-1999 காலப்பகுதிகளில் விவிலியம் சம்பந்தமான சிறப்பான பயிற்சியைப் பெற்றார். 2011ம் ஆண்டு மீண்டும் இந்தியா சென்று குழுக்களை வழிநடத்தும் விசேட பயிற்சியையும் மேற்கொண்ட இவர் மாகாண உதவித் தலைவராகவும், ஆலோசகராகவும் 09 வருடம் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தற்போது மறைபரப்புச் சபையில் மாகாணச் சபை தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். இவரதும், இவருக்கு உதவியாளராகத் தெரிவுசெய்யப்பட்ட குழுவினர்களதும் பணி சிறக்க இறையாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- தகவல் : சகோ. ஜோசப் ஜஸ்டஸ்

# நம் இறைநம்பிக்கையை ஏன் அர்த்தமுள்ளதாக்க வேண்டும்?

வி. கிறிஸ்டி குணராஜா, முதலியார்குளம் செட்டிகுளம்

நம்பிக்கைதான் வாழ்க்கை! "நம்பிக்கையால் வாழ்வு அடைவர்." ஒவ்வொரு மனிதரும் இறைவனுக்கு உகந்தவர்களாக - இறைமக்களாகத் திகழ்வதற்கே நற்செய்தி அருளப்பட்டிருக்கிறது. கிறிஸ்து இயேசுவின்மீது நம்பிக்கையை ஏற்படுத்தி மீட்பரும் மேய்ப்பரும் அவர் ஒருவரே என்பதை உணர வேண்டும். இம்மையில் அவரைப் பின்பற்றி மறுமையில் நாம் பிரவேசிக்க வேண்டும். எனவேதான் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்திற்கு எமது இறை நம்பிக்கையை நாம் அர்த்தமுள்ளதாக்க வேண்டியுள்ளது.

இக்காலத்தில் துர்உபதேசங்களாலும், பொய்யான தீர்க்கதரிசனங்களாலும், வீணான சடங்காசாரங்களாலும், தவறான கொள்கைகளாலும், போதனைகளாலும் மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். மேலும் கவலைகள், கஸ்டங்கள், சுமைகள், தொல்லைகள், வியாதிகள், பாவங்கள், சாபங்கள் போக்கி சமாதானம் அடைவதற்கு தாங்களாகவே பல பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர். ஈற்றில் எதிலுமே பிரியப்படாது போகின்றனர். இதிலும் சன்மார்க்க வழி ஒன்றே சிறந்தது என எண்ணி ஏமாந்துபோகிறவர்களும் உண்டு. வேறுசிலர் தானதர்மங்களையும் செய்து பார்க்கின்றனர். பலர் யாத்திரைத்தலம், புண்ணியத்தலம் போன்றவற்றைத் தரிசித்து நேர்த்திக்கடன் செய்தும் சலிப்படைந்துபோய் விடுகின்றனர்.

எனவேதான் 2013ம் ஆண்டின் மையக் கருத்தாக "நம் இறை நம்பிக்கையை அர்த்தமுள்ளதாக்குவோம்" என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதில் "ஆண்டவராகிய இயேசுவின்மேல் நம்பிக்கைகொள்ளும்: அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்......." (திருத்தூதர் 16:31) என்ற வார்த்தையானது எமது பிரச்சினைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி தருவதாக உள்ளது. இறைநம்பிக்கையினை விளக்கிக்காட்ட புதிய ஏற்பாட்டில் முக்கியமாக மூன்று புத்தகங்களை பார்க்கலாம். அதில்,

(1) உரோமருக்கு எழுதிய நிருபம் :- விசுவாச வாழ்வின் துவக்கம்பற்றி தெளிவுபடுத்துகிறது.

(2) கலாத்தியருக்கு எழுதிய நிருபம்:- இறைநம்பிக்கை கொண்டவாழ்வின் தொடர்ச்சியைக் காட்டுகிறது.

(3) எபிரேயருக்கு எழுதிய நிருபம் :- விசுவாச வாழ்வின் முடிவு பற்றிக் கூறுகிறது.

### உரோமருக்கு எழுதிய நிருபம்

புனித பவுல் உரோமருக்கு எழுதிய நிருபத்தில் விசுவாச வாழ்வின் துவக்கத்தைப்பற்றிக் கூறுகிறார். கிறிஸ்தவ வாழ்விற்கு அடித்தளமாக அமைவது இறை நம்பிக்கையாகும். இந்நிருபம் எழுதுவதற்கு முன்பு கலாத்தியர் நிருபம் எழுதப்பட்டிருப்பினும் நம்பிக்கையினால் இறைவனுக்கு ஏற்புடையவரே வாழ்வுபெறுவர் என்ற கருத்தையும் உண்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. அது எவ்வாறெனில் "தீச்செயல் அனைத்துமே பாவம்: ஆனால் எல்லாப் பாவமுமே சாவுக்குரியதல்ல" (1யோ 6:16). ஆனாலும் சாவுக்குரிய பாவம் உண்டு, அப்பாவத்துக்காக வேண்டுதல் செய்ய வேண்டும் எனச் சொல்லவில்லை (வச 17). ஏனெனில் இயேசுக் கிறிஸ்துவை மீட்பர் இல்லை என மறுதலிப்பது சாவுக்குரிய பாவமாகும். இறைநம்பிக்கை என்ற நீதிக்குள் இருக்கிறவருக்கு ஆக்கினைத்தீர்வு இல்லை. அவரை விசுவாசியாதவனுக்கு ஏற்கனவே ஆக்கினைத்தீர்ப்பு உண்டாயிற்று.

கத்தோலிக்கர் என்ற போர்வைக்குள் மறைந்திருந்து எம்மதமும் சம்மதம் என்று பெருமையடித்துக்கொண்டாலும் கிறிஸ்து இயேசுவை மறுதலிக்காமல் எச்சரிக்கையாய் இருந்து கொள்ளவேண்டும். காரணம் இயேசுவே, யோவான் நற்செய்தியில் "மகனிடம் நம்பிக்கைகொள்வோர் நிலைவாழ்வைப் பெறுவர். நம்பிக்கை கொள்ளாதோர் வாழ்வைக் காணமாட்டார். மாறாக கடவுளின் சினம் அவர்கள்மேல் வந்து சேரும்" (யோ3:36) என எச்சரிக்கின்றார்.

இதனை இலகுவில் அறிந்துகொள்ளுவதற்கு திருவிவிலியத்தில் வரும் மூன்று விபச்சாரிகளின் நம்பிக்கையையும் அவர்கள் இயேசுவை அறிந்ததனால் தங்களது வாழ்க்கைமுறையை மாற்றிக்கொண்ட தன்மையையும், பிற்காலங்களில் அவர்கள் எடுத்துக்காட்டாக நடந்துகொண்ட உண்மையையும் காணமுடிகின்றது.

**ராகாபு :-**

விலைமகளான அவள் ஒற்றர்களை நன்கு வரவேற்று கீழ்ப்படியாதவரோடு அழியாது தப்பித்துக்கொண்டதும் நம்பிக்கையினால்தான். எபிரேயர் நிருபம் எழுதப்பட்ட அன்று 2000 வருடங்களுக்கு முன்பே சரித்திரத்தில் தோன்றி, பக்தன் தாவீது ராஜாவின் பூட்டனாகிய போவாசைப் பெற்றெடுத்த பாக்கியத்தையும் பெற்றுக்கொண்டாள். இந்நிருபத்தின் விசுவாச வீரர் பட்டியலிலும் (எபி 11:31) அவன் இடம்பிடித்திருப்பதைக் காணமுடிகின்றது.

**சமாரியப் பெண் :-**

யோ4:39,41,42 "நான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார்." என்று கூறி சமாரியாவில் அனேகரை இயேசுவின்மேல் நம்பிக்கைகொள்ளவும் அவரின் நற்செய்தியை கேட்கவும் செய்து உலக மீட்பர் இயேசுதான் என ஏற்றுக்கொள்ளும்படியும் நற்செய்தி அறிவிக்கும் பணியையும் செய்தாள். அதேவேளை இந்தச் சமூகம் என்னை ஏற்றுக்கொள்ளுமா? என்றுகூட அவள் சற்றும் தயங்காமல் சிந்திக்காமல் நற்செய்தியை அறிவித்ததின் பயன் அனேகர் மனம் திருந்தித்திரும்பியிருந்ததை அறியமுடிகின்றது.

**பாவியாய் இருந்த மதலேனாள்**

இவ்வாறே லூக்கா 7:37-38இல் பாவியாய் இருந்த பெண் நறுமணத்தைலம் பூசி இயேசுவின் பாதத்தைக் கண்ணீரால் கழுவி கூந்தலினால் துடைத்தாள். இதன் மூலம் "உனது நம்பிக்கை உன்னை மீட்டது, சமாதானத்துடன் செல்க" என இயேசுவின் வாழ்த்துதலைப் பெற்றாள்.

இவைகள் யாவற்றையும்விட இயேசு சாதாரணமாக மக்களைக் கண்டு பாராட்டிய காரியம் விசுவாசம் எனும் இறைநம்பிக்கைதான். எங்களது நம்பிக்கை எனும் நங்கூரத்தை இயேசுவின்மேல் போடுவோமாயின் என்ன துன்பம் வந்தாலும் சோர்வு சலிப்புகள் ஏற்படாது அவர் பாதுகாப்பார்.

### கலாத்தியருக்கு எழுதிய நிருபம்

இந்நிருபத்தில் இறைநம்பிக்கை கொண்ட வாழ்வின் தொடர்ச்சி எப்படி அமையவேண்டும் எனக் கற்றுத்தரப்படுகின்றது. இங்கு கிறிஸ்தவ வாழ்க்கையானது நாம் இறைவன்மீது கொண்டுள்ள வெளிப்பாட்டைக் காட்டவேண்டும். அதன் மூலமே இறைவனின் பிள்ளை என்பதற்கான உரிமைகளை பெற்றுக்கொண்டவர்களாக வாழ்ந்து காட்டவேண்டும் என போதிக்கப்படுகின்றது. இந்த ஆண்டிலாவது இந்நிருபத்தை ஒரிரு தடவையாவது ஜெபத்துடன் வாசித்து அறிந்துகொள்ளவேண்டும். காரணம் இறைவார்த்தைகளின் பிரதான நோக்கமே நித்திய மீட்பைப்பெறும் நம்பிக்கையை நமக்குத் தருவதேயாகும். அந்த ஆரம்ப நம்பிக்கையுடன் வாசிக்கும்போது மென்மேலும் அதில் முதிர்ச்சியடைந்தவர்களாக ஆகும்படிக்கு இறை வசனங்களில் நம்பிக்கைகொள்ள வேண்டும். இதுவே கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்திற்கு முதல் படியாக அமைகிறது. ஒருவேளை இறைவார்த்தையை விளங்கிக்கொள்ள முடியாதுபோனால், "ஆண்டவரே என்மீது பரிவுகொண்டு உதவிசெய்யும்" என்று வேண்டுதல் செய்யும்போது அவர் பரிவு காட்டுவார். மாற்கு 9:25இல் ஒரு சிறுவனின் தந்தை "எனது நம்பிக்கையின்மை நீங்க உதவும்" என்று இயேசுவிடம் வேண்டுதல் செய்ததை அறிவோம். அவர் நம் பலவீனத்தில் பலன் தர வல்லவராயிருக்கிறார்.

மேலும் இறைநம்பிக்கையின் தொடர்ச்சியானது எமது அன்றாட வாழ்விலும் பிரதிபலிக்கவேண்டும் என அறிவூட்டம் பெறுகிறோம். அதாவது நம்பிக்கையும் நற்செயல்களும் பற்றி தெளிவுபடுத்துகையில், "என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச்சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்கமுடியுமா?" (யாக் 2:14). ஏழ்மையில் இருப்போருக்கு உதவுவதும் நீதியின் பாதையிலும், முன்மாதிரி வாழ்விலும் திகழ்வதும் முக்கியமானது. 17ம் வசனத்திலே நம்பிக்கை செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிர் அற்றதாய் இருக்கும் என அறிவித்தல் தரப்பட்டுள்ளது.

எனவே எம் இறைநம்பிக்கையை அர்த்தமுள்ளதாக்குவதற்கு வாழ்வின் தொடர்ச்சியில் பயணித்திட்ட சிலரது எடுத்துக்காட்டான வாழ்க்கையை இனிக்கண்டுகொள்வோம்.

உதாரணமாக, பர்னபாவை எடுத்துக்கொள்வோம். இவர் இறை நம்பிக்கையில் வல்லவராகத் திகழ்ந்தார். தன் நம்பிக்கையை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டதன் மூலம் கணக்கற்ற மக்கள் இறைவனை அறியவும் அவருக்கு உகந்தவர்களாய் வாழவும் காரணமாய் இருந்தார்.

அதன்படியே புனித பவுல் அடிகளாரும் தன்னைப்பற்றி சாட்சி பகர்கையில் நான் உங்களிடத்தில் வரும்போது பிரசங்கம் செய்ய தகுதியற்றவனாயும் அறிவில் வளராதவனாகவும் இருந்தேன் என்றார். இதில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய முக்கிய விடயம் யாதெனில் இறைநம்பிக்கையை பகிர்வதற்கு பேச்சுத்திறன் அவசியமில்லை என்பதுதான்.

மத்தேயு 9:2இல் நான்கு பேர் தங்களுக்கு இருந்த இறைநம்பிக்கையை திமிர்வாதக்காரனுடன் பகிர்ந்துகொண்டதின் பயன் அவனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு மீட்பு அடைந்தான் என பார்க்கின்றோம். 2தீமோ.1:5இல் லேவிசாள் மற்றும் ஜெனிக்கேயாஸ் ஆகிய இருவரது நம்பிக்கையானது இறைநம்பிக்கையில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயு உருவாக்கம் பெறுவதற்கு ஏதுவாயிற்று.

நம் வீட்டில் உள்ளவர்களுக்கும் இறைஉறவை வளர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் அறிவையும் ஊட்டமுடியும். அதாவது இறைவன் மட்டில் உள்ள நம்பிக்கையை நாம் பகிர்ந்துகொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது இறைவனை மேன்மைப்படுத்துகின்றது. அவரும் எம்மீது மனம் நெகிழ்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடியும்.

இந்த அனுபவத்தைக் கண்ட தாவீது ராஜா கூறுகிறார் "என் தலைவரே, நான் இப்போது எதைப் பார்க்கட்டும். நான் உம்மையே நம்பி இருக்கிறேன் என்றார்." திருப்பாடல் (39:7) "நான் யாரையும் நம்பமாட்டேன் உம்மைத்தான் நம்புவேன். உம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு நீர் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக செய்துமுடிப்பீர்" என்று சொல்லி இறைவனை இறுகப்பற்றினார்.

தேவபிள்ளையே, உன்னைவிட்டு ஒருபோதும் விலகாத இறைவன்மேல் நம்பிக்கை வைத்து கெட்டியாக பிடித்தால் கெட்டுப்போகாமல் கட்டுக்கடங்காத ஆசீர்வாதங்கள் கிட்டியே சேரும் என்பதில் சந்தேகமில்லை. ஆமென் அலேலூயா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூன்று மணித்தியாலயங்கள் கடும் துன்பம்
## (ஏழு வார்த்தைகள் தொடர்பான தியானம்)


தொகுப்பு : திருமதி எம். எ. எம். கபிரியேல் (நீற்றா),
மன்/ நானாட்டான் ம.வி, நானாட்டான்.
தமிழாக்கம் ச. நிலான்


நமது மீட்பர் இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி கல்வாரியில் மரித்தார். இயேசு சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டு கல்வாரிமலையில் உயர்த்தப்பட்டார். அவர் தோற்கடிக்கப்பட்டதாக நினைத்தார்கள். இயேசுவின் நோக்கம் முழு அளவில் வீணாகி விட்டது என்று நினைத்தார்கள். அவரின் எதிரிகள் தாம் வெற்றி வீரர்கள் என்று நினைத்தார்கள். இயேசு தனது வெற்றியை வெளிப்படுத்தினார். இயேசு சிலுவைமூலம் மீட்பராக - உலகத்தின் பெரிய அரசராகத் தன்னை வெளிப்படுத்தினார். அவர் சிலுவையை சாவின் கருவியாக அல்ல, மாறாக வாழ்வின் கருவியாக மாற்றினார். பூமியில் அவரது முழு வாழ்வின் அர்த்தத்தை அவரது கடைசி ஏழு வார்த்தைகளும் வெளிப்படுத்துகின்றன. அவரது ஏழு வார்த்தைகளும் அவரது அன்பையும், அவர் மனித சமூகத்தின் ஆயன் என்பதையும் வெளிப்படுத்துகின்றன. அவரது ஏழு வார்த்தைகளும் மனித விழுமியங்களை மேவி இறைவனை நோக்கி வழிநடத்துகின்றன.




### முதல் வசனம்

*"தந்தையே அவர்களை மன்னியும். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை"*

இயேசு இறைவனிடம் மன்னிப்புக்காகச் செபித்தார். இயேசு மன்னிப்புக் கேட்ட காரணத்தைக் கண்டார். "அவர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறியாமல் செய்கிறார்கள்."

நமது துன்ப வேளைகளில், பிரச்சினைகளில், மக்கள் நமக்கு தீங்கு செய்யும்போது, சித்திரவதை செய்யும்போது அல்லது வெறுக்கும்போது அவர்களுக்காக நாம் செபிக்கின்றோமா? இயேசு அவர்களை மன்னிக்கத் தேடிய காரணத்தை விரும்புகின்றோமா? "எங்களுக்கு எதிராகப் பாவம் செய்பவர்களை நாங்கள் மன்னிப்பதுபோல் எங்கள் பாவங்களை மன்னியும்" என்று செபிப்போம். தந்தையே நாம் எமது முழு உள்ளத்துடன் எமது சகோதரர்களை மன்னிக்க அருள்தாரும். மன்னிக்கும் இயேசு உலகத்திற்கு ஒரு தூண்டுகோலாக உள்ளார்.

**செபம்:-** தந்தையே விழும்போது நாம் மீண்டும் எழ எமக்குத் தந்த வாய்ப்புக்காக நாம் நன்றி கூறுகின்றோம். எமது குற்றங்களின்போது நீர் காட்டும் அனுதாபம் எம்மை மீண்டும் எழும்ப வைக்கின்றன. எமது எல்லாப் பலவீனங்களின்போதும் இயேசுவைப் பின்பற்ற துணிவையும் திடத்தையும் எமக்குத் தாரும். ஆமென்.

### இரண்டாம் வசனம்

*"இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்"*

இரண்டு குற்றவாளிகள் இயேசுவின் இடது பக்கமும் வலது பக்கமும் சிலுவையில் அடிக்கப்பட்டார்கள். இரண்டுபேரும் தீயவர்கள். வழிப்பறிக் கொள்ளை செய்தவர்கள். இரண்டுபேரும் சாவுக்குத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர். இடதுபக்கக் கள்வன் யூதர்களுடன் சேர்ந்து இயேசுவைப் பரிகசித்தார். "நீ கிறிஸ்து என்றால் உன்னையும் எங்களையும் காப்பாற்று!"

வலது பக்கக் கள்வன் அவனைக் கண்டித்தான். "உனக்கு இப்படிச் சொல்ல கடவுள் பயம் இல்லையா? நாங்கள் செய்த பாவத்திற்கு நாம் அனுபவிக்கின்றோம். இவர் பிழையாக ஒன்றும் செய்யவில்லையே".

அவர் இயேசுவின் பக்கம் திரும்பி "ஆண்டவரே உமது இராச்சியம் வரும்போது என்னை நினைவுகூரும்" இயேசு கூறினார். "இன்று முதல் என்னோடு நீ வான் வீட்டில் இருப்பாய்". இறந்து கொண்டிருந்த வலப்பக்கக் கள்வனுக்கு இயேசு பரலோக இராச்சியத்தை வாக்களித்தார். மனம் வருந்திய கள்வனுக்கு மோட்சம் கொடுத்தார். அவனுக்கு வாழ்வின் பரிசு கிடைத்தது. என்ன மாட்சிமையான வாக்குறுதி? என்ன விலைமதிப்பற்ற பெறுபேறு? இந்தத் தோழமை எமக்கும் கிடைக்கும். ஆனால் இயேசுவுடன் நாம் இணைய வேண்டும்.

**செபம்:-** என்றும் அன்புக்குரிய இயேசுவே, மனம் வருந்திய கள்வனுக்கு மோட்சத்தை வாக்குறுதி தந்தீர். உமது பக்கம் நாம் வர அருள்தாரும் ஆமென்.

### மூன்றாம் வசனம்

*"அம்மா இதோ உன் மகன்" சீடரை நோக்கி "இதோ உன் தாய்"*

எங்கள் அன்பான தாய் சிலுவை அருகில் நின்றார். தனது மகனின் மரண தண்டனையைப் பார்க்கும் துணிவு, வீரம் எந்தப் பெண்மணிக்குத்தான் இருக்க முடியும்? கொடூரமான சாவையும், சிலுவைமரப் பாரத்தால் துன்புறும் மகனையும் பார்க்கும்போது அவள் ஆன்மா துடிதுடித்தது.

இயேசுவின் இதயம், உலகத்திற்குத் தன்னைக் கொண்டுவந்த தாயைப் பற்றிச்சிந்தித்தது. தனது தாயை நினைத்து வேதனையால்துடித்தது. தன் தாயின் இதய வேதனையை இயேசு புரிந்துகொண்டார். தனது தாய் தன்னை இழப்பதையிட்டு துன்புறுகின்றார் என்று இயேசுவுக்குத் தெரிந்தது. தனக்குப்பதிலாக அவளைப் பராமரிக்க மகன்போல ஒருவர் தேவை என இயேசு உணர்ந்தார். எனவேதான் இயேசு இதோ உன் மகன் என்றார். பின்னர் அருளப்பரை நோக்கி, இதோ உன் தாய் என்றார்.

மற்றவர்கள் வாழ்க்கையில் இழப்புக்களால் மனம் சோர்வடைந்து அல்லது துன்புறுத்தப்படும்போது இந்த வார்த்தைகளை நாம் சொல்லுகின்றோமா? நாம் அடிக்கடி இதில் தவறுகின்றோம். இதோ உன் மகன் என்று இயேசு சொன்னதை மாதா ஒரு போதும் மறக்கவில்லை. இதோ உன் தாய் என்று இயேசு சொன்னதை ஒருபோதும் மறக்காது இருப்போம்.

**செபம்:-** ஓ துக்கப்படும் தாயே, எம்மை உமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளும். உமது கீழ்ப்படிவுள்ள மகனைப் பின்பற்றவும் அவர் வழியில் நடக்கவும் எம்மை வழிநடத்தியருளும் ஆமென்.

### நான்காம் வசனம்

"என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்?

இது உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்கவொரு கதறல். இயேசு தன்னை முழுமையாக கைவிட்டதாக அழுத அழுகை அவர் கடவுளிடமிருந்து பிரிந்துவிட்டார் எனக் காட்டுகின்றது. எப்படியாயினும் கிறிஸ்துவின் மனித அவதாரமானது அவரது இறை நிலையில் இருந்து பிரியவில்லை. அவர் இறைநிலையில் இருந்து அல்ல மனித நிலையில் இருந்தே இப்படிக் கதறினார். கிறிஸ்துவின் அழுகையானது எந்தவித ஆறுதல் இன்றி கடவுளால் கொடுக்கப்பட்ட துன்பமாகும்.

கரங்களில், பாதங்களில், உணர்ச்சி நிறைந்த நரம்புகளில் கொடூர ஆணிகளால் துளைக்கப்பட்டு சிலுவையில் தொங்கிய இயேசுவை நினைத்துப்பார்? உடல் பாரமானது அவரது காயங்களை பெரிதாக்கி உடல் வேதனைகளைக்கூட்டி உடலைப் பற்றி எரியச் செய்தது. எவ்விதத் துன்பம் வந்தாலும், இறை நம்பிக்கையை நாம் இழக்கக்கூடாது. அவரது உதவிக்காக நாம் அழுவோம்.

**செபம்:-** விண்ணகத் தந்தையே, நாம் அடிக்கடி சந்தோசத்தைவிட துக்கத்தை கண்ணீர் கம்பளையுடன் எதிர்கொள்கின்றோம். சிலுவையில் தொங்கும் இயேசுவிடம் எம்மைக் கொணர்ந்து எங்கள் செபத்தைக் கேட்டருளும். எமது நோவுகள், துன்பங்களின்போது சந்தோசத்தையும் சமாதானத்தையும் உணரச் செய்தருளும் ஆமென்.

### ஐந்தாம் வசனம்

*"நான் தாகமாய் இருக்கிறேன்"*

உடல் சார்பில் இயேசு தாகமாய் இருந்தார். கடைசி இராப்போசனத்தின் பின்பு அவருக்கு உணவு, நீர் கிடைக்கவில்லை. அவர் கசையால் அடிக்கப்பட்டார். முள்முடியால் கிழிக்கப்பட்டார். இரத்தம் சிந்தினார். கல்வாரிப் பயணத்தில் நொறுக்கப்பட்டார். அவரது காயங்களுடன் சிலுவையில் உயர்த்தப்பட்டபோது காயங்கள் பெரிதாகி கடும் காய்ச்சலைச் சந்தித்தார். உடல் ரீதியில் தாகம் அடைந்தார். அவரின் உண்மையான தாகம் தண்ணீர் அல்ல, எமது அன்பே! இயேசு தனது அன்பை நாம் பரிமாற வேண்டுமென தாகமாயிருக்கின்றார். தனது கட்டளைகளை நாம் அனுசரிக்க வேண்டுமெனத் தாகமாயிருக்கின்றார். தனது அன்பை நாம் பிறருக்கு வழங்கவேண்டுமெனத் தாகமாய் இருக்கின்றார். எமது இதயம் மனம் மாற வேண்டுமெனத் தாகமாயிருக்கிறார். இயேசுவின் அன்பைப் பரிமாற அவர் காட்டியதைக் கடைப்பிடித்தால் அவரின் தாகத்தைத் தீர்க்க எம்மால் முடியும்.

**செபம்:-** என் யேசுவே, சிலுவையில் நீர் அனுபவித்த தாகமானது எனது கடமையை, பொறுப்புணர்ச்சியை புரிந்து கொள்ளச் செய்வதாக! ஆமென்.

### ஆறாம் வசனம் (வார்த்தை)

*'எல்லாம் முடிந்தது'*

இயேசு எதை நிறைவேற்றினார்? இறைவாக்கை இயேசு நிறைவேற்றினார். இயேசு வாக்களிக்கப்பட்டதன் அடையாளமாக உள்ளார். கிறிஸ்து தன்னைப்பற்றி கூறப்பட்ட விடயங்கள், வகைகளை நிறைவேற்றினார். "நானே நல்ல ஆயர், நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக உயிரைக் கொடுப்பான்" கிறிஸ்து உண்மையான ஆயனாக இருந்து விலையுயர்ந்த இரத்தத்தைச் சிந்தி தனது திருச்சபையைப் போதனையாலும், இறைத்தூண்டுதலாலும், வாழ்வுதரும் அருளாலும் வழிநடத்துகின்றார். இயேசு தனது வாழ்வை எமக்காக அர்ப்பணித்தார்.

**செபம்:-** விண்ணகத்தந்தையே எமது, பொறுப்புணர்ச்சியை உணர்ந்து அருட்சாதன வாழ்வு மூலமும், உமது கட்டளைகள் மூலமும் உம்மிடம் நெருங்கி வந்து உமக்கேற்ற பெறுமதிமிக்க பிள்ளைகளாக வாழ உதவி செய்யும் ஆமென்.

### ஏழாம் வசனம்

*"தந்தையே உமது கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்"*

இருள் சூழ்ந்தது. ஆலயத்தின் திரைச்சீலை நடுப்பக்கம் கிழிந்தது. இயேசு உரத்த குரலில் "தந்தையே உமது கரங்களில் எனது ஆவியை ஒப்படைக்கின்றேன்." (லூக். 23: 44-46) என்று கூறி ஆவியை ஒப்படைத்தார். இயேசு தன்னை உண்மையான கடவுளின் மகன் எனப் பிரகடனம் செய்தார்.

மரணம் மனிதனுக்கு நம்பிக்கையீனத்தையும், சோகத்தையும், சூனியத்தையும் உலகிற்கு கொண்டுவருகின்றது. ஆனால் இயேசுவின் சாவு நம்பிக்கையீனத்தை அல்ல நம்பிக்கையை, அழிவை அல்ல மாற்றத்தைக் கொண்டுவந்தது. சாவு அழிவிலிருந்து அழியாமைக்கு நம்மைக் கொண்டுவருகின்றது. கண்ணீர்க் கணவாயிலிருந்து எம்மைவிடுவித்து இறை இராச்சியத்தில் முடிவில்லாப் பிரசன்னத்தை - சந்தோசத்தைத் தருகின்றது.

**செபம்:-** விண்ணகத் தந்தையே, உமது மகனின் இறப்பின் மூலம் முடிவில்லாத வாழ்வின் கதவைத் திறந்து புனிதர்களோடும், தூதர்களோடும் முடிவில்லா வாழ்வில் மகிழச் செய்திட வாழ்வின் கொடையை உமக்கு ஏற்றபடி வாழ வரம்தாரும் ஆமென்.

# மன்னார் மறைமாவட்டத்திற்கு இரண்டு புதிய குருக்கள் வாழ்க்கை வரலாறு

### அருட்பணி. லோறன்ஸ் லியோன்

அருட்பணி. லோறன்ஸ் லியோன் அவர்கள் முத்தரிப்புத்துறைப் பங்கு, முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி தோமஸ் பீற்றர் லியோன், மெற்றில்டா குரூஸ் தம்பதிகளின் புதல்வனாக 19.10.1983இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மன்/ முத்தரிப்புத்துறை றோ. க. த. க பாடசாலையிலும், உயர் கல்வியை புனித/ சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணி. யூட் குரூஸ் அவர்களினால் அழைத்தலில் ஊக்கம் பெற்று மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்தார். பின்னர் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

27.10.2012 அன்று திருத்தொண்டராக உயத்தப்பட்ட இவர் தேவன்பிட்டி ஆலயத்திலும், தலைமன்னார் ஆலயத்திலும் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை ஏப்ரல் 13ஆம் திகதி காலை 09.00 மணிக்கு முத்தரிப்புத்துறை புனித செங்கோல் மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### அருட்பணி ரெறன்ஸ் கனிஸ்ரன் குலாஸ்

அருட்பணி. ரெறன்ஸ் கனிஸ்ரன் குலாஸ் அவர்கள் வங்காலை பங்கு, வங்காலைக் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி யோ. றவ்வாயல் குலாஸ், வினோதினி குரூஸ் தம்பதிகளின் புதல்வனாக 07.03.1984இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மன்/ புனித ஆனாள் ம. ம. வி. பாடசாலையிலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.


அருட்தந்தை ஜே. தேவசகாயம்பிள்ளை அவர்களினால் அழைத்தலில் ஊக்கம் பெற்று மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்தார். பின்னர் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

27.10.2012 அன்று திருத்தொண்டராக உயத்தப்பட்ட இவர் தாழ்வுபாடு ஆலயத்திலும், முருங்கன் ஆலயத்திலும் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார். இவர் தனது முதல் திருப்பலியை ஏப்ரல் 14ஆம் திகதி காலை 06.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# அருள்பணியாளர்கள் மற்றும் குருத்துவ மாணவர்களின் தாய்மாருக்கு திருப்பீடக் குருக்கள் பேராயத் தலைவர் கடிதம்




உலகின் அனைத்து அருள்பணியாளர்கள் மற்றும் குருத்துவ மாணவர்கள் தங்களது இறையழைப்பைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த அவர்களின் தாய்மாருக்குக் கர்தினால் மவ்றோ பியாசென்சா (Mauro Piacenza.) நன்றி தெரிவித்துள்ளார்.

இறைவனின் அன்னை பெருவிழாவை முன்னிட்டு உலகின் அனைத்து அருட்பணியாளர்கள் மற்றும் குருத்துவ மாணவர்களின் தாய்மாருக்குத் திறந்த கடிதம் ஒன்றை எழுதியுள்ள திருப்பீட குருக்கள் பேராயத் தலைவர் கர்தினால் மவ்றோ பியாசென்சா, இளைஞர்கள் இறையழைத்தலைப் பெறுவதற்கு உதவுவதில் குடும்பங்களின் பங்கைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கடிதம் குறித்து வத்திக்கான் வானொலிக்குப் பேட்டியளித்த கர்தினால் குருத்துவ வாழ்வைத் தேர்ந்துகொள்பவரின் வாழ்வில் கிறிஸ்து செயல்பட்டாலும், தாய்மார் அதில் சிறப்புப் பங்கு வகிக்கின்றனர் எனவும் கூறினார்.

புனித அகுஸ்தீனாரின் தாய் புனித மொனிக்காவின் வாழ்வு பற்றி விளக்கிய கர்தினால், புனித மொனிக்கா அனைத்துத் தாய்மாருக்கும் எடுத்துக்காட்டாய் இருக்கின்றார் எனவும் கூறினார்.

தனது கன்னி உதரத்தில் இறைவார்த்தையை வரவேற்று உன்னத குருவாம் இயேசுக் கிறிஸ்துவைப் பெற்றெடுத்து தனிப்பட்ட விதத்தில் நமது மீட்புப் பேருண்மையில் பங்கு கொண்ட அன்னை மரியாவை நினைப்பது போன்று அனைத்து அருட்பணியாளர்களின் தாய்மாரையும் திருஅவை நினைக்கின்றது என்றும் கர்தினால் கூறினார்.

## திருத்தந்தை 16ம் பெனடிக்ட் நம் இதயங்களை விட்டு விலகமாட்டார்!

### வோஷிங்டன் கர்தினால்

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் பாப்பிறைப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் நம் இதயங்களைவிட்டு விலகமாட்டார் என வோஷிங்டன் கர்தினால் டொனால்ட் (Donald W.Wnerl) கூறினார்.

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களுக்கென நிகழ்த்திய நன்றித் திருப்பலியில் கலந்துகொண்ட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விசுவாசிகளிடம் இவ்வாறு உரைத்த கர்தினால், திருத்தந்தையின் பதவி விலகல், அகிலத் திருஅவையின் தேவைகளை நன்கறிந்த அவரது திறமையையும் பெருந்தன்மையையும் காட்டுகின்றது என்று கூறினார்.

மேலும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் திருத்தந்தை, உலகப்போக்கு அதிகரித்துவரும் இன்றைய சமூகங்களில் விசுவாசத்தை உயிர்த்துடிப்புள்ளதாக்குவதை ஊக்குவிப்பவராகவும், நவீன சமூகத் தொடர்புச்சாதனங்களில் தேர்ந்தவராகவும் இருப்பது நல்லது எனவும் அவர் கூறினார்.

புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் கொன்கிளேவ் கர்தினால்கள் அவையில் கர்தினால் டொனால்ட்டும் பங்குகொள்வார்.

## மொன்சிஞ்ஞோர் கமிலஸ் அடிகளார் திருத்தந்தையினால் பதவி உயர்வு பெற்றார்!

வத்திகானின் நற்செய்தி அறிவிப்பு பேராயத்தில் (Congregation for the Evangelization of Peoples) பணியாற்றி வரும் யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த மொன்சிஞ்ஞோர் கமிலஸ் நிமலன் யோண்பிள்ளை அடிகளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களால் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடந்த நவம்பர் 21ம் திகதியன்று இச்சபையின் அலுவலக தலைமை அதிகாரியாக (Capo ufficio- Office Head) திருத்தந்தை இவரை நியமித்துள்ளார்.

வத்திகான் அலுவலகங்களிலுள்ள மிகமுக்கியமான அதியுயர் பதவிகளுக்குரிய அதிகாரிகள் திருத்தந்தையினால் நேரடியாக நியமிக்கப்படுவார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மொன்சிஞ்ஞோர் கமிலஸ் நிமலன் அடிகளார் உரோமை பல்கலைகழகங்களில் கோட்பாடு இறையியல் துறையிலும் (Dogmatic Theology) திருச்சபை சட்டத்துறையிலுமாக (Canon Law) இரண்டு கலாநிதிப் பட்டங்கள் பெற்றவராவார்.

இவர் திருத்தந்தையிடமிருந்து பெற்றுள்ள இப்பதவி உயர்வு குறித்து மன்னார் மறைமாவட்டம் பெருமையடைவதோடு "மன்னா" பத்திரிகையும் தனது வாசகர்களோடு இணைந்து அடிகளாருக்கு தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

## புனிதத் திருத்தந்தையருள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்டும் ஒருவர்

### இஸ்பெயின் ஆயர் கருத்து

கடந்த நூற்றாண்டு முழுவதும் இறைவன் அசாதாரணத் திருத்தந்தையர்களால் திருஅவையை ஆசீர்வதித்துள்ளார் என்று இஸ்பானிய ஆயர் ஒருவர் கூறினார்.

கடந்த நூற்றாண்டில் திருஅவை கொண்டிருந்த திருத்தந்தையர்களுள் ஏறத்தாழ அனைவருமே புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர் அல்லது அந்த நிலைக்கு உயர்த்துவதற்கான நடைமுறையில் உள்ளனர் என இஸ்பெயின் நாட்டின் கோர்டோபா (Cordoba) மறைமாவட்ட ஆயர் டெமெற்றியோ பெர்மாண்டஸ் (Demetrio Femandez) கூறினார்.

திருத்தந்தையர் 10ம் பத்திநாதர், 12ம் பத்திநாதர் 23ம் அருளப்பர், 6ம் பவுல், முதலாம் அருள் சின்னப்பர், இரண்டாம் அருள் சின்னப்பர் ஆகியோர் வரிசையில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களும் தற்போது இணைந்துள்ளார் என்றும் ஆயர் பெர்மாண்டஸ் கூறினார்.

## 2015ம் ஆண்டில் எட்டாவது அனைத்துலக குடும்ப மாநாடு



எட்டாவது அனைத்துலக குடும்ப மாநாடு 2015ம் ஆண்டு செப்ரம்பர் 22 முதல் 27 வரை, அமெரிக்க ஐக்கிய நாட்டு பிலடெல்பியாவில் நடைபெறும் எனத் திருப்பீடம் அறிவித்துள்ளது.

எட்டாவது அனைத்துலக குடும்ப மாநாடு குறித்த விபரங்களை வெளியிட்ட பிலடெல்பியா பேராயர் Charles J. Chaput, குடும்பங்களின் ஒருங்கிணைப்பை நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஊக்கப்படுத்தி ஆதரவுளிக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு சமுதாயம் நலமானதாக மாறும் என்று கூறினார்.

உலகின் அனைத்துக் குடும்பங்களுக்கும் ஆதரவளித்து அவற்றை உறுதிப்படுத்தும் வழிகளைத் தேடுவதற்கென 1994ம் ஆண்டில் முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அனைத்துலக குடும்ப மாநாட்டைத் தொடங்கிவைத்தார்.

## கச்சதீவுூராகவும் இலங்கைக் கொடிகள் புன்சிரிப்புடனான இராஜபக்ஷ - பதாகைகள்



மஹிந்த ராஜபக்ஷ புன் சிரிப்புடன் காணப்படும் பதாகைகள் காணப்பட்டன.

பாக்கு நீரிணையிலுள்ள குட்டித் தீவான கச்சதீவின் நுழைவாயிலில் வருகை தரும் விருந்தாளிகளுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் பதாகையை இலங்கை அரசாங்கம் வைத்திருந்தது.

'இலங்கைக்கு நல்வரவு' என்ற வாசகங்கள் அந்தப் பதாகையில் காணப்பட்டன. அதன் இரு பக்கங்களிலும் இலங்கைக் கொடிகள் காணப்பட்டன.

பாதுகாப்புச் சோதனைகளின் பின்னர் தீவுக்குள் பிரவேசித்த போது இலங்கை ஜனாதிபதி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கு வருகை தருவோரை ஜனாதிபதி புன்முறுவலுடன் வரவேற்பதாக பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

"ஓ இந்தத் தடவை திருவிழாவுக்கு ராஜபக்ஷ எம்மை வரவேற்கின்றார்" என்று தமிழக குடும்பத்தலைவர் ஒருவர் தனது குடும்பத்தினரிடம் கிசுகிசுத்தார்.

20 மீற்றருக்கு ஒரு கொடி என்று தீவு அடங்கலும் கொடிகள் காணப்பட்டன. இவ்வளவு பெருந் - தொகையான கொடிகள் கட்டப்பட்டிருந்தமை இதுதான் முதற்தடவையென கிராமமாக கச்சதீவு செல்லும் யாத்திரிகர்கள் கூறினர்.

## திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் வாழ்க்கை வரலாறு



சிறுவனாக



இளைஞனாக



குருவாக



கர்தினாலாக



திருத்தந்தையாக


1927ம் ஆண்டு சித்திரை மாதம் 16ம் திகதி ஜேர்மனியில் பவோரியா பிராந்தியத்திலுள்ள மார்க்டல் எனும் இடத்தில் ஜோசப் ரட்ஸிங்கர் மற்றும் மரியா பெயின்ட்னர் தம்பதிக்கு மகனாகப் பிறந்த திருத்தந்தையின் இயற்பெயர் ஜோசப் அலோசியஸ் ரட்ஸிங்கர் என்பதாகும். அவரது தந்தை ஒரு பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றினார்.

இந்நிலையில் திருத்தந்தை தனது 14வது வயதில் ஜேர்மனிய சர்வதிகாரி ஹிட்லரின் இளைஞர் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அக்காலகட்டத்தில் இளம் ஜேர்மனியர்களை படையில் இணைத்துக்கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இந்நிலையில் திரோன்ஸ்ரியன் மதப் பாடசாலையில் இணைந்து கல்வி கற்றுக்கொண்டிருந்த திருத்தந்தையின் கல்விக்கு இரண்டாம் உலகப்போர் இடையூறாக இருந்தது. இதன்போது அவர் ஜேர்மனிய முனிச் நகரில் செயற்பட்ட விமான எதிர்ப்புப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

எனினும் இரண்டாம் உலகப்போரின் முடிவில் அவர் ஜேர்மனிய இராணுவத்தில் இருந்து வெளியேறினார். 1945ஆம் ஆண்டில் போர்க் கைதியாக நேசப் படையினரால் குறுகியகாலம் அவர் தடுத்துவைக்கப்பட்டார். அவர் 1959ஆம் ஆண்டிலிருந்து 1966ம் ஆண்டு வரை பொன் பல்கலைகழகத்தில் பேராசிரியராகச் செயலாற்றினார். 1977ல் அவர் முனிச் கர்தினாலாக பெயர் குறிப்பிடப்பட்டார். ஜேர்மனிய மற்றும் வத்திகான் பிரஜாவுரிமையைப் பெற்ற இவர், புனித விசாரணை அலுவலகம் என ஒரு சமயம் அழைக்கப்பட்ட வத்திக்கானில் உள்ள நம்பிக்கைக் கோட்பாடு சமாசத்தின் தலைவராக 24 வருட காலம் சேவையாற்றினார்.

திருத்தந்தை 2ஆம் ஜோன் போலின் மறைவையடுத்து 2005ஆம் ஆண்டு தனது 78வது வயதில் திருத்தந்தையாக பதவிப் பொறுப்பேற்ற மிகவும் வயதான திருத்தந்தை என்ற பெயரை திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் பெற்றார். அவர் திருத்தந்தையாக பதவியேற்ற 8வது ஜேர்மனியராக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவர் பல மொழிகளில் பேசும் வல்லமையைக் கொண்டவராகவும் உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்......!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 17.

**கண்ணை மூடிக்கொண்டு காசை வீசக்கூடாது**

புலம்பெயர்ந்து வாழுகின்ற நம் மக்களில் பலர், தாங்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடங்களுக்கு இப்போது வந்து போகிறார்கள். இது உள்நாட்டில் வாழ்பவர்களுக்கும் புலத்திலிருந்து வருபவர்களுக்கும் இடையில் ஆழ்ந்த உறவுகளைப் பலப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. சிறப்பாக புலத்தில் பிறந்து வளர்ந்து வாழுகின்ற இளையவர்கள் ஆண்டுதோறுமோ, இரண்டாண்டுக்கு ஒரு தடவையோ அல்லது அவர்களின் வசதிக்கு ஏற்பவோ வந்துபோவதால் உறவுகள் வளர அது உதவியாய் இருக்கும்.

புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகின்றவர்களில் சிலர், உள்நாட்டில் சில முதலீடுகளில் ஈடுபடுகிறார்கள். இது நல்லது, பாராட்டப்பட வேண்டியது. இதுபோன்ற முயற்சிகள் வருமானத்தை ஏற்படுத்தக்கூடியதாக, தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக்கூடியதாக அமையும்போது இங்குள்ள வளரும் சமூகத்திற்கு அது வரப்பிரசாதமாக அமைந்துவிடும்.

இவற்றைவிட புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகின்ற இன்னும் சிலர் பெரும் தொகைப் பணத்திற்குக் காணிகளை வாங்குகிறார்கள். ஒன்று, இரண்டு லட்சம் பெறுமதியான காணிகளை ஒன்பது, பத்து லட்சத்துக்கு ஏற்றி வைத்திருப்பவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நம் சொந்தங்கள் அல்லது புலம்பெயர்ந்து வாழ்வோரின் உள்நாட்டில் வசிக்கும் உறவுகள். இந்தப் பட்டியலுக்குள் புலம்பெயர்ந்து வாழும் சொந்தங்கள் எல்லாரையும் வைத்துப் பார்க்காவிட்டாலும் காசுக்குமேல் காசு வைத்திருக்கின்ற உறவுகளில் கணிசமான ஒரு பகுதியினரைக் கூறலாம்!

அண்மையில் எனக்குத் தெரிந்த ஒருவரின் நண்பர் புலம்பெயர் நாடு ஒன்றில் இருந்து வந்தவர். அவர் 80 லட்சம் ரூபாவுக்குப் பேசி வாங்க இருந்த வளவை, இன்னுமொரு புலம்பெயர் நாட்டிலிருந்து வந்த இன்னுமோர் அன்பர், "நான் 90 லட்சம் தாறன், எனக்குத் தாவன்..." என சுமார் இருபது, முப்பது லட்சம் ரூபா பெறுமதியான அவ்வளவை 90 லட்சம் கொடுத்து வாங்கியிருக்கிறார்! புலம்பெயர் நாடொன்றில் இருந்து வந்த வேறொருவர், "எவ்வளவு கொடுத்தெண்டாலும் அந்தக் காணியை வாங்கிப்போடுவன்" என வேறொரு காணி விவகாரத்தில் மற்றொருவர் கூறியது இப்போது நினைவுக்கு வருகிறது.

சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி என்பதைப் போல கேட்பாரற்று, காய்ந்து போய்க் கிடந்த வளவுகளை என்ன விலைகொடுத்து வாங்குகிறார்கள் தெரியுமா! இவ்வளவு பணமும் இவர்களுக்கு எப்படிக் கிடைக்கிறதோ, எப்படிச் சம்பாதிக்கிறார்களோ தெரியாது! 'அது அவனுக்குத்தான் வெளிச்சம்!'. ஆனால், வளவுக்குமேல் வளவையும், காணிக்குமேல் காணியையும் வாங்கியும்; கடைக்குமேல் கடையை, வீட்டுக்குமேல் வீட்டைக் கட்டியும் தள்ளுகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது. சில பிரதேசங்களில் வளமான, செழிப்பான தோட்டக் காணிகளை நூர்த்து கடைகளைக் கட்டுகிறார்கள்! ஒரு நேரத்தில் தெருநாய்கள் படுத்துறங்க உதவியாய் இருக்குமோ என்னவோ?

**மாப்பிள்ளைக்கு நம்மூரில் எப்போதும் 'மவுசு'தான்**

மழைகாலத்தில் மரக்கறிக்கு விலை அதிகரிக்கிறது. அது நியாயமானது. காரணம், உற்பத்தி செய்வதில் ஒருபகுதி எப்படியும் மழையினால் அழிந்துபோகும் வாய்ப்பு இருப்பதனால் விவசாயி உற்பத்திப் பொருளின் விலையினை அதிகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். அத்துடன் 'நிரம்பல்' குறைந்து, 'கேள்வி' அதிகரிக்கின்றபோது அல்லது அப்படியே இருக்கிறபோதுகூட விலை அதிகரிப்பது இயல்புதானே. பொருளியல் நோக்கில், இங்கு 'நிரம்பல்' என்றால் உற்பத்திப்பொருள், 'கேள்வி' என்றால் மக்களின் தேவை அல்லது விலை என விளங்கிக்கொள்ளலாம். அன்று படித்த பொருளியல் பாடம் இப்போதும் இவருக்கு நன்றாகப் பயன்படுவதை நினைத்துப் பெருமைப்படுவீர்கள் என நீங்கள் நினைப்பதாக நான் நினைத்து, சந்தோசப்பட வேண்டியதுதான்!!!

இது ஒரு புறம் இருக்க, மறு புறம், நம் தமிழ் பிரதேசங்களில் 'மாப்பிள்ளை'க்கு 'மவுசு' எப்போதும்போல இப்போதும் ஏறிக்கொண்டுதான் போகிறது. மாப்பிள்ளைக்கான 'நிரம்பல்' குறைந்து 'கேள்வி' எக்கச்சக்கமாகக் கூடிக்கொண்டே போவது மாப்பிள்ளைக்கு 'மவுசு' ஏறிக்கொண்டும் எகிறிக்கொண்டும்போக ஒரு முக்கிய காரணமாகும். இது, 30ஆண்டுகாலப் போர் நமக்குத் தந்த சீதனங்களுள் ஒன்று! அதனாலோ என்னவோ, சில 'நல்ல நல்ல மனிதர்கள்'கூட, 'நல்ல நல்ல சீதனத்தை' வாய்விட்டுக் கேட்டு, சில சந்தர்ப்பங்களில் கெஞ்சி மன்றாடி வேண்டுமானால் கூத்தாடி, வாங்கிக் கொள்கிறார்கள். 05, 10, 15, 20, 25, 30, 40, 50 லட்சம் என்று சாதாரணமாக ஆயிரம், இரண்டாயிரம் ரூபாவை கைமாற்றாகவோ கடனாகவோ கேட்பதுபோல மாப்பிள்ளைக்கு சீதனத்தைக் கேட்கிறார்கள். "பெத்தாலும் இரண்டு ஆம்பிளய, 'டொக்ரர'(Doctor), 'என்சினியர'(Engineer) பெறவேணும் கண்டியோ. அப்பிடி பெத்திற்றால், அவனுக்கு அதிஸ்ரம்தான். இல்லையெண்டு இரண்டு பெண்டுகள பெத்தானென்டால், அவன் பாடு நாபடாத (நாய்படாத) பாடுதான்!" என்று திருமண வீடொன்றில் இரண்டு பெரியவர்கள் பேசிக்கொண்டது நினைவிருக்கிறது.

**பால்மணம் மாறாத பச்சிளம் பாலகன்போல!**

"என்னப்பா நீ படிச்ச பிள்ளை, கொஞ்சம் யோசிக்கவேணும். சீதனம் கேட்கிறாங்கள்தான்!... அதுக்கு, கண்மண் தெரியாமக் கேட்கிறதே?" என 'எஞ்சினியர்', 'டொக்ரர்' மாப்பிள்ளையிடம் சொன்னால்; அவர், தான் ஓர் அப்பாவி, மூக்கைப் பிடித்தால் வாயைத் திறக்கத் தெரியாத பால்மணம் மாறாத பச்சிளம் பாலகனைப்போல இருந்துகொண்டு கூறுவார், "உண்மையில, எனக்கு ஒன்றும் தெரியாது! உண்மையில, சீதனம் வாங்க எனக்கு விருப்பம் இல்ல!! உண்மையில, வீட்டாக்கள்தான் கேட்கிறாங்கள்!!! உண்மையில, என்னால ஒன்றும் செய்ய ஏலாமல் இருக்குது!!!!" எனப் பொய்(யா) வாக்குரைப்பார். இக்குழுவில் பல தரத்தாரும், திறத்தாரும் மிக உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களும் அடங்குகிறார்கள் என்பதுதான் விந்தைக்குரிய விடயம்! அப்படிப்பட்டவர்களுக்குத்தான் 'விலை'யும் அதிகமாக இருக்கிறது.

**கொஞ்சம் பிறரன்போடு நடந்துகொள்ள வேண்டும்**

புலம்பெயர் மண்ணில் இருந்து தம் (நம்) சொந்த ஊர் வருகின்ற நம் உறவுகள் இவ்விடயங்களில் கொஞ்சம் பிறர் அன்போடு நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் உள்ளூர் ஏழையர்களின் பிரார்த்தனை! 'ஸ்ரெலிங் பவுண்ஸ்', 'டொலர்', 'யூரோ' ஆகியவற்றில் வைத்திருப்பவர்கள்: அவற்றை மாற்றி ரூபாவில் பல இலட்சங்களை வைத்துக்கொண்டு, தங்கள் உறவுகளுக்கு சீதனமாக அள்ளிக்கொடுத்து, திருமணத்தை செய்துவைத்துப் போனால், இங்கு மிகவும் வறுமையில் வாழுகின்ற - நாளாந்த வாழ்வுக்கே போராடிக்கொண்டிருக்கின்ற 'குமர்கள்' எப்போது கரை சேர்வது? இவ்வளவு இலட்சத்தையும் ஆசைக்குக்கூடப் பார்க்காமல் செத்துப் போகவேண்டியதுதான்!... ஆயினும், புலம்பெயர் மண்ணில் வாழுகின்ற குறிப்பிடத்தக்க இளையோர் எவ்வித கொடுக்கல் வாங்கலும் இன்றி இங்குள்ளவர்களை மணம்புரிந்து கொள்வதையும் நாம் நன்றியோடு நினைக்கிறோம்.

**பட்டினி கிடந்தாலும் பதக்கங்களோடுதான் கிடப்பார்கள்!**

'இலண்டனில் தமிழர் ஒருவரின் வீட்டில் 200 பவுண் நகையும் 18 ஆயிரம் 'ஸ்ரெலிங்' பவுண்களும் களவாடப்பட்டுள்ளன...' என 13.10.2012 அன்று பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்தார்கள். இதுபற்றிய என் தனிப்பட்ட கருத்து ஒருபுறம் இருக்க, இதுபோல பலர் புலம்பெயர் மண்ணில் நம்மவர்கள் 25, 50, 75, 100, 150, 200 என போட்டி போட்டுக்கொண்டு களவு கொடுத்திருக்கிறார்கள்.

'தமிழ் மக்கள், அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள், வறுமையில் பட்டினி கிடந்தாலும் நகைகளை கழுத்தில் மாட்டிக்கொண்டுதான் பட்டினி கிடப்பார்கள்', 'அன்றாட செலவுக்குப் பணம் இல்லாவிட்டாலும் நிறைய நகைகளை தமிழர்கள் தங்கள் வீடுகளில் நிச்சயமாக வைத்திருப்பார்கள்' என்ற அபிப்பிராயம் தமிழ் மக்கள் வாழுகின்ற புலம்பெயர் நாடுகளின் ஏனைய மக்கள் மத்தியில் பரவலாக நிலவுவதை அவதானிக்கலாம். இதனால், தமிழ் மக்களின் வீடுகளையே கொஞ்சக் காலமாகக் கொள்ளையர்கள் குறிவைத்துக் கொள்ளையடிக்கிறார்கள் என்றால் எம்மைக் (தமிழ் மக்கள்) குறித்து ஏனைய மக்கள், கொள்ளையர்கள் கொண்டிருக்கின்ற கருத்து எப்படிப்பட்டது என்பதைக் கணித்துக்கொள்ளுங்களேன்!

**'கோல்சேல்' (whole sale) கொள்ளை!**

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன், நாம் சிறுவர்களாய் இருந்தபோது வங்கிகளில் 40, 50 பவுண்களையும் 10, 15லட்சம் ரூபாக்களையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்களாம் என்றுதான் மக்கள் பேசிக்கொள்வார்கள். 'வீடொன்றில் களவுபோய்விட்டது', 'வங்கியொன்றில் கொள்ளையடித்து விட்டார்கள்' என்றுதான் சொல்லக் கேட்டிருப்போம் அல்லது பத்திரிகைச் செய்திகளில் படித்திருப்போம். ஆனால், இப்போது நம் நாட்டு வங்கிகளிலும் பார்க்க வெளிநாடுகளில் வாழும் கணிசமான தமிழ் மக்களின் வீடுகளில் கூடுதலான பவுண்கள் இருப்பதாகவே தெரிகிறது. அதனால்தான் வெளிநாட்டுக் கொள்ளையர்கள் அங்குள்ள வங்கிகளில் களவு எடுக்காமல் தமிழர்களின் வீடுகளில் கொள்ளைடிக்கிறார்கள். ஏனெனில், வங்கிகளைவிட தமிழர்களின் வீடுகளில் அதிக வசூல் கிடைக்கும் என்பதாலும், வங்கிகளைவிட தமிழர் வீடுகளில் 'லேசாக' கொள்ளையடித்துவிட முடியும் என்பதாலும் இவ்வாறான தெரிவைச் செய்திருக்கிறார்கள்போல் தெரிகிறது.

எது எவ்வாறோ, தமிழர்களின் வீடுகளை வெளிநாட்டுக் கொள்ளையர்கள் இப்போது இலக்குவைத்திருக்கிறார்கள் என்பதை கடந்த 05, 10 ஆண்டுகளாக மிகக்கூடுதலாக அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இவ்வெளிநாட்டுக் கொள்ளையர்களுக்கு நம்மவர்களில் சிலர்தான் ('சுத்த தமிழர்தான்') வழிகாட்டிகளாகச் செல்கிறார்கள் என்பதும் கண்டறியப்பட்ட திடுக்கிடும் தகவல் ஒன்று. இதனை எத்தனைபேர் எண்ணிப் பார்க்கிறார்கள்? உறைய வைக்கும் பனியில் ஒட்டி, உறைந்து, உருகி, ஓடி ஓடி உழைத்து,'கோ(h)ல் சேல்'க்குக் (whole sale) கொடுப்பதுபோல தாம் கஸ்ரப்பட்டுத் தேடிய உழைப்பைக் கொள்ளையர்களுக்கு 'மொத்த வியாபாரம்' போல கொடுத்துவிடுகிறார்கள் நம்மவர்களில் பலர்.

**துன்பத்திலும் அனுகூலமான குழுவினர்!**

இவ்வாறு கொள்ளைகள் இடம்பெறுவதால் குடும்பங்களுக்கு மிகப்பெரும் துயரும் மிகப்பாரிய பொருளாதாரப் பின்னடைவும், பல குடும்பப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இத்துன்பத்திற்குள்ளும் அனுகூலமான குழு ('advantageous group') ஒன்று இருக்கிறது. அது எது என்றால், கொள்ளையடிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள குடும்பத்தலைவிமார்தான்! இது, முற்றுமுழுதான புத்தம்புதிய 2013ஆம் ஆண்டுக்காக விருது பெறப்போகும் கண்டுபிடிப்பாகக் கூட அமையலாம்!

இப்படிச் சொல்வதற்கான காரணம் என்னவென்றால், வீட்டில் கொள்ளையிடப்பட்டு 03, 04 மாதங்கள் கடந்ததும், வீட்டுத்தலைவி கறையான் அரிப்பதுபோல கணவனிடம் 'அரிக்க'த் தொடங்கி, "இப்பிடியே சும்மா இருந்து என்ன செய்யிறது? வெறும் கழுத்தோட எத்தின நாளைக்குத்தான் திரியிறது? சனம் என்ன நினைக்கும்?

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## புனித வளனார்



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதர்களின் பாதையில்

'சான்றோர்' என்று புனித வளனாருக்குத் திருமறைநூல் மிக உயர்ந்த பட்டம் சூட்டுகிறது. இதன் பொருள்: இறைவன் தனக்கு உகந்தவரைத் தனது புனிதத்தில் சிறந்த முறையில் பங்கேற்கச் செய்கின்றார். மேலும், வளனாரை நீதிமான் என்று அழைப்பதன் மூலம், இறைத்திரு உள்ளத்திற்கு எப்போதும் பணிந்து நடப்பவர் என்றும் பொருள் கொள்ள வேண்டும். இயேசுவின் வளர்ப்புத் தந்தை, கன்னி மரியின் கணவர், திருச்சபை முழுவதுக்கும் பாதுகாவலர். கற்புக்குப் பாதுகாவல், நல்ல படிப்புக்கும் பாதுகாவலர், நல்ல இறப்புக்கும் பாதுகாவல். புனித பெர்னார்து, புனித அவிலா தெரசாள், சியென்னா நகர் புனித பெர்னாடின் ஆகியோர் புனித வளனாரின் பக்தியைப் பரப்புவதில் தலைசிறந்து விளங்கினர்.

"எந்த ஒரு வரமும் எப்பொழுதாகிலும் நான் புனித வளனாரிடம் மன்றாடிக்கேட்டு, கிடைக்காது போனதென்று என்னால் சொல்ல இயலாது" என்றார் புனித அவிலா தெரசாள்.

இவர் கார்மேல் சபை ஒழுங்குகளைத் திருத்தி அமைத்தபின், சீர்திருத்தமாகத் தொடங்கிய மடங்களில் முதல் மடத்திற்குப் புனித சூசையப்பரைப் பாதுகாவலராகத் தெரிந்துகொண்டார்.

கனடா நாடு இந்தப் புனிதரின் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளது.

புனித 23 ஆம் அருளப்பர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் புனித வளனாரின் பாதுகாப்பில் வைத்திருப்பதாக உலகிற்கு அறிக்கை விடுத்தார். மேலும் 23ஆம் அருளப்பர் அடிக்கடி கூறுவார். "கீழ்ப்படியக் கற்றுக்கொள்வது அமைதி காக்கக் கற்றுக்கொள்வது. பேசத் தேவைப்படும்போது குறைவாகவும் அடக்கமாகவும் பேசுவது. இவற்றைத்தான் புனித வளனார் நமக்குத் தருகிறார்."

தேன் சொட்டும் மறையுரை ஆற்றும் ஆற்றல் வாய்ந்த புனித பெர்னார்து புகழ்ந்துரைப்பதைப் பாருங்கள். அவர் வளனாரைப் பழைய ஏற்பாட்டில் காணும் சூசையுடன் ஒப்பிடுகின்றார். "தனது வஞ்சக சகோதரர்களால் விற்கப்பட்டு எகிப்து நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட சூசை, சீடன் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு புறவினத்தாரிடம் கையளிக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு உவமை. புதிய ஏற்பாட்டில் நாம் காணும் வளனார் ஏரோதின் சீற்றத்திற்குத் தப்பித்து ஓடிக் கிறிஸ்துவுக்கு எகிப்து நாட்டில் அடைக்கலம் தந்தார்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு திருத்தந்தை பதவி விலக முடியுமா?

கடந்த பல நூற்றாண்டுகளாக திருத்தந்தையர்கள் பதவி விலகுவது முறையல்ல என்றும் அவர்கள் இறக்கும்வரை திருத்தந்தையர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவி வந்தது. ஆயினும் 1917ஆம் ஆண்டு வெளிவந்த திருச்சபையின் சட்டத் தொகுப்பில் திருத்தந்தையர்கள் பதவிவிலகுவதற்கான சட்டமும் உள்ளடக்கப்பட்டது. இதனை 1975இல் 6ஆம் பவுல் திருத்தந்தையும் 1996இல் 2ம் யோவான் பவுல் திருத்தந்தையும் உறுதிப்படுத்தினர். அத்துடன் 1983இல் மீளமைக்கப்பட்ட திருச்சபைச் சட்டத்தொகுப்பின் 332ம் எண் சட்டத்தின் 2வது பந்தியும் திருத்தந்தையர்கள் பதவி விலகலாம் என்பதை கூறிநிற்கிறது. ஆயினும், ஒரு திருத்தந்தை பதவி விலகும்போது அவர் தெளிவான சிந்தையுடனும் முழுச்சுதந்திரத்துடனும் அதை அறிவிக்க வேண்டியது முக்கியமானதாகும். அதாவது, வற்புறுத்தலின் பேரிலோ அல்லது சுயமாக சிந்திக்க வேண்டிய திறனைத் தாண்டிய நிலையிலோ இப்பதவி விலகல் அறிவிப்பு பொருத்தமற்றதாகும். இங்கு எமது திருத்தந்தை 16ம் பெனடிக்ட் பூரண சிந்தனைத் தெளிவோடும் முழுச் சுதந்திரத்தோடும் தனது பதவி விலகல்பற்றி அறிவித்திருப்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

திருச்சபையின் வரலாற்றில் 16ஆம் பெனடிக்ட் அவர்களுக்கு முன்னதாக நான்கு திருத்தந்தையர்கள் பதவி விலகி



இருக்கிறார்கள். 3ம் நூற்றாண்டில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட காரணத்தால் 5ஆம் பொன்சியன் என்ற திருத்தந்தையும், 5ஆம் நூற்றாண்டில் 5ம் செலஸ்ரீன் என்பவரும், 11ம் நூற்றாண்டில் 9ம் பெனடிக்ட் என்பவரும், 15ம் நூற்றாண்டில் 12ஆம் கிறகோரி என்பவரும் பதவி விலகியுள்ளார்கள். இதுவரை இருந்த 265 திருத்தந்தையர்களில் 16ஆம் பெனடிக்ட் அவர்கள் பதவி விலகும் 5வது திருத்தந்தையாவார்.

# புதிய திருத்தந்தையாக யார் வருவார்?

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் கடந்த பெப்ரவரி மாதம் 28ம் திகதியுடன் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து எல்லோர் மனதிலும் தற்போது மேற்படி கேள்வி எழுந்துள்ளது.

புதிய திருத்தந்தை யார் என்ற கேள்விக்குரிய பதில் தூய ஆவியானவரைத் தவிர வேறு யாருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை. தற்போது உலகமெங்கிருந்தும் 117 கருதினால்மார் திருத்தந்தையாக வருவதற்கு தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல முடியும். இவர்கள் 80 வயதுக்கு குறைந்தவர்களாகவும், புதிய திருத்தந்தையை நியமிக்கும் குழுவின் அங்கத்தவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களிலிருந்து ஒருவரைத்தான் இவர்கள் தெரிவுசெய்ய இருக்கிறார்கள். கருதினால் அல்லாத ஒருவரும் திருத்தந்தையாக நியமிக்கப்படுவதற்கான வழிமுறை திருச்சபைச் சட்டத்தொகுப்பில் காணப்பட்டாலும் அதற்கான வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவு அல்லது அறவே இல்லை என்றுதான் கூறலாம். புதிய திருத்தந்தையாக வரக்கூடியவர்கள் என்று சிலருடைய பெயர்கள் ஊகிக்கப்படுவது வழமையாக இருப்பினும், யாராலும் ஊகிக்கப்படாத ஒருவர்கூட திருத்தந்தையாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. உதாரணமாக முன்னாள் திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் எவ்வித ஊகமுமில்லாமல் தெரிவுசெய்யப்பட்டவர். அத்துடன் தற்போது ஓய்வுபெறும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் முன்கூட்டியே ஊகிக்கப்பட்டவர்களில் ஒருவராவார்.

### ஐரோப்பிய ஆதிக்கம்

திருச்சபையின் வரலாற்றின் முதலாவது திருத்தந்தை ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த பேதுரு. அவருக்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கமே திருத்தந்தை நியமனங்களில் மேலோங்கியிருக்கின்றது. இம்முறை இவ்வாதிக்கம் உடைக்கப்படுமா? ஐரோப்பாவுக்கு வெளியே, அதாவது, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்படுவாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

### எப்போது?

பொதுவாக ஒரு திருத்தந்தை இறந்த பிற்பாடு 15 முதல் 20 நாட்களுக்குள் புதிய திருத்தந்தை தெரிவுசெய்யப்படவேண்டும் என்ற ஒழுங்கு உண்டு. இவற்றுள் இறந்த திருத்தந்தைக்காக 9 நாட்கள் துக்கம் அனுசரிக்கும் நாட்களும் அடங்கும். ஆனால், இம்முறை 16ஆம் பெனடிக்ட் திருத்தந்தை ஓய்வு பெறுவதனால் இந்தத் துக்க தினங்கள் இல்லை. ஆதலால் இன்னும் விரைவாக புதிய திருத்தந்தை தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

### அடுத்த திருத்தந்தை யார்? சில ஊகங்கள்!

இம்முறை புதிய திருத்தந்தையாக நியமிக்கப்படலாம் என்று பின்வருவோர் ஊகிக்கப்படுகிறார்கள் என்பதையும் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

1. அமெரிக்காவின் நியுயோர்க் கருதினால் திமொத்தி டோான் (வயது 63)
2. கனடா நாட்டைச் சேர்ந்த கருதினால் மார்க் ஒலெற் (வயது 68)
3. ஆபிரிக்காவின் கானா நாட்டு கருதினால் பீற்றர் ரூக்சன் (வயது 64)
4. கருதினால் ஆங்சலோ ஸ்கோலா (வயது 71)
5. கருதினால் ஆஞ்சலோ பாஞ்ஞாஸ்கோ (வயது 70)
6. கருதினால் கியோன் பிராங்கோ ரவாசி (வயது 70)
7. தென்னமரிக்காவின் பிரேசில் நாட்டைச் சார்ந்த கருதினால ஒடிட்லோ பேதுரு (வயது 63)
8. பிரேசில் நாட்டைச் சேர்ந்த கருதினால் கோசே பிரஸ்டி அவிஸ் (வயது 65)
9. ஆஜென்ரினா நாட்டைச் சேர்ந்த கருதினால் லியோனார்டோ சாண்றி (வயது 69)
10. கொண்டுராஸ் நாட்டைச் சேர்ந்த கருதினால் ஒஸ்கார் அன்றிஸ் ரொட்றிகஸ் (வயது 70)
11. ஆசியாவின் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கருதினால் லூயிஸ் அந்தோனியோ ராகிள் (வயது 55)
12. அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த கருதினால் டியர் முய்ட் மார்ட்டின் (வயது 67).

மேற்படி பெயர்கள் முன்னுரிமை பெற்றாலும் யாரும் நினையாத ஒருவர் புதிய திருத்தந்தையாக நியமிக்கப்படும் சாத்தியக்கூறு உண்டு என்பது மீண்டும் நினைவிற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

# புதிய திருத்தந்தை எப்படித் தெரிவுசெய்யப்படுகின்றார்?

கருதினால் மன்றத்தில் வாக்குரிமையுள்ள 117 கருதினால்மாரும் வத்திகான் அருங்காட்சியகத்தின் மிகச் சிறந்த காட்சிக்கூடமாக விளங்கும், பிரசித்திப்பெற்ற மைக்கல் ஆஞ்சலோ அவர்களின் கைவண்ணத்தில் உருவான இறுதித்தீர்ப்பு ஓவியம் அமைந்துள்ள சிஸ்ரைன் தேவாலயத்தில் ஒன்றுகூடுவார்கள். அச்சிற்றாலயத்திற்குள் அவர்கள் வைத்து பூட்டப்படுவதால் m 'கோன்கிளேவ்' (CONCLAVE) என்று அழைக்கப்படுகின்றது. புதிய திருத்தந்தையைத் தெரிவு செய்யும்வரை அவர்கள் உள்ளேயே, வெளி உலக தொடர்புகள் ஏதுமின்றி இருப்பார்கள்.

முதல் சில தினங்கள் அவர்கள் ஆழ்ந்த செபத்திலும், தியானத்திலும் ஈடுபடுவார்கள். இந்நாட்கள் மிக முக்கியமான நாட்களாகும். ஏனெனில் புதிய திருத்தந்தைக்கான வாக்கெடுப்பை அவர்கள் தொடங்குவதற்கு முன்னர் தூய ஆவியின் வழிநடத்தலைப் பெற இந்நாட்கள் உதவுகின்றன. பின்னர் அவர்கள் வாக்கெடுப்பில் ஈடுபடுவார்கள். ஏற்கனவே வரையப்பட்டுள்ள ஒழுங்குமுறைப்படி குறிப்பிட்ட ஒருவர் இறுதியான பெரும்பான்மை பெறும்வரை மீண்டும் மீண்டும் வாக்களிப்பு நடைபெற்று, இறுதியாக புதிய திருத்தந்தையை அவர்கள் தெரிவுசெய்வார்கள்.

### வெள்ளைப் புகை

சிஸ்ரன் தேவாலயத்துக்குள் பூட்டப்பட்ட நிலையில் கருதினால்மார் நடாத்தும் புதிய திருத்தந்தை தெரிவை வெளியுலகம் அவதானிப்பதற்காக சிற்றாலயத்தின் கூரையில் இருக்கும் புகைப்போக்கி உதவுகிறது. அப்புகைபோக்கியில் கறுப்புப் புகை வந்துகொண்டிருக்கும். புதிய திருத்தந்தை



தெரிவுசெய்யப்பட்டதும் அப்புகை வெள்ளைப் புகையாக மாறும்.

இதனுடைய வரலாறு என்னவென்றால் முன்னைய நாட்களில் குளிர்காய்வதற்காக உள்ளே எரிக்கப்படும் விறகின் நெருப்பிலிருந்து கறுப்புப்புகை வந்துகொண்டிருக்கும். பின்னர் புதிய திருத்தந்தை தெரிவுசெய்யப்பட்ட பிற்பாடு கருதினால்மார் பயன்படுத்திய வாக்குச் சீட்டுக்களை அந்த நெருப்பில் போடுவார்கள் அப்போது எரியும் வாக்குச் சீட்டுக்களின் புகை வெள்ளை நிறமாக வெளியேறும். அதனைக் கண்டதும் புதிய திருத்தந்தை தெரிவுசெய்யப்பட்டுவிட்டார் என்பதை வெளியேயுள்ள மக்கள் அறிந்து ஆரவாரம் செய்வார்கள். இவ்வழக்கம் இன்றும் உள்ளது. இம்முறையும் வத்திக்கான் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து வெள்ளைப்புகைக்காக காத்திருப்பார்கள். இருப்பினும் கடந்த திருத்தந்தை தேர்வோடு வெள்ளைப் புகை அடையாளத்தோடு வத்திக்கான் பேராலய மணியை ஒலிக்கச் செய்து புதிய திருத்தந்தையின் தெரிவை உறுதிப்படுத்தும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு :
அருட்பணி. எயின்சிலி றொஷான்,
ஆசிரியர், பாதுகாவலன், யாழ்ப்பாணம்

# நம்பிக்கையின் வாயில்

கி. அருளப்பு,
விடத்தல்தீவு, மன்னார்.

கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்திலே அன்னையாம் திருச்சபையின் தலைமை ஆயர் திருத்தந்தை 16ஆவது ஆசீர்வாதப்பர் இவ்வாண்டை நம்பிக்கையின் ஆண்டாக அறிவித்துள்ளார். இதை எம் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு ஏகோபித்து ஏற்றுக்கொண்டு திட்டங்களைத் தீட்டியுள்ளது.

எம் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசப்பு ஆண்டகையின் தலைமையில் இம்மாநாடு இடம்பெற்றது. சென்ற ஆண்டை மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியதை நாம் அறிவோம். இந்த மறைக்கல்வி திருச்சபையின் முழு வாழ்வையும் புதுப்பிக்கும் அதிகாரபூர்வமான கருவியாக இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடலாகாது. எனவே இந்த நம்பிக்கையின் வாயிலை விரிவுபடுத்த நாம் அழைக்கப்படுகின்றோம்.

இறைவார்த்தை வரலாற்றோடு சம்மந்தப்பட்டது. மனித வரலாறு இறைவார்த்தையோடு சம்மந்தப்பட்டது. இறைவெளிப்பாடு உச்சமடைந்ததும் முழுமை பெற்றதும் ஆண்டவர் இயேசுவில்தான்! மனிதன் தன்னைத் தேடி வரவேண்டுமென்பது இறைவனுடைய திட்டம். இறை வெளிப்பாட்டுக்கு மனிதன் கொடுக்கும் பதில்தான் எம்முடைய செபங்கள். இறைவெளிப்பாட்டுக்கு நாம் எப்படி செவிமடுக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் எம் ஒவ்வொருவருடைய விசுவாச வாழ்வும் அமைகிறது.

திருத்துவத்தில் ஒருவரும் முந்தினவரும் அல்ல பிந்தினவரும் அல்ல! ஒருவரில் ஒருவர் பெரியவரும் அல்ல, சிறியவரும் அல்ல. மூவரும் சம நித்தியரும் சரிசமமானவர்கள்! ஆகிலும் மூன்று வஸ்துக்கள் இல்லை. நித்திய வஸ்து ஒன்றே என்பதாகும்!

கடவுளை மனிதன் எவ்வகையில் உருவகித்துக்கொள்கின்றரோ அவ்வகையிலேதான் அவன் தன்னை உருவாக்கிக் கொள்ளுகின்றான். உதாரணமாக ஆண்டவர் யேசுவை மனிதக் கண்ணோட்டத்தில் உருவகித்துக்கொள்வானாக இருந்தால் அவரும் வெறும் மனிதனாகவே இருப்பான். மாறாக அவர் உயிர் உள்ள கடவுள், இறந்தோரிடம் இருந்து அவர் உயிர் பெற்றெழுந்தார் என்று உருவகித்துக்கொள்வானாகில் அவனும் அவரோடு இறந்து உயிர்பெற்றெழுவான். அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளையாகும் உரிமையை அளித்தார் (யோவான் 1:12).

பிரச்சினைகள் நம்மைப் புண்படுத்துவதில்லை. பிரச்சினைகளுக்கு நாம் கொடுக்கும் விளக்கம்தான் நமது மனதைப் புண்படுத்துகின்றது. ஆண்டவரைக் காண்பதற்கு வழிகள் உண்டு. ஆராய்து கண்டறிய முறைகளும் உண்டு. வேண்டுமென விரும்பி நின்றால் மறை நூலும் உண்டு. துரிதமாக செயல்பட நல்மனமும் உண்டு. நெஞ்சத்தில் நிறுத்திவிட்டால் நிலை வாழ்வும் உண்டே! இறையாட்சி வாழ்க்கையும் இறையரசின் வேட்கையும் இறைவாழ்வின் மையமாய் இருப்பதே நம்பிக்கையின் வாயில். அதுவே விசுவாச வாழ்வு!

விசுவாசம் என்பது இல்லாத ஒன்றை நாம் இருப்பாதாக எண்ணி அதை ஏற்றுக்கொள்வது. நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்கு புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை (எபிரேயர் 11.1:2). எமக்கு எது வேண்டுமென ஏங்குவது இறை வேண்டுதல் அல்ல! எது நம்மிடம் இருக்குதென்று தெள்ளத்தெளிந்து தெரிந்து கொள்வதுதான் இறை வேண்டுதல். இது எம் நம்பிக்கை வாயிலின் உச்சநிலை!

ஒருவன் தூய ஆவியாலும் நீரினாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்படஇயலாது (யோவான் 3:5). இறை ஆட்சி ஆவியினால் ஏவப்பட்டது. இறை வார்த்தை அற்றுப்போகும் போது குடிமக்கள் நிலைகுலைந்து போகிறார்கள் (நீதிமொழி 29:18). வார்த்தை உனக்கருகில் உள்ளது, உன் வாயில் உள்ளது. உன் இதயத்தில் உள்ளது என்று உரோமர் 10:8 எடுத்துக் கூறுகிறது.

ஒருமுறை ஒரு குருவுக்கும் அவர் சீடனுக்கும் ஓர் உரையாடல், சீடன் சொன்னான், "இறைவார்த்தையை நான் தினம் தினம் வாசிக்கின்றேன். அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது பெரிய பிரச்சினையாக இருக்கிறது." என்றான்.

குரு சொன்னார், "நான் இறைவார்த்தையை வாசிக்கின்றேன். அதைப்புரிந்து கொள்கின்றேன். அதுதான் எனக்குப்பிரச்சனையாய் இருக்கிறது." இறைவார்த்தையைப் புரிந்துகொண்டால் நாம் நாமாக இருக்க முடியாது; நாம் மாற வேண்டும். கடவுளின் 'செயலை' அவர் திட்டத்தை நமது கையிலெடுத்து அதற்கு மாறாக செயற்பட முனைவது அவ்விசுாவசம். இதைப் பயங்கரவாதம் என்றும் கூறலாம்.


கடவுள் ஆபிரகாமை அழைத்தபோது, "புறப்படு, நான் உனக்கு காட்டும் நாட்டுக்குப் போ" என்று மட்டுமே கூறினார். ஆபிரகாமும் கீழ்படிந்து புறப்பட்டார். கடவுள் ஒவ்வொரு அடியாக அவரை வழிநடத்தினார். ஆபிரகாமும் கானானை அடைந்து சுற்றித்திரிந்தபோது கடவுள் இத்தேசத்தையே உனக்கு உன் சந்ததிக்கும் கொடுப்பேன் எனக்கூறினார். ஆபிர்காமும் அங்கேயே தங்கினார். போ என்றால் போகிறார்! நில் என்றால் நிற்கின்றார்! வா என்றால் வருகின்றார்! இதுவே விசுவாச வாழ்வு. தொடக்க நூல் 12இல் நாம் இதைக் காணலாம். இதுவே நம்பிக்கையின் வாயில்.

ஒருமுறை தந்தைஒருவர் தன் வேலையை தொந்தரவின்றி செய்வதற்காக ஒரு உலக வரைபடத்தை துண்டுதுண்டாகக் கிழித்துவிட்டு திரும்பவும் ஒன்றுசேர்க்கும்படி மகனிடம் கொடுத்தார். இதைப் பொருத்துவது சிறுவனுக்குக் கடினமென அவர் நினைத்தார். ஆனால் ஒரு சில நிமிடத்தில், 'முடிந்தது' என்று சத்தம் கேட்டுத் திடுக்கிட்டார். "இவ்வளவு சீக்கிரத்தில் எப்படி முடித்தாய்?" என்று கேட்டார்.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா விழாச் சிறப்பிதழ்


## அனுதினம் கேட்கட்டும் கல்வாரிக்கதறல்


கல்வாரிக் குரிசினிலே கதறலொலி கேட்டதினால்
காசினியே நடுங்கியது
நல்லாரும் பொல்லாரும் நாணிக்கோணி
நலிந்து மெலிந்து பார்த்தார்கள்
பொல்லானைத் தூக்குதல்போல் குருசினிலே அறைந்தார்கள்
பொல்லாத மனிதர்கள்
எல்லோரும் தொழுதுகொள்ளும் இயேசுபரன்
இறையானார் பலியானார் எமக்காக.

தவக்காலம் என்று சொன்னால் உதட்டளவில்
சொல்லளவில் மட்டும் போதாது
பாவக்கோலம் பூண்டிருக்கும் மனிதருக்காய்
நோன்பிருந்து உடல் வருந்திக் கதறணுமே
மேகம் மழை சொரிவதுபோல் வாரி வழங்கி
ஏழையர்க்கு உதவி செய்யணுமே
காகம் கரையுமுன் அதிகாலை துயிலெழுந்து
ஆண்டவரை நோக்கி மன்றாடனுமே.

உள்ளத்தின் ஆசையெல்லாம்
உலகத்தின் மாயை எல்லாம் துரத்தணுமே
கள்ளமில்லா வாழ்வுபெறக் கணப்பொழுதும் தயங்காது
கல்வாரி நோக்கணுமே
அள்ள அள்ளக் குறையாத நன்னீர்க் கிணறுபோல்
எந்நாளும் மாறணுமே
வெள்ளம்போலக் கல்வாரியின் அன்பு பாய்ந்தோட
வாழ்ந்து காட்டணுமே

புனித சின்னப்பர் பகர்ந்தார் கிறிஸ்துவோடு சிலுவையில்
அறையப்பட்டேன் என்றும்
மனிதனாக வாழ்வதும் பிழைத்திருப்பதும்
மன்னவன் இயேசு என்னுடன் இருப்பதால் என்றும்
இனி வரும் காலம் எல்லாம் பொல்லாப்பு நிறைந்ததால்
தினம் தினம் எம்மைச் சிலுவையில் அறையணுமே
அனுதினம் கேட்கட்டும் கல்வாரிக்கதறல்
அருண்டு எழுந்து புதிதாய் வாழ்வோமே

**போதகர் சீமான் செபமாலை ஜெபதாசன்**
**"சமாதானப் பிரபு இல்லம்",**
**உயிலங்குளம், மன்னார்.**

## விவிலிய, இறையியல் பின்னணியில்
# இயேசுவின் உயிர்ப்பும் நமது உயிர்ப்பும்

கிறிஸ்தவர்களின் அடிப்படை நம்பிக்கைகளுள் முக்கியமானது இறந்து உயிர்த்தல் ஆகும். நம்முடைய நம்பிக்கை அறிக்கையில் மிகவும் முதன்மையானதாக இருப்பது, இறந்த மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தார் என்பதே. இந்த உயிர்ப்பின் நம்பிக்கையின்மேல்தான் கிறிஸ்தவ நம்பிக்கை கட்டப்பட்டுள்ளது. பாஸ்கா என்பது திருச்சபையின் மிகப்பெரிய விழாவாகும். இந்தப் பாஸ்கா விழாவின் அடிப்படையே உயிர்ப்பில்தான் உள்ளது. இந்தக் கிறிஸ்தவ நம்பிக்கையின் வெளிப்பாடாகவே ஒவ்வொரு திருப்பலிக் கொண்டாட்டத்திலும், "இயேசு இறந்தார். இயேசு உயிர்த்தார். இயேசு மீண்டும் வருவார்" என்று நாம் அறிக்கையிடுகிறோம். கிறிஸ்தவ உயிர்ப்பின் பின்னணி என்ன? அதன் விளைவுகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்ன? என்று காண்போம்.

### இயேசுவுக்கு முன் உயிர்ப்பு

உயிர்ப்புப் பற்றிய நம்பிக்கை இயேசுவுக்கு முன்பே யூத மக்களிடையே இருந்தது என்பதை மறக்கமுடியாது. பழைய ஏற்பாட்டுப் பிற்கால பக்திநூல்களில் இந்த நம்பிக்கையை நாம் காண்கிறோம். கடவுளின் அளவற்ற ஆற்றலில் நம்பிக்கை வைத்த இஸ்ரயேல் மக்கள் மனிதர் இறந்தாலும் அவர்களுக்கு மீண்டும் கடவுள் உயிர் கொடுக்க முடியும் என்று நம்பினர். கடவுள் அனைத்தையும் படைத்துப் பராமரிப்பவர். மட்டுமல்ல: உயிர்கொடுப்பவரும்கூட. எனவே இத்தகையக் கடவுள் நீதிக்காகத் துன்புறுத்தப்பட்டுப் போராடி உயிர் துறக்கும் மக்களுக்கு மீண்டும் வாழ்வு கொடுப்பார் என்ற நம்பிக்கை இஸ்ரயேல் மக்களிடையே இருந்தது. (காண்.தானி 12:1-4) அதுமட்டுமல்ல, கடவுளின் திட்டத்திற்கு அடிபணிந்து வாழும் ஒவ்வொருவரையும் அவர் கைவிடுவதில்லை என்ற நம்பிக்கையையும் பிற்கால யூதர்கள் மத்தியில் காண்கிறோம். (காண். 2மக் 7) இந்த நம்பிக்கையில் எழுந்ததுதான் மறுவாழ்வு பற்றிய நம்பிக்கை (காண். எசா 26:7-21, 66:22). சாலமோன் ஞானம் என்ற நூல் இறப்புக்குப்பின் மறுவாழ்வு பற்றிய யூத நம்பிக்கையை வெளிப்படுத்தத் தவறவில்லை (சா.ஞா 3:1-4, 5:15, 6:21).

### இயேசுவின் போதனையில் உயிர்ப்பு

தீர்ப்பு நாள் பற்றிப் பேசும்போதும் (காண். லூக் 11-31-32) நிலைவாழ்வு பற்றிப் பேசும்போதும் (காண்.மாற் 9:43) "இறப்புக்குப் பின் உயிர்ப்பு" என்ற கருத்தை இயேசுக்கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். (மாற் 8:11) "கிழக்கிலும் மேற்கிலும் இருந்து பலர் வந்து ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வர்" (மத் 8:11) என்று கூறும் போதும், "இற்றுப்போகாத பணப்பைகளையும், விண்ணுலகில் குறையாத செல்வத்தையும் தேடிக்கொள்ளுங்கள்." (லூக் 12:33) என்று போதிக்கும்போதும் இயேசுக்கிறிஸ்து இறப்புக்குப்பின் உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கையைத் தெளிவுபடுத்துகிறார்.

உயிர்ப்பு இல்லை என்று வாதித்த சதுசேயர்கள், உயிர்த்தெழுதலைப்பற்றிய கேள்வியை இயேசுவிடம் எழுப்பினார்கள். அத்தருணத்தில் உயிர்ப்பு என்றால் என்ன? என்பதை இயேசு தெளிவுபடுத்துகிறார். "இறந்து உயிர்த்தெழும்போது யாரும் திருமணம் செய்துகொள்வதில்லை. மாறாக அவர்கள் விண்ணகத் தூதரைப்போல் இருப்பார்கள்." (மாற் 12:25). மேலும் தம் பாடுகள்பற்றி மூன்று முறை அறிவித்தபோதும் இயேசு உயிர்ப்பைப்பற்றி குறிப்பிடத்தவறவில்லை (காண்.மாற் 8:31,9:31, 10:33-34). தம் சீடர்களுக்கு அளித்த இறுதி இரவு உணவின்பொழுது, "இறையாட்சி வரும் நாள்" என்பது பற்றி எடுத்துரைத்த இயேசு இறந்தோர் அனைவரும் இறுதித் தீர்ப்பில் உயிர்த்தெழுவர் என்ற கருத்தையும் குறிப்பிடுகிறார் (மாற் 14:25).

### திருத்தூதரின் போதனை

இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்ததை ஒரு தண்டனையாகவும் அவமானமாகவும் அவரது காலத்தில் யூதர்கள் பலர் கருதினர். ஆனால் இயேசு சிலுவையில் இறந்து உயிர்த்தார் என்பது திருத்தூதர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது (காண் 1கொரி 15:3-5: தி.ப 2:22-24). இயேசு சிலுவையில் தமது இறப்பை எதிர்த்துப் போராடி உயிர்த்துவிட்டார். சாவின்மேல் வெற்றிகொண்டார். எனவே சிலுவை என்பது அவமானத்தின் சின்னம் அல்ல: மாறாக அது போராட்டத்தின் சின்னம்: வெற்றியின் சின்னம் (காண். 1கொரி 1: 22-23).

இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை வைத்த கிறிஸ்தவர்கள் அவரோடு சேர்ந்து இறந்தால் அவரோடு உயிர்க்க முடியும் என்று நம்பினர் (காண்.உரோ 6:5). அதுமட்டுமல்ல, மக்கள் இறந்து உயிர்த்து நிலைவாழ்வு பெற முடியும் என்ற கிறிஸ்தவர்களின் நம்பிக்கை இயேசுவின் உயிர்ப்பில் எழுந்த நம்பிக்கையாகும். (1கொரி 15:14) தொடக்க காலத்தில் இருந்தே திருத்தூதர்களும் மற்றச் சீடர்களும் இதை நம்பினர் (1கொரி 15:11 தி.ப 2:32). அதனால்தான் "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் உங்களது நம்பிக்கை பொருளற்றதாயிருக்கும்" என்று பவுல் தெளிவாகவே அன்று எழுதினார் (1கொரி 15:13-14).

இயேசுவின் உயிர்ப்பைப்பற்றி தொடக்கத் திருச்சபையிலேயே பலவிதமான சந்தேகங்கள் எழுந்தன. இயேசு உயிர்த்தார் என்று கூறுவது இறைமக்களின் நம்பிக்கையில் எழுந்த அறிக்கை என்று சிலர் வாதித்தனர். நம்பிக்கைகொண்ட கிறிஸ்தவர்களின் வாழ்க்கை மாற்றம்தான் இயேசு உயிர்த்தார் என்று கூறுவதற்குக் காரணமாகும் என்றும் சிலர் கருதினர். ஆனால் இத்தகைய தவறான கருத்துக்களை எல்லாம் அறிந்த பவுல் தன்னுடைய கடிதங்களில் இயேசுவின் உயிர்ப்பைப்பற்றித் தெளிவாக எழுதுகிறார் (1தெச 1:10 1கொரி 15). உயிர்த்த ஆண்டவரின் காட்சியும் (காண். 1கொரி 15: 5-8, லூக் 24:34) இயேசுவின் உடல் புதைக்கப்பட்ட கல்லறை காலியாக இருந்ததும் (மாற் 18: 1-8 யோவா 20:1-2) இயேசுவின் உயிர்ப்புக்குப் புறச் சான்றாக அமைகின்றன. ஆனால் கிறிஸ்தவ சீடர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் (திப 4:19-20, 5:40-41, 1கொரி 15:13-19, 32) இயேசு உயிர்த்தார் என்ற உண்மைக்கு உறுதியான சான்றாக அமைந்தது.

### தொடக்ககால திருச்சபையின் நம்பிக்கை

இறப்பின்மேல் இயேசு கொண்ட வெற்றிதான் (உயிர்ப்பு) திருச்சபையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைதுள்ளது. உரோமை நகர் கிளமெந்தும் தெர்த்துல்லியன் என்பவரும் இதற்குச் சான்றுபகர்கின்றனர். இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்து திருமுழுக்குப்பெற்று நற்கருணைக் கொண்டாட்டத்தில் இறையனுபவம் பெற்று வாழும் எவரும் இயேசுவோடு இறக்க முடியும் என்று நம்பினர். இதன் பின்னணியில்தான், பாஸ்கா விழாக்கொண்டாட்டம் என்பதே இறப்பிலிருந்து உயிர்ப்புக்குக் கடந்து செல்லும் உண்மையை வெளிப்படுத்தும் விழாவாக அமைந்தது. தொடக்கத் திருச்சபையில் உயிர்ப்புப் பற்றி ஒருசில தவறான கருத்துக்களைக் கூறி வந்த தருணத்தில் எருசலேம் நகர் சிறில், நிசேன் நகர் கிரகோரி, அகுஸ்தீன் போன்றவர்கள் யேசுவின் உயிர்ப்பைப்பற்றித் தெளிவாகவும் உறுதிபடவும் எடுத்துரைத்தனர். இயேசுவின் உயிர்ப்பு மிகப்பெரிய புதுமை என்ற அளவில் எல்லாக் கிறிஸ்தவரும் நம்புகின்றனர். அந்த மாபெரும் புதுமையானது ஒவ்வொரு கிறிஸ்தவரின் வாழ்விலும் அனுபவமாக மாற முடியும் என்பது நமது நம்பிக்கை. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## கொஞ்சம் சிரிங்க

மாணவன் :- 10ஆம் தர தமிழ்ப்புத்தகம் ஒன்று தாங்க.
கடைக்காரர் :- அந்தப் புத்தகம் இல்லப்பா...
மாணவன் :- அப்படி அது இல்லையெண்டா 5ஆம் தரப் புத்தகத்தில் இரண்டு தாங்க (நமக்கு படிப்புத்தான் முக்கியம்)
*எஸ். ஜீவகி, பாலையடி புதுக்குளம், வட்டக்கண்டல்.*

மகன் :- அப்பா ...... இந்த வருடம் என்னால் உங்களுக்கு செலவு வராதப்பா.
தந்தை :- ஏன்ரா செல்லம்?
மகன் :- இந்த முறை என்னை திரும்பவும் அதே வகுப்பில் படிக்கச் சொல்லிட்டாங்க. புதுபுது புத்தகங்கள் வாங்கிற செலவு இல்லைதானே?

..............................................

தாத்தா :- எப்படி பரீட்சை செய்தாய்?
பேரன :- பேனாவால் செய்தேன்
தாத்தா :- வினாத்தாள் எப்படி இருந்தது?
பேரன் :- வெள்ளையாக இருந்தது.
தாத்தா :- என்ன மார்க் வரும்?
பேரன் :- ரீச்சர் போடும் மார்க் வரும்
*ஸ். ஜெயப்பிரியா, சாளம்பன், ஆட்காட்டிவெளி, மன்னார்.*

*மகள்* :- அம்மா! ரீச்சர் இண்டைக்கு எனக்கு மண்டையிலே ஒண்டுமே இல்லண்டு பேசிட்டார்.
தாய் :- அதுக்காகத்தானே ஒவ்வொரு நாளும் உன்ர தலையில் பூவைச்சு அனுப்பிறேன்.

..............................................

மனைவி :- என்னங்க நுளம்பு வலை மாதிரி ஒன்றை வாங்கிற்று வந்திருக்கின்றீர்கள்.
கணவன் :- நீதானே இந்த முறை புதுவருடத்திற்கு காற்றோட்டமான புடவை கேட்டாய்.
*அ. ஜெயப்பிரியா, பெரியகட்டைக்காடு, நானாட்டான்.*

## மன்னா விளம்பரப் பலகை

"நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது பெரிது. உயிரைக்கொடுக்க நண்பன் கிடைப்பது அரிது"
*க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

செயலுக்குத் துணிந்தால் புயலும் பின்வாங்கும்.
கோபம் துன்பம் தரும்; சாந்தம் இன்பம் தரும்.
சுயநலவாதிகள் பேசும் இனிமையான சொற்கள் தமது சுயலாபத்திற்கே.
நிதானமும் விடாமுயற்சியுமே வெற்றிக்கு அடிப்படை.
*- பி. டியூலா, அடம்பன்.*

விசுவாசமாய் இருங்கள், உங்கள் சொல்லுக்கும், செயலுக்கும், நண்பருக்கும்.
*- ஜே. ஆன் சிந்துஜா, பொன்தீவுகண்டல்.*

கண்டித்தலும் தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி.
*- சி. தயன்சி, நடுக்குடா.*

அறியாமை வெட்கப்பட வேண்டிய ஒன்றுதான்.
அறிந்துகொள்ள விருப்பமின்மை அதைவிடப் பெரிய வெட்கக் கேடாகும்.
*தே. அன்ரனி (டிறோன்), பொன்தீவுகண்டல்.*

ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசு இருந்தா வாங்கலாம். அம்மாவை வாங்க முடியுமா? நீயும் அம்மாவை வாங்க முடியுமா? (கேட்ட பாடல்)
*தே. நிதர்ஷினி, கீரி, மன்னார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

## தொடர் கட்டுரை

## அத்தியாயம் – 25

– ஆங்கில மூலம் –

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குரூஸ் FSC

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

# சமாதானத்தைதேடி அடைதல்

வியட்னாம் என்ற சொல்லை கேட்கும்பொழுது ஆயிரமாயிரம் போர்வீரர்களையும் அப்பாவிப் பொதுமக்களையும் பலிகொண்டு நாட்டைத் துண்டாடிய அசிங்கமான யுத்தத்தின் கசப்பான, வெறுப்பான நினைவுகள்தான் நம் மனதில் தோன்றுகின்றன. 60ம் 70ம் ஆண்டுகளில் வட வியட்னாமியர் வியட்கொங்கள் ஹோச்சியின் என்ற தந்திரசாலியான தலைமைத்துவத்தின்கீழ் அமெரிக்க வீரர்களின் உதவியுடன் தென் வியட்னாமியர்களுக்கு எதிராகக் கொடுமையான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

1972ல் அமெரிக்க இராணுவ அதிகாரியான கெப்டன் ஜோன் பிளம்மர் தென் வியட்னாம் கிராமமாகிய ட்ராங்பேங்கில் உள்ள ஒரு புத்தமத விகாரைக்கு நச்சு நீரகக் குண்டைப் பாவிக்குமாறு உத்தரவிட்டான். தவறான அந்தச் செய்தியை அனுப்பியபின் வியட்கொங் கொம்யூனிஸ்டுக்கள் எதிர்நிலைகளில் ஊடுருவி புகலிடம் தேடிக்கொண்டனர்.

அந்தத் துர்அதிர்ஷடமான குண்டு வெடித்தபோது கிம்புக் என்ற சிறுமியும் அவளுடைய ஆறு சகோதர சகோதரிகளும் மற்றும் உறவினர்களும் தங்களுடைய பெற்றோர் பேத்திமார், மாமா மாமியரைப் பின்தொடர்ந்து வீரிட்டுக்கொண்டு தாங்கமுடியாத வேதனையுடனும் வருத்தத்துடனும் அந்த விகாரையைவிட்டு வெளியேறி ஓடினர். அந்த நச்சு நீரகக்குண்டு ஒரு மனிதத்தன்மையற்ற மிகப் பயங்கரமான ஆயுதமாகும். அந்தக் குழப்பத்தன்மையான எரிபொருள் சேலைகளில் பட்டதும் அவை எரிந்து உடம்புகளிலெல்லாம் எரிகாயங்கள் உண்டாகிவிடும்.

எட்டு வயதைச் சேர்ந்த இந்த கிம்புக் என்ற சிறுமிக்கு நெருப்பு பற்றி உடையெல்லாம் எரிந்து பிறந்த மேனியுடனும், கொடிய வலியுடனும் கைகளை விரித்துக்கொண்டு தெருவால் ஓடிக்கொண்டிருந்தாள். அவளுடைய பின்பக்கம் எரிந்து அவளது இடதுகையின் சதை உரிந்து சூட்டுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் வெளியாகிக்கொண்டிருந்தது. அது ஒரு சகிக்கமுடியாத சோகக் காட்சியாக இருந்தது.

நிக்யுட் என்ற ஒருங்கிணைந்த பத்திரிகை நிருபர் அந்த அகோரக் காட்சியை புகைப்படம் பிடித்துவிட்டார். மறுநாள் அவருடைய புகைப்படம் உலகம் பூராவும் செய்திப்பத்திரிகைகளில் பிரசுரமாகிவிட்டது. பின்னர் அந்த மனதில் மதிக்கக்கூடிய புகைப்படத்துக்காக அந்தப் புகைப்பட நிபுணராகிய நிக்யுட் என்பவருக்கு ஒவ்வொரு பிரதான நிறுவனங்களினாலும் பரிசு வழங்கப்பட்டது. அந்தப்புகைப்படம் முழு உலகையும் பிரமிக்கவைத்துவிட்டது.

இந்தப் புகைப்படத்தைப் பார்த்ததும் கப்டன் ஜோன் பிளம்பர் பயங்கரத்துக்குள்ளாகி அவருடைய மனச்சாட்சி அவரைக்குத்தத் தொடங்கியது. அவர் மனஸ்தாபமும், குற்றமும் அடைந்தார். அந்தக்குழந்தையின் மனக்கிலேசத்துக்கும் அழிவுக்கும் தானே காரணம் என்று தனது நண்பன் ஒருவனிடம் நம்பிக்கையாகக் கூறியுள்ளார். அந்த நேரத்தில் இருந்து கப்டன் ஜோன் பிளம்மருக்கு அந்த அசையும் படம் மனத்தை வாட்டிக்கொண்டிருந்தது. எங்கெங்கே சென்றாலும் அந்தப்படத்தைக் கண்டவுடன் மனதில் நிம்மதியற்று அந்த அக்கிரமமான நிகழ்வை எண்ணி தூக்கமற்ற இரவுகளைச் செலவழித்தார். அந்தக் குற்ற உணர்வு அவரைத் தனது இராணுவ நடவடிக்கைகளை கைவிடச்செய்தது.

வருடங்கள் பல உருண்டோடின. அவர் அமெரிக்காவின் வீர்ஜினியாவில் உள்ள மெதடிஸ்த தேவாலயத்தின் மதபோதகரானார். அத்துடன் அந்த கிம்புக் என்ற சிறுமியைக் கண்டுபிடித்து அவளிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்று ஆவலாயிருந்தார். அவள் இன்னும் வியட்னாமில் உயிருடன் இருப்பாள் என்று அவரது மனம் கூறிக்கொண்டிருந்தது. மன்னிப்புப் பெறுவதுதான் அவரது இதயத்துடிப்பின் அவசரமாக இருந்தது.

மறுபக்கம் கிம்புக் தனது தூய அன்னையின் தைரியமான அன்பான சேவையினால் நல்ல குணமடைந்துவிட்டாள். நாளாந்தம் அவள் பைபிளின் நற்செய்திகளைப் படித்து சமாதானம், மன்னிப்பின் சக்திகளின் முக்கியத்துவம் பற்றி அறிந்து செயிக்கோனில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் சேர அவளது உள் மனம் தூண்டியது. 1986ல் அவள் ஒரு அரசாங்க புலமைப்பரிசிலைப் பெற்று ஸ்பானிய மொழியைப் படிக்க கியூபாவுக்குச் சென்றாள். 1992ல் கியூபாவின் ஹவான பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்ற வியட்னாமைச் சேர்ந்த ஹீஜரோன் என்பவரை திருமணம் செய்து கொண்டாள். ஒரு சில வருடங்களின் பின்னர் இருவரும் அகதிகளாக தங்களை விண்ணப்பித்து கனடாவில் புகலிடம் பெற்றனர்.

1996 யூன் மாதத்தில் ஹேதங்டனில் நடைபெற்ற வியட்னாமின் யுத்த நினைவலைகளைப்பற்றி சொற்பொழிவாற்ற கிம்புக் கனடாவில் இருந்து அழைக்கப்பட்டிருந்தாள். அப்படி அழைக்கப்பட்டவர்களுள் கப்டன் ஜோன் பிளம்மரும் தனது மனைவியுடன் சென்றிருந்தார். 24 வருடங்களுக்கு முன் விகாரையில் இருந்து தாக்கப்பட்டு கைகளை விரித்தவாறு, பிறந்த மேனியுடன் தனது கொடூரச்செயலின் காரணமாக ஓடிய அந்தச் சிறுமியை நினைத்து கப்டன் ஜோன் பிளம்மர் கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தார்.



இந்தச் சம்பவத்தில் வரும் புகைப்படத்தின் உண்மையான பிரதி இதுவாகும்.

வியட்னாமிய யுத்தத்தில் ஈடுபட்டோருக்கு சொற்பொழிவாற்ற கிம்புக் மேடையில் ஏறினாள். தற்பெருமையுடனும் மனித மாண்புடனும் உரமாகத் தெளிவாகக் கூறினாள். “நண்பர்களே சமாதானத்திற்கான இந்தக் கூட்டத்திற்கு நான் வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். குண்டைப்போட்ட அந்தக் கப்டனுடன் நான் பேச முடியுமாயிருந்தால் நான் அவருக்குச் சொல்லக்கூடியது நாங்கள் சரித்திரத்தை மாற்ற முடியாது. ஆனால் எதிர்காலத்தில் நல்லவற்றைச் செய்யத் தாங்கள் முயற்சி செய்ய வேண்டும். அவருக்கெதிராக எனக்கு எந்த வெறுப்பும் விரோதமும் இல்லை. நான் எனது நட்பினதும், மன்னிப்பினதும் கரத்தை அவருக்கு நீட்டுகிறேன்.

மனவெழுச்சி மிகுந்த கப்டன் ஜோன் பிளம்மர் அவசரமாக “அன்புள்ள கிம், அந்த மனிதன் நான்தான். நான் உம்மிடம் பிரத்தியேகமாக பேச விரும்புகிறேன்.” என்ற ஒரு குறிப்பை எழுதி ஒரு பாதுகாப்பு அதிகாரியிடம் அதைக்கொடுத்து கிம் வசம் அதைச்சேர்க்கும்படி கேட்டுக்கொண்டார். ஏனென்றால் அவளை அந்தக் கூட்டத்திலே சந்திப்பது முடியாத காரியமாக இருந்தது. ஆனால் கூட்டத்துக்கு வெளியே கப்டன் ஜோன் பிளம்மர் தற்பொழுது 33 வயதையுடைய ஒரு குழந்தையின் தாயாகிய கிம்புக்கைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. முகத்துக்கு முகமாக நீர்மல்கிய கண்களுடன் இருக்கும் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். அங்கே ஒரு சொற்ப நேரம் மௌனம் நிலவியது. “தயவுசெய்து என்னை மன்னித்து விடு கிம். தயவுசெய்து தயவுசெய்து என்னை மன்னித்து விடு” என்று வண. ஜோண் பிளம்மர் அந்த அமைதியினூடே வேண்டிக்கொண்டார். கிம் முன்னேறி அன்பு மிகுதியால் அவரைக் கட்டித்தழுவிக்கொண்டாள். “அவையெல்லாம் சரி. நான் உங்களை மன்னித்துவிட்டேன்” 24 வருடங்களாக இருந்த கசப்பு, நோவு, வேதனை எல்லாம் அந்த மூன்று “நான் உங்களை மன்னிக்கிறேன்” என்ற சக்தி வாய்ந்த சொற்களினால் மறைந்துவிட்டது. சமாதானம் ஒன்றுமை என்னும் அந்தச் செய்தியை முழு உலகத்துக்கும் பரப்பி தற்பொழுது அந்த இருவரின் கைகளும் ஒன்றுசேர்ந்துவிட்டன.

“இந்த உலகத்திலே உள்ள மிகப்பெரிய மிக முக்கியமான விடயம் பார்ப்பதோ, தொடுவதோ அன்றி இதயத்தால் உணர்ந்து கொள்வதே”.

இந்தச் செய்தி 1997 டிசம்பர் 16ம் திகதி சகோதரர் பப்ரிஸ் குரூஸ் அவர்களினால் புனித பிலிப்பு நேரிஸ் தேவாலயத்தில் எழுந்தேற்ற ஆராதனையின் பிரசங்கத்தின் ஒரு பகுதியாகும்.

இன்று நான் யாருடைய மனத்தையாவது நோகச்செய்திருந்தால், ஒரு காலை உடைக்க நான் ஏதுவாய் இருந்திருந்தால், நான் ஏனோ தானோ என்று நடந்திருந்தால் அன்பின் இறைவா மன்னித்தருளும்!

வீணான அல்லது பயனற்ற வார்த்தைகளைப் பேசியிருந்தால், மற்றவர்களின் தேவைகளில், வருத்தங்களில் மறுபக்கம் திரும்பியிருந்தால் அன்பின் இறைவா மன்னித்தருளும்! உம்மிடம் வெளியிட்ட பாவங்களை மன்னித்துவிடும். நான் அறியாத பாவங்களை மன்னித்து விடும். ஓ என்னை வழிநடத்தி, அன்பு செய்து என்னைக் காத்தருளும் அன்பின் இறைவா, ஆமென்! ■

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி- 115

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்களை நாம் 124ம் திருப்பாடலிலிருந்து ஆரம்பிக்கின்றோம். 120ம் திருப்பாடலிலிருந்து 134ம் திருப்பாடல் வரையுள்ள 15 திருப்பாடல்களும் சீயோன் மலைத் தியானப்பாடல் எனத் தலைப்பிடப்பட்டுள்ளன.

சீயோன் மலையும் ஜெருசலேம் தேவாலயமும் ஆண்டவரின் இருப்பிடங்கள் என்று அந்நாட்களில் மக்கள் நம்பினர். கடவுளும் நம்மைப்போன்று ஊன் உடல் கொண்ட ஒருவராக இருக்கின்றார் என்றே மக்கள் நம்பினர். அந்நாளைய இறைஞானம் அவ்வளவே இருந்தது. கடவுள் என்றும் இருக்கின்றார் என்பதை உடலோடு இருக்கின்றார் என்று எண்ணிப்பார்த்தபடியால்தான் அவருக்கு இருப்பிடம் - வாழ்விடம் ஒன்று வேண்டும் என்று எண்ணினார்கள்.

மலைகள் அதன் உச்சிகள் அந்நாட்களில் வியப்புக்குரிய அடையமுடியாத இடங்களாக இருந்தன. ஆகவே காணமுடியாத கடவுளின் வாசஸ்தலங்கள் மலையுச்சிகளாக எண்ணப்பட்டன. இவ்விதமாகவே சீயோன் மலை கடவுளின் வாசஸ்தலமாயிற்று.

இப்பாடல்கள் இறைவனது வாக்குறுதிகளையும் அவரது நெறிப்படி நடப்போர் இறைவனின் பராமரிப்பையும் பாதுகாப்பையும் அடைவர் எனக்கூறுகின்றன. இப்பாடல்கள் அனைத்தும் 3 - 4 திருவசனங்களை மட்டுமே கொண்டுள்ளன.

கடவுளின் நெறிப்படி வாழ்வோரும் அவர்களின் தலைமுறையினரும் கடவுளால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும் அவரின் நெறிகளை பின்பற்றாதவர்கள் கடவுளின் தண்டனைத் தீர்ப்புக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் திரும்பத் திரும்பக் கூறுகின்றன.

**இனி நமது வினாக்களுக்கு வருவோம். இம்மாத வினாக்கள் 124ம் திருப்பாடலிலிருந்து 137ம் திருப்பாடல் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.**

01. ஆண்டவர் நம் சார்பாக இருந்திராவிடில் நமக்கு என்ன நிகழ்ந்திருக்கும்? (மூன்று தருக)
02. ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்துள்ளவர் எப்படி இருப்பர்?
03. 1. ஆண்டவர் வீட்டைக் கட்டவில்லை என்றால் என்னவாகும்?
    2. ஆண்டவர் நகரைக் காக்காவிட்டால் என்னவாகும்?
04. ஆண்டவருக்கு அஞ்சி நடப்போரின் மனைவியர் எப்படி இருப்பர்? அவர் மக்கள் எப்படியிருப்பர்?
05. “உழவர் என் முதுகின்மீது உழுது நீண்ட படைசால்களை உண்டாக்கினார்கள்” இவ்வாக்கியம் கிறிஸ்துவின் வாழ்வில் எந்த நிகழ்வுக்கு முன்மொழியப்பட்டதாக உள்ளது?
06. கீழ்வரும் சிதைந்த வாக்கியத்தை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக அமைக்குக.
    ஆவலுடன்/ விடியலுக்காய்/ நெஞ்சம்/ என்/ என்/ காத்திருக்கிறது/ காவலரைவிட/ காத்திருக்கும்/ ஆம்/ தலைவருக்காய்
07. தாவீதரசன் ஒரு உறைவிடத்தை கடவுளுக்கு உண்டாக்குவது பற்றி கடவுளுடன் தானாகவே செய்துகொண்ட பொருத்தனை என்ன?
08. 132ம் திருப்பாடலில் 3 திருவசனங்கள் மட்டும் உள்ளன. அவை வலியுறுத்தும் கருத்தென்ன?
09. 136ம் திருப்பாடல் கடவுளின் வல்லமைமிகு செயல்களைப் பட்டியற்படுத்தி உறுதிப்படுத்துவது எதை?
10. “எருசலேமே நான் உன்னை மறந்தால் என் வலக்கை சூம்பிப்போவதாக. உன்னை நான் நினைக்காவிட்டால், என் மகிழ்ச்சியின் மகுடமாக எருசலேமைக் கருதாவிட்டால், என் நா மேல் வாயோடு ஒட்டிக்கொள்வதாக” என்று இஸ்ராயேலர் கூறுகின்றனர். ஏன்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 113 இற்கான கேள்விகளுக்கு 30 பேர் விடையளித்திருந்தனர்.**

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி

கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா,
1ம் வட்டாரம், வங்காலை.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. வி. ஆன் சௌமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
2. வி. ஆன் கில்டா, ஜோசவாஸ் நகர், தோட்டவெளி.
3. ம. தர்மிகா, இல-109, பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
4. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
5. எம். தேவி, இல - 118.3, எமில்நகர், மன்னார்.
6. கி. திபிசன், பெரியபண்டிவிரிச்சான், மடு
7. என். ஸ்ரான்லி, 10ம் வட்டாரம், வங்காலை.
8. கி. சுபிர்தன், பெரியபண்டிவிரிச்சான், மடு.
9. பி. பிறின்சி லியோன், அரிப்பு.
10. ஜோ. சுமணா பிகிறாடோ, இல. 201/17, பள்ளிமுனை, மன்னார்.

## புனிதர்களின் பாதையில் .........

10ஆம் பக்கத் தொடர்ச்சி

முன்னைய சூசை அரசனுக்கு உகந்தவராய் நடந்தார். அந்த மன்னனுடைய மனைவியின் பசப்பு மொழிகளால் மதி இழக்கவில்லை. வளனாரோ தம் துணைவியை இறைவனின் தாய் என உரிய மதிப்புடன் நடத்தினார். அவரது கன்னிமையை உணர்ந்தார். அவரது கன்னிமைக்குப் பழுதேற்படாமல் பாதுகாத்தார். முன்னைய சூசை கனவுகளைத் தெளிவுபடுத்தும் திறமை பெற்றிருந்தார். வளனாரின் கனவில் தேவதூதர் தோன்றிக் குழந்தையைக் காத்துக்கொள்ளும் முறையை அறிவித்தார். முன்னைய சூசை உணவுப் பொருட்களைத் தனக்கெனத் திரட்டவில்லை. வளனாரோ “நானே வானின்று இறங்கி வந்த வாழ்வின் உணவு” என்று கூறிய வானின்று இறங்கிய, எப்பெருமான் இயேசுவைத் தமது அடைக்கலத்தில் வைத்துப் பார்த்து மகிழ்ந்தார்.”

***சிந்தனைக்கும் செயலுக்கும்*** : தம் சிந்தையாலும் சொல்லாலும் செயலாலும், மகளிரின் கற்பு மாண்புடன் திகழ உறுதுணையாவோம்.

மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## ஐ.நா. மனித உரிமைகள் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது கைது செய்யப்பட்டு எவ்வித விசாரணையும் இன்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கவும் காணாமற் போனவர்களைப் பற்றிய உண்மைகளைத் தெரிவிக்கவும் இலங்கை அரசை ஐ. நா அவை வற்புறுத்த வேண்டும் என்று இம்மடலில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஐ. நா மனித உரிமைகள் அவை கூறிய முடிவுகளை இலங்கை அரசு எவ்வளவு துாரம் கடைப்பிடித்துள்ளது என்பது பற்றிய நடுநிலையான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இம்மடலில் கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.128

## திருவெளிப்பாடு அதிகாரம் 1 முதல் 22 முடிய

உங்கள் விடைகளை ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | ★ | 02 | | ★ | 03 | | | 04 |
| | ★ | 05 | | | ★ | | 07 | ★ | |
| | 08 | 06 | | 09 | | | ★ | | 10 |
| 11 | | | | ★ | 12 | | | 13 | |
| 18 | | 17 | 16 | 15 | | | | ★ | 14 |
| ★ | 19 | | | | ★ | | 20 | 21 | ★ |
| 24 | | | | | 23 | | | | 22 |
| | | ★ | 25 | 31 | | | ★ | | |
| | ★ | 27 | | | | 26 | ★ | ★ | |
| 28 | | | | ★ | 29 | | ★ | | 30 |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. உனக்குரிய ...................... முடியை வேறு யாரும் பறித்துக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்.
2. ஆனால் .................. அவர்களை வென்றுவிடும்.
5. நகரின் ................... நடுவே பாய்ந்தோடியது.
9. அது .................. அடையாளச் செயல்கள் செய்தது.
11. அரியணை முன் பளிங்கையொத்த தெளிந்த .............. போன்ற ஒன்று தென்பட்டது.
12. படுகுழி வாயிலின் .................... அதற்குக் கொடுக்கப்பட்டது.
15. கோவிலிலிருந்து .................. ஒரு பெரும் குரலைக் கேட்டேன்.
19. .................. அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார்.
23. இனி உன் ................ எழவே எழாது.
24. உலகில் வாழ்வோர்க்கு ...................... வரும்.
27. பெரியதொரு ............... நடுக்கமும் ஏற்பட்டது.
28. .................... நிறைவேறிவிட்டது.
29. அந்தக் கோவிலில் உடன்படிக்கைப் ................ காணப்பட்டது.
31. மண்ணுலகம் என்னும் ............... முற்றிவிட்டது.

### வலமிருந்து இடம்

4. நீ ...................... அடைவது ஏன்?
7. அந்த ஆடை இறைமக்களின் ......................ச் செயல்களே.
17. என்னோடு பேசியவர் ................ என்று பார்க்கத் திரும்பினேன்.
20. நீ விரும்பிய .............. கள் உன்னைவிட்டு அகன்று போயின.
22. அங்கு ..................... இராது.
23. இருப்பினும் உன்னிடம் .................. ஒன்றும் உண்டு
26. மணமக்களின் ....................... ஒலி இனி உன்னகத்தே எழவே எழாது.
30. கடவுளின் மாட்சியே அதன் ...................

### மேலிருந்து கீழ்

1. ஆகவே ...................... மாறு.
2. ஆண்டவராகிய இயேசுவின் ......... அனைவரோடும் இருப்பதாக.
3. அதில் ஒரு ...................... பெயர் பொறிக்கப்பட்டிருக்கும்.
4. இதோ! நான் ...................... வருகிறேன்" என்றார்.
6. உடனே இரத்தத்தோடு கலந்த ..................... மழையும் நெருப்பும் நிலத்தின்மீது வந்து விழுந்தன.
8. அவருடைய கண்கள் தீப்பிழம்புபோலச் ................ விட்டன.
10. அதன்மேல் ஏறியிருந்தவரிடம் ஒரு ................... இருந்தது.
16. அதன்மேல் ஏறியிருந்தவரின் பெயர் ...................
19. உடனே மனிதர் ................... வெப்பத்தால் எரிக்கப்பட்டனர்.
21. பின்பு விண்ணகத்திலிருந்து ஒரு ................... க் கேட்டேன்.
22. ................ நம்மீது அன்புகூர்ந்தார்.
25. ஆனால் ..................... அப்பெண்ணுக்குத் துணை நின்றது.

### கீழிருந்து மேல்

9. ....................... ஒருவர் காணப்பட்டார்.
14. பசும் ....................... எல்லாமே சுட்டெரிக்கப்பட்டது.
16. அக்காலத்தில் மனிதர் .......................த் தேடுவார்கள்.
18. அவரது ...................... நண்பகல் கதிரவன்போல் ஒளிர்ந்தது.
20. விண்ணகத்தில் ஒரு ....................... திறந்திருந்தது.
25. ....................... முழுவதும் இரத்தம்போல் சிவந்தது.
28. அந்த விண்மீனுக்கு ...................... என்பது பெயர்.

## அதிர்வுகள் ............

### 10 ஆம் பக்கத் தொடர்ச்சி

(ஏதோ ஆடையில்லாமல் நிர்வாணத்தோடு திரிவது போலத்தான் கதையளப்பார்கள்!) தாலியும், ஒரு சங்கிலியும், இரண்டு காப்பு என்டாலும் செய்யத்தானே வேணும்!" என்பார்கள் ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தையில்! ஒரு மாதிரி விரும்பியோ விரும்பாமலோ, அரை மனத்துடனோ கால் மனத்துடனோ, கணவன் உடன்படுவதற்கான சைகை அவர்களுக்கு (மனைவிமார்களுக்கு) எப்படியோ கிடைத்துவிடும். இது போதாதா அவர்களுக்கு!! களவு கொடுத்த தாலியை 15 பவுணில் செய்திருந்தால் இப்போது கூறுவார்கள், "செய்யிறதோட 25 பகிணா செய்துவிடுவம். திரும்ப ஒருதடவ செய்யவா போறம்? இப்ப செய்தா, எப்போதாவது எதுக்கும் அது உதவும்தானே..." என இறுதிக்கட்டப் பேச்சின் உச்சக்கட்டத்தில் மிக நிதானமாகக் கூறுவார்கள்!!!

எங்கெங்கிருந்துதான் இவர்களுக்கு இப்படியான பிரகாசமான எண்ணங்கள் (bright ideas) பிறக்கிறதோ தெரியாது! 'வேண்டாம் என்றாலும் கேட்கவா போகிறாள்?' என எண்ணிவிட்டு செம்மறி ஆட்டைப்போல அவரும் (கணவனும்) மேலும் கீழும், வலமும் இடமும் தலையை ஆட்டி அசைத்து பெருமூச்சு விட்டபடியே அடுத்த கட்ட நடவடிக்கைக்கு விழி பிதுங்கி நிற்பார்.

இந்த 'நகைநட்டுக் கலாச்சாரம்'முன்னைய காலங்களிலும் பார்க்க உள் நாட்டில் இப்போது சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது. இனிவரும் காலங்களில் நகைநட்டுப் போடுவதில் நம் வெளிநாட்டுச் சொந்தங்களை, இங்குள்ளவர்கள் மிஞ்சிவிடுபவர்களாக இருப்பினும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. நம் பெண் குலத்தின் கழுத்துகளையும், காதுகளையும், கைகளையும், கைப்பைகளையும் கவனிக்கின்ற போதும், நம் நகர்களில் நகைக்கடைகளின் அதிகரிப்பை அவதானிக்கின்றபோதும் இதன் உண்மை புரியும்.

**கழுத்து நிறைய நகை!**

கழுத்து நிறைய நகை! கை, காது நிறைய ஆபரணங்கள்!!! (கொழுவுவதற்கு வேறிடங்கள் இல்லை, இருப்பின் அங்கும் கொழுவி விடுவார்கள்!). "எதற்காக இப்படி?", எனக் கேட்டால்; சிலர், 'சேமிப்பு', இன்னும் சிலர், 'சிக்கனம்', மற்றும் சிலர், 'பின்னுக்குத் தேவை', வேறு சிலர், 'பிள்ளைகளுக்கு' என்பார்கள். உண்மையில் ஆராய்ந்து பார்த்தால்; இவர்கள் ஏதாவது தொழில் முதலீட்டுக்காக இந்நகைகளைப் பயன்படுத்துவார்கள் என்றால், அப்படியும் செய்ய முன்வரமாட்டார்கள். அப்படியான ஒன்றை கணவன் முன்மொழிந்தாலே வீடு இரண்டுபடக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

நிதானமாக சிந்தனை செய்து பார்த்தால் பின்னுக்கும் இல்லாமல், முன்னுக்கும் பயன்படாமல், பிள்ளைகளுக்கும் போய்ச் சேராமல் கொள்ளையர்கள் கொண்டுபோவதற்கு சேர்த்து வைப்பதுபோலத்தான் சிலரின், 'நகை முதலீடு' அமைந்துவிடுகிறது. இருக்கிற நகைகளை வங்கிகளில் பாதுகாப்பாக வைப்பார்கள், பின்னர் ஏதாவது ஒரு கொண்டாட்டத்திற்குத் தேவை என்று எடுத்துக் கொண்டுவந்து வீட்டில் வைப்பார்கள்.

கணவனுக்குத் தெரிகிறதோ இல்லையோ, நகைகள் வீட்டில் இருப்பது கள்வனுக்குத் தெரிந்துவிடுகிறது. "அதென்ன, மாட்டுக்கு 'வட்டான் சங்கிலி' போர்றது (போடுவது) போல போட்டால் யாருக்குத்தான் தெரியாது!" என இது பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது ஓர் அன்பர் மனம்நொந்து குறிப்பிட்டார். "எவ்வளவுதான் களவு போனாலும் கேட்குதுகளா? நகை எண்டா பேய்கள் மாதிரி நிக்குதுகள். அந்தப் நகைப் பேய்களோட போராட யாரால் முடியும்?" எனக் கூறி முடித்தார் கூட இருந்தவர்.

நகைகள், ஆபரணங்கள் அணியலாம். அணிவதை அழகாக அணிவோம், நாகரிகமாக அணியக் கற்றுக்கொள்வோம். என்ன, கண்டமாதிரி போட்டுக்கொண்டு திரிந்தால் முந்திய நாட்களில் அறுத்துக்கொண்டு போனார்கள், இந்தக் காலங்களிலும் இனிவரும் காலங்களிலும் உடல் பாகங்களை சீவியெடுத்துக் கொண்டு, உதாரணமாக, காதை வார்ந்துகொண்டு போய்விடுவார்கள், கவனம்! (இம்முறை கொஞ்சம், அதிகமாகத்தான் அதிர்ந்திற்றுதில்ல!...

(தொடர்ந்து அ...தி....ரு......ம்.......)

## நம்பிக்கையின் வாயில் .........

### 11 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதற்கு மகன், "அப்பா இத்துண்டுகளின் மறு பக்கத்தில் ஒரு மனிதனின் பகுதிகளைக் கண்டேன். மனிதனை சரியாகப் பொருத்தினேன். உலகப்படம் தானாக வந்துவிட்டது" என்றான்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது மனிதன் சரியானால் உலகமும் சரியாகும் என்பதே. எமது நம்பிக்கை நம்மைச் சுற்றியுள்ள மக்களின் தேவைகளை அவலங்களைக் துன்பங்களைக் காண, செயல்பட நம்மைத் தூண்ட வேண்டும். இங்கேதான் எமது சமூக ஈடுபாடு வேண்டப்படுகின்றது. கிறீஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேட வேண்டும். மற்றதனைத்தும் நமக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் என்று ஆண்டவர் கூறுகின்றார் (மத்தேயு 6:33).

நானே உலகின் ஒளி, நானே உலகிற்கு வழி என்று யேசு கூறுகின்றார். அந்த ஒளி என்ன? அந்த வழி என்ன? என்று நாம் தேடுவோமானால் அது அவருடைய வாழ்க்கை! அது அவருடைய வார்த்தை! அவையே அவ்வொளி அவையே அவ்வழி! அது அன்பு வழி. அது உண்மை வழி. அது நீதி வழி. அது நேர்மை வழி. அதுவே நேர் வழி. இந்த வழி நாம் வாழவேண்டுமென்றால் அவருடைய அருள் வேண்டும். இந்த வார்த்தைகளைக் கேட்டு நம் சிந்தையிலே பதித்து சிந்தனை எழுப்பி செயல்பட வேண்டும். இது சொல்வதற்கு மிகவும் எளிதாக இருக்கலாம். ஆனால் செயற்படும்போது எதிர்ப்புக்கள், முட்டுக்கட்டைகள், எச்சரிப்புக்கள், வேதனை சோதனைகள் ஏராளம் ஏராளம். கிறிஸ்துவோடு இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் அனைவரும் இன்னலுறுவர் என்று 2 தீமோத்தேயு 3:12 எமக்குக் கூறுகிறது. யேசுவின் சீடர்கள் அப்போஸ்தலர்கள் வாழ்வும் இத்தகையதே.

என்னடியைப் பின் தொடர நீ என்ன செய்ய வேண்டும்?
உன்னடிகள் அத்தனையும் நீ ஒழித்து விடவேண்டும்.
உன்னுடமை அத்தனையும் நீக்கிவிட வேண்டும்.
என்னுடமை ஆன பின்பு உனக்கு வேறுடமை என்ன?

எனவே நமது நம்பிக்கையின் வாயிலை விரிவாக்கி அர்த்தமும் ஆழமும்பெற இவ்வாண்டை நன்கு பயன்படுத்துவோமா? "[illegible] தெம்புங்க. இல்லையானால் நமக்கு [illegible]"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 126ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
பா. அனோஜா, அருள்நிறைக் கன்னியர் இல்லம், காத்தான்குளம், வட்டக்கண்டல்.



**இரண்டாம் பரிசு:**
பி. ஆன் லுக்ஷினி சோசை, தோமஸ்புரி, வங்காலை.

**மூன்றாம் பரிசு:**
தேவிகா பத்மராஜா, மடுமாதாவீதி, பெற்றா, மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 90 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 80 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 126ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
2. பீ. கஸ்தூரி, இல - 42, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
3. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
4. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
5. கே. நிறஞ்சனா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
6. கே. டனுசிக்கா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
7. கே. கத்தறீன், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
8. இருதயராசா கிஷான், அச்சங்குளம், நானாட்டான்.
9. எஸ். ஷார்மி பெரேரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
10. யூ. அஜந்தாமேரி, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
11. கு. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
12. செ. சுரேக்கா, இத்திக்கண்டல், அடம்பன்.
13. ப. நிலக்சினி, இத்திக்கண்டல், அடம்பன்.
14. எம். ஜேந்தன், புதுக்கமம், உயிலங்குளம்.
15. ஜே. திலிபா, புதுக்கமம், உயிலங்குளம்.
16. செ. நிரோஷா, சிறுநீலாசேனை, உயிலங்குளம்.
17. செ. நிதர்ஷனா, சிறுநீலாசேனை, உயிலங்குளம்.
18. அருட்சகோதரி மேரி பிரியவதனி,கார்மேல் மடம்,கொழும்பு - 13.
19. அ. சரணியா, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோயில்.
20. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
21. அ. செறோனி, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோயில்.
22. செ. ஜெறோம், தாமரைக்குளம், அடம்பன்.
23. செ. சாள்ஸ் அன்ரனி, தாமரைக்குளம், அடம்பன்.
24. ப. மரியதாஸ், சென்மேரீஸ் வீதி, அடம்பன்.
25. நே. எட்மன் றிச்சட், சிறுக்கண்டல், முருங்கன்.
26. நே. அனோஜா, சிறுக்கண்டல், முருங்கன்.
27. ஜெ. ஜெரினா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
28. செ. கௌசல்யா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
29. க. விஜித்திரா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
30. பூ. சங்கீதா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
31. கா. நிலக்ஷனா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
32. டிலைக்ஷனா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
33. ஜெ. கேசிதா, சாந்திபுரம், மன்னார்.
34. யே. டெனுஷா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
35. யே. அருளம்மா, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
36. பெ. பிரகாசமேரி, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
37. ச. மேரி மரினா, அரும்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
38. அருட். மேரி எமலின், அரும்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
39. ர. டிலக்சினி, அரும்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
40. ச. கீர்த்தனா, அரும்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
41. க. கலிஸ்ரஸ், இல-54 கற்குளம் -02, ஆசிக்குளம்.
42. க. றெஜினோல்ட், இல-54 கற்குளம் -02, ஆசிக்குளம்.
43. ஐ. இருதயமேரி, இல-54 கற்குளம் -02, சிதம்பரபுரம்.
44. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
45. றொ. ஸ்ரெலா, இல - 50, வீரபுரம், நேரியகுளம்.
46. மேலின் தபூஷன், தலைமன்னார் கிராமம்.
47. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
48. ஜே.எ. பிறிற்றோ, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
49. ஜே.எல். லிற்வினியா, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
50. ம. கென்றீசன் சுகந்தினி, பொன்தீவுகண்டல்.

## இல.126 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❋ | உ[06] | ண் | மை | ற | தி[02] | கை | த் | து | ❋ |
| க[24] | ட | வு | ள் | ❋ | நீ[18] | ரை | த | தூ[09] | நி[04] |
| ண | ல் | க[05] | ❋ | ❋ | து | ம[12] | யை | த[25] | லை |
| ண் | கா[20] | ❋ | கெ[11] | டு | இ[23] | றை | வ | ன் | கொ[22] |
| வி[27] | ❋ | யை | டை | வி[26] | ற | நே[13] | பொ[03] | ய் | ❋ |
| ❋ | கு[29] | கை[16] | யி | ல் | கு | ர் | ற் | ❋ | மு[28] |
| ம் | க் | ர் | வை | வ[01] | லி | மை | ❋ | மு[08] | டி |
| ள | ஞு | வ | ன | ள | ❋ | ❋ | வு | க | டு |
| ள் | தூ[10] | ய | க[21] | ம் | ழு | வா[07] | ணி | ம் | மா[17] |
| உ[19] | ❋ | தூ[15] | ரா | ❋ | ப | ன் | து[14] | அ[30] | ❋ |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.127ற்கான முடிவுகளை 2013ம் ஆண்டு ஏப்ரல் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.



**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 06 1958



உதிர்வு 08 03 2012

### கொன்சால் சந்தானாள் (மலர்)

(பொன்தீவுகண்டல், முருங்கன்.)

அன்பான என் தெய்வமே! உன் அன்பை நாம் அறியவும் அனுபவிக்கவும் நீ விட்டுச்சென்ற விழுதுகள் எனக்கு உதவுகின்றன....!

ஓராண்டு ஓடிவிட்டதம்மா! உன் நினைவலைகள் என் நெஞ்சை விரட்டுதம்மா. நீ எப்போது இங்கே வருவாய் என்று ஏங்கித் தவிக்கின்றேன் அம்மா.

தாயாக, நல்ல மனைவியாக, இறுதியில் எனக்கென்று ஓர் மகளாக நீ நடந்துசென்ற பாதையை என் இதயம் என்றும் மறவாது!

*உன் நினைவாள் துயருறும்,*
*உன் பாசம் மிகுந்த கணவர்*
*எ. கொண்சால்,*
*பொன்தீவுகண்டல், முருங்கன்.*

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1 1 1916



உதிர்வு 18 03 1988

### நீக்கிலாப்பிள்ளை பிலிப்புப்பிள்ளை

(கங்காணிதீவு, நானாட்டான்.)

*"நாம் இருந்தாலும், இறந்தாலும் அவரோடு இணைந்து வாழும் வண்ணம் அவர் நம்பொருட்டு இறந்தார்"*

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் சிகரமாய்
விழுதாய் எம்மைத் தாங்கிய நீர்
விதையாகி 25 ஆண்டுகளாகிவிட்டன.
நீர் விட்டுச்சென்ற பண்புகள்,
உலகுள்ளவரை தொடரும்.
உம் நினைவுகள் எம்மை விட்டகலாது.
*என்றும் பாசமுடன் நினைவுகூரும்:-*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தகவல் :- அருட்பணி. பி. யேசுராஜா.

# மன்/ நானாட்டான் மகாவித்தியாலயம் வளர்ச்சிப் பாதை - ஓர் கண்ணோட்டம்

16ஆம் பக்கத் தொடர்ச்சி

இப்பாடசாலையானது நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். 1901ம் ஆண்டு நானாட்டான் அடைக்கல அன்னை தேவாலயத்தின் தென்புறத்தில் கிடுகினால் வேயப்பட்டு கத்தோலிக்க குருக்களினால் ஆரம்பிக்கப்பட்டது. 1940இல் தற்போது பாடசாலை அமைந்திருக்கும் இடத்திற்கு இப்பாடசாலை இடமாற்றப்பட்டது. 1950இல் தரம் 05 வரை இருந்த இப்பாடசாலை தரம் 08 வரை தரமுயர்த்தப்பட்டது. 1960இல் க.பொ.த.(சா/த) கொண்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

1961இல் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின்கீழ் உரோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையாகப் பெயர் பெற்று அரச பொது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. 1972இல் க.பொ.த. (உ/த) வரை தரமுயர்த்தப்பட்டு கலைத்துறை அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தோடு மன்/ நானாட்டான் மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது. 1977இல் க.பொ.த. (உ/த)இல் வர்த்தகத்துறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1972ம் ஆண்டிலிருந்து 1C பாடசாலையாக 2012 வரை இருந்த இப் பாடசாலையானது 01.01.2013 இல் இருந்து கணித, விஞ்ஞான பிரிவுகளை உள்ளடக்கிய 1AB பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. 1AB பாடசாலையாக அதிகாரபூர்வமாக 01.01.2013 இல் தரமுயர்த்தப்பட்டாலும் இடைக்கால அனுமதியுடன் 18.05.2012 இல் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆசிரியர் செல்வி. துவாரகா விவேகானந்தன் (விஞ்ஞானப் பட்டதாரி - B.Sc யாழ் பல்கலைக்கழகம்) அவர்களைப் பெறுப்பாசிரியராகக் கொண்டு 08 மாணவர்கள் இக்கற்கைநெறியை முதற்தடவையாக இப்பாடசாலையின் வரலாற்றில் ஆரம்பித்தார்கள்.



மேற்குறிப்பிட்டவாறு 1901ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இப் பாடசாலை படிப்படியாக அறிவிலும், ஞானத்திலும், ஆன்மீகத்திலும், ஒழுக்கத்திலும், பண்பிலும், விளையாட்டிலும், பௌதீக வளத்திலும் மேலும் பலவிடயங்களிலும் வளர்ச்சியடைந்து வருவதற்கு முதற்கண் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுவதுடன் பாடுபட்டு உழைத்த ஆயர்கள், குருக்கள், துறவிகள், அர்ப்பணித்து பணியாற்றிய பொதுநிலையினர், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித்திணைக்களம், மன்னார் கல்வி வலயம், பெற்றோர்கள், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அபிவிருத்திச் சங்கங்கள் அனைவருக்கும் விசேட நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நானாட்டான் நகரத்தின் மத்தியில் பல கிராமத்தவர்களையும், பல சமயத்தவர்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்துவரும் இப்பாடசாலையை வாழ்த்துவதோடு குறிப்பாக இப்பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக கணித, விஞ்ஞான துறைகளில் கற்கும் மாணவ, மாணவியரையும் அவர்களுக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்களையும் வாழ்த்தி நிற்கின்றோம். மேலும் இப்பாடசாலை தரமான பாடசாலையாக தொடர்ந்தும் வளர்வதற்கு எல்லோரினதும் ஒத்துழைப்பையும், ஆசியையும் அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் அவர்கள் நாடிநிற்கின்றார்.

# புதிய பாப்பரசரை தெரிவுசெய்வது தொடர்பான கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சித்த - ஆயர் அங்கி அணிந்திருந்த மர்ம மனிதன

புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் முகமாக ஆயர் போன்று ஆடை அணிந்து நபரொருவர் திங்கட்கிழமை வத்திக்கானுக்குள் பிரவேசிக்க முயற்சித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோக எதிர்ப்பு செயற்பாட்டாளரான ரால்ப் நபியர்ஸ்கி (ஜேர்மன் நாட்டவர்) தன்னை பஸிலியஸ் என அறுமுகப்படுத்தி ஏனைய கர்தினால்களுடன் கைகுலுக்கிக் கொண்டுள்ளார்.

அவர் ஆறாம் போல் கேட்போர் கூடத்திற்கு வெளியேயுள்ள சதுக்கம்வரை சென்றபோது, அவர் அணிந்திருந்த அங்கிகள் மிகவும் குட்டையாக இருப்பதையும் ஆயர்கள் அணியும் வழமையான தொப்பியை அணியாமல் வேறு தொப்பியை அணிந்திருந்தமையையும் அவதானித்து சந்தேகங்கொண்ட பாதுகாப்பு அதிகாரிகள் விசாரித்தபோது உண்மை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதனையடுத்து அவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

பாப்பரசரை தெரிவுசெய்வது தொடர்பான 115 கர்தினால்கள் கலந்துகொள்ளும் கூட்டத்திற்கு 103 கர்தினால்கள் வருகை தந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றள்ளது.



பொலிசாரினால் பிடிபடுவதற்கு முன்னர் இந்த மனிதன் (இடப்பக்கம் நிற்பவர்) தன்னை ஓர் ஆயர் என அறிமுகப்படுத்திக்கொண்டு இத்தாலிய கர்தினாலுடன் கைகுலுக்கிக்கொண்டார். அவருடன் படமும் எடுத்துக்கொண்டார். அந்தப் படத்தையே இங்கு காண்கிறீர்கள்.

## விவிலிய, இறையியல் பின்னணியில் .....

12ஆம் பக்கத் தொடர்ச்சி

"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை" என்று அறிக்கையிட்ட புனித பவுலின் வார்த்தைகள் (உரோ 6:7) அவருடைய சொந்த நம்பிக்கை மட்டுமல்ல: திருச்சபையின் எல்லாக் கிறிஸ்தவரின் நம்பிக்கையும் ஆகும். அந்த உயிர்ப்பில் நம்பிக்கை வைக்கும்போது அவருடைய மதிப்பீடுகளில் வாழ்ந்து அந்த வாழ்வில் நாம் அடையும் போராட்டத்தில் நிலைத்து நின்றால் அவர் உயிர்த்ததைப்போல் நாமும் உயிர்க்க முடியும்.

இயேசுவின் உயிர்ப்பில் புது இனம் (திருச்சபை) பிறந்தது. புதுயுகமும் (புதுவாழ்வு) தோன்றியது. கடவுள் நம்மோடு வாழ்கிறார் என்பதை இயேசுவின் பிறப்பு நமக்கு உணர்த்தியது போன்று கடவுளின் வல்லமையில் நாம் சாத்தானை முறியடித்து வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கையை இயேசுவின் உயிர்ப்பு நமக்கு அளிக்கிறது. அதனால் இயேசுவின் உயிர்ப்பு என்ற நமது நம்பிக்கை சாட்சிய வாழ்வுக்கான செயற்பாட்டுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

நீதி, நேர்மை, அன்பு, மன்னிப்பு போன்ற இயேசுவின் மதிப்பீடுகளை வாழ்வாக்குவதில் நாம் தீமையை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை உள்ளது. அந்தப் போராட்டமே நமக்கு ஒரு வகையில் சவாலாக அமைகிறது. இருப்பினும் இத்தகைய சாவு அழிவில் முடிவதல்ல, மாறாக நிலைவாழ்வின் தொடக்கம் என்பதை உணர்த்துகிறது. எனவே இயேசுவின் உயிர்ப்பில் செயற்பாட்டுடன்கூடிய நம்பிக்கையைக்கொண்டு இருப்போம். அதனால் நிலை வாழ்வின் முன்சுவையை இந்த உலகிலேயே நாம் அனுபவிப்போம்.

## திருத்தந்தை விடைபெற்றார்....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் ஓய்வுபெற்ற நிலையில் துணைத்தலைவராக இருந்த கர்தினால் டார்சிசோவர்டன் 1.2 பில்லியன் மக்களைக் கொண்ட உரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு தற்காலிக பொறுப்பாளராக பதவி ஏற்றுள்ளார்.

பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பர் தனது வயது முதிர்ச்சியை கருத்தில்கொண்டு பதவி விலகுவதாக அறிவித்தார். இந்நிலையில் கடந்த 600 ஆண்டுகளில் பாப்பரசர் ஒருவர் ஓய்வுபெறும் முதல் சந்தர்ப்பமாக இது பதிவானது.

ஓய்வுக்குப் பின்னரும் அவர் 16ஆம் ஆசீர்வாதப்பர் என அழைக்கப்படுவார் என வத்திக்கான் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அவர் பாப்பரசருக்கான மோதிரம் மற்றும் சிவப்பு நிற பாதணி ஆகியவற்றை கையளிப்பார்.

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ......

3ஆம் பக்கத் தொடர்ச்சி

- செல்வி. அனற்றா நந்தினி ஞானேந்திரன், வ/ செட்டிகுளம் ம.வி.
- செல்வி. செ. அலோஜினி வ/ புதுக்குளம் ம.வி
- திருமதி. ஸ்ரெலா மகாரெட்ணம் வ/ கந்தபுரம் வித்தியாலயம்

**மூத்த ஆலோசகர்கள்**

- திரு. மாட்டீன் டயஸ் - பிரதேச சபைத் தலைவர்,பேசாலை.
- திரு. எஸ். ஜே. றெமிஜியஸ் பீரிஸ், இளைப்பாறிய அதிபர்.

## மாந்தை லூர்து மாதா .....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

இதையடுத்து மாந்தை லூர்து மாதா ஆலயம் தொடர்பான விரிவான கடிதமொன்றினை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை கொழும்பிலுள்ள தொல்பொருள் அகழ்வாராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்திருந்தார்.

தொல்பொருள் அகழ்வாராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இந்த ஆலய நிர்மாணப்பணிகளை மேற்கொள்வதற்கான அனுமதியினை வழங்கிய அதேவேளை, ஆலய நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படும்பொழுது அங்கு கிடைக்கப்பெறும் புராதன தொல்பொருட்களை தம்மிடம் கையளிக்குமாறு கோரியுள்ளார்.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


## தயவுசெய்து கவனியுங்கள்

- மன்னாவை நேரடியாகப் பெறுவோர் பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் கொடுத்து ஒத்துழையுங்கள்.
- தபால் மூலம் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் மறுக்காமல் உங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள். சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித அறிவித்தலுமின்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா



## மேலிருந்து ஓர் அடையாளமா?

### திருத்தந்தையின் பதவி விலகல் அறிவிப்பை அடுத்து வத்திக்கான் பசிலிக்காவைத் தாக்கிய பாரிய மின்னல்

உலகத்தை குறிப்பாக கத்தோலிக்க திருச்சபையை அதிர்ச்சிக்குள்ளாக்கிய செய்தி திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் அவர்களின் பதவி விலகல் செய்தியாகும்.

திருத்தந்தை அவர்கள் தனது இராஜினாமாவை அறிவித்த சில மணி நேரங்களில் வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காவை மிகப்பெரும் மின்னல் ஒன்று தாக்கியுள்ளது. இந்த அசாதாரண நிகழ்வு தொடர்பாக பல ஊகங்கள் ஊடகங்களில் வெளிவந்தன.

இது இறைவனிடமிருந்து வந்த ஓர் அடையாளமாக இருக்கக்கூடும் எனவும், இறைவன் இதன் மூலம் ஒரு செய்தியை திருச்சபைக்கும், உலகத்திற்கும் தெரிவிக்கலாம் என்றும் கருத்துக்கள் கூறப்பட்டன. இன்னும் சிலர் இது தற்செயலான ஒரு நிகழ்வு எனவும் இதைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை எனவும் கருத்துத் தெரிவித்தனர்.




## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான வருடாந்த தவக்காலத் தியானம்







மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தியானம் மார்ச் 1ஆம் திகதி வெள்ளி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி 3ஆம் திகதி ஞாயிறு பகல் மதிய உணவுடன் நிறைவுபெற்றது.

குருமுதல்வர் அருட்திரு. அ. விக்ரர் சோசை அடிகளார் இத்தியானத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த அருட்திரு. சுரேஸ் புஸ்பராஜ் அடிகளார் தியான உரைகளை வழங்கினார்.

இத்தியானத்திற்கான ஆரம்ப உரையை (Orientation Talk) அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார். இத்தியானத்திற்கான அனைத்து ஒழுங்குகளையும் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்திரு. றெஜினோல்ட் அடிகளாரும் மறைக்கல்வி நிலையப் பணியாளர்களும் மேற்கொண்டிருந்தனர்.

தியானத்தின் இறுதி நாள் அன்று மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றினார்.

மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஏறக்குறைய 240 ஆசிரியர்கள் இதில் பங்கேற்று பயனடைந்தனர்.

## மன்/ நானாட்டான் மகாவித்தியாலயம் 1AB பாடசாலையாக தரம் உயர்வு




மன்/நானாட்டான் மகா வித்தியாலயம் 1C பாடசாலையாக இருந்து கடந்த 01.01.2013 இல் இருந்து 1AB பாடசாலையாக தரம் உயர்வு பெற்றுள்ளது. அதாவது பாடசாலையின் கட்டமைப்புத் தரம் 1-13 கணித, விஞ்ஞான பிரிவுகளை உள்ளடக்கியதாக 50- நிலையிற் கட்டளையின்படி கல்வி அமைச்சு வடமாகாணத்தினால் அனுமதி வழங்கி பிரகடனப்படுத்தி தரம் உயர்த்தப்பட்டுள்ளது. நானாட்டான் பாடசாலையின் வளர்ச்சிப் பாதை தொடர்பான விரிவான தகவல்கள் 15ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

## மன்னா விநியோகஸ்தர்களுக்கான ஒன்றுகூடல்

மன்னா பத்திரிகை விநியோகஸ்தர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 - 01.00 மணிவரை 'கலையருவி' எனப்படும் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்டமெங்கும் ஏறக்குறைய 400 பேர் மன்னா பத்திரிகை விநியோகப்பணியில் ஈடுபட்டிருந்தாலும் 20 பத்திரிகைகளுக்கு மேல் விநியோகம் செய்யும் 100 பேர் மட்டில் இந்த ஒன்றுகூடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக மன்னார் மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. அ. இராயப்பு அடிகளார் கலந்துகொண்டார். மன்னா பத்திரிகைக்குழுவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராகிய திரு. மாட்டின் டய்ஸ் அவர்கள் இந்நிகழ்வில் சிறப்புரை ஆற்றினார். இவ்வொன்றுகூடலில் பங்கேற்ற மன்னா பத்திரிகை பணியாளர்களுக்கு மதிய விருந்து அளிக்கப்பட்டதுடன் சிறிய அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன. மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் இந்த நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தார்.











நிகழ்வின்போது மன்னார் மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. அ. இராயப்பு அடிகளார் உரையாற்றுவதையும் ஒன்றுகூடலில் பங்கேற்ற மன்னா விநியோகஸ்தர்களையும் படங்களில் காணலாம்.

## நீங்காத நினைவுகள்

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 25 05 1956



உதிர்வு: 04 03 2012

### அதிரியாம்பிள்ளை நீக்கிலாம்பிள்ளை (நல்லதம்பி)

சாரதி. கமநல சேவைத் திணைக்களம் (ஆத்திக்குளி, முருங்கன்)

பாச மழைபொழிந்திட்ட பெருந்தகையே, உங்கள் புன்னகை கோடி பெறும். ஆறாக் கண்ணீர் வடிக்கும் எங்களுக்கு ஆறுதல் சொல்ல யார் வருவார்? விவசாயத் திணைக்களத்தில் சாரதியாய் அன்பை வாரி வழங்கினீரே! குடும்பத்தின் குலவிளக்காய் பாசத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்தீரே!

எம் உள்ளத்தில் பாசத்தின் ஆறாத வடுவாய் - என்றும் எம் நினைவில் மின்மினியாய் - எம் உள்ளத்திலும் இல்லத்திலும் சிகரமாய் வழிகாட்டியாய் திகழ்ந்த உம் பிரிவு எம் உள்ளங்களை உருகச் செய்கிறது.

உம் பிரிவால் உம் அன்புத் தாய், சகோதரர்கள், உன்னரும் பிள்ளைகளும், பேத்திகளும், மருமகனும் நிதமும் வாடிநிற்கின்றார்கள். ஆண்டொன்று போனாலும் நீங்காது தொடரும் பாசத்தினால் இறை உறவில் ஒன்றிணைய உமக்காய் நாம் இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன் கண்ணீரில் மிதக்கும்,
குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு [illegible] 17ம் இலக்கத்திலுள்ள [illegible] - வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.